

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதினான்காவது அறிக்கை

" சமூக நலம் "

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : - 8 AUG 2014)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதினான்காவது அறிக்கை

"சமூக நலம்"
குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

		பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	i
முன்னுரை	...	iii

பாகம் – 1 அறிக்கை

I	முகவுரை ...	1
II	நிர்வாக அமைப்பு ...	1
III	துறையின் செயல்பாடு ...	1–2
IV	திருமண உதவித் திட்டங்கள் ...	2–6
V	அரசு சேவை இல்லங்கள் ...	6–7
VI	பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் ...	8–11
VII	மகளிர் முன்னேற்றத்திற்கான சமூக பொருளாதாரத் திட்டங்கள் ...	11–14
VIII	சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ...	14–15
IX	தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் ...	16
X	தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ...	16–17
XI	தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் ...	17–19
XII	பாதுகாப்பு இல்லங்கள் ...	19
XIII	தமிழ்நாடு வரதட்சணை தடுப்புச் சட்டம் ...	20
XIV	தொட்டில் குழந்தைத் திட்டம் ...	20–22
XV	முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் ...	22
XVI	சிறப்பு தத்து மையங்கள் ...	23
XVII	தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படும் சேவை இல்லங்கள் ...	23–25
XVIII	பணிபுரியும் பெண்கள் மற்றும் நோய்வாய்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள் ...	25

XIX	மங்களமாலைத் திட்டம்	...	25–26
XX	சென்னை கொசப்பேட்டை அரசு குழந்தைகள் காப்பகத்தை முறையாக பராமரித்தல்	...	27
XXI	குழந்தைத் திருமண தடைச் சட்டம்	...	27–29
XXII	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்	...	29–31
XXIII	புதியவகை கலவை சாதத்தை அனைத்து வட்டாரங்களிலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல்	...	31
XXIV	சத்துணவு மையங்களில் தரமான உணவு வழங்குவதை கண்காணித்து நடவடிக்கை எடுத்தல்.	...	32–33
XXV	சத்துணவு மையங்களில் மின் வசதி செய்ய நவடிக்கை எடுத்தல்	...	33
XXVI	சத்துணவு மையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல்	...	33–34
XXVII	சத்துணவு மையத்திற்கு வருடத்திற்கு ஒருமுறை வெள்ளை அடித்தல்	...	34–35
XXVIII	காலிப் பணியிடங்களை நிரப்புதல்	...	35–37
XXIX	வாகன வசதி செய்தல்	...	37–38
XXX	ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (அ) நிர்வாக அமைப்பு (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் (இ) இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலப்பணிகள் (ஈ) திட்டத்தின் பயனாளிகள்	...	38–39
XXXI	புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்குதல்	...	39–40
XXXII	அங்கன்வாடி மையங்களுக்கு தரமான எடை பார்க்கும் கருவிகள் வாங்கி வழங்கல்	...	40
XXXIII	அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு வழங்கல்	...	41
XXXIV	அங்கன்வாடி குழந்தைகளுக்கு முப் பருவக் கல்வி உபகரணங்கள் வழங்கல்	...	41
XXXV	அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்கல்	...	42
XXXVI	அங்கன்வாடி மையத்தில் உட்புற சுவர்களில் குழந்தைகளுக்கான படங்கள் வரைதல்	...	42
XXXVII	அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கும் இரண்டு செட் வண்ண உடைகள் திட்டத்தை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல்	...	42–43
XXXVIII	அரியாலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை	...	43–44

XXXIX	அங்கன்வாடி மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்குதல்	...	44
XL	அங்கன்வாடி மையங்களில் மின் இணைப்பு வழங்கல்	...	44
XLI	விருதுநகர் மாவட்டம் மீசலூரில் அங்கன்வாடி பின்புறம் கழிவுநீர் வடிகால் அமைத்தல்	...	44–45
XLII	அங்கன்வாடி மையத்திற்கு விளையாட்டு பொருட்கள் வழங்குதல்	...	45
XLIII	மாதவிடாய் சுத்த செயல் திட்டம்	...	45
XLIV	ராஜீவ் காந்தி வளரினம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம்	...	45–46
XLV	இந்திராகாந்தி மகப்பேறு நல உதவித்திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்தல்	...	46
XLVI	சமூகப் பாதுகாப்புத்துறை (அ) துறையின் பணிகள் (ஆ) சார்நிலை அலுவலகங்களின் பணிகள் (இ) சார்நிலை அலுவலகங்கள் மூலம் பயன்பெறுவோர் (ஈ) செயலமைப்பு	...	46–47
XLVII	மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தல் மற்றும் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்க மாநில அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	...	48
XLVIII	குழந்தைகள் நல இல்லங்களில் உறைவிட குடியிருப்பு கட்டுதல்	...	48
XLIX	பள்ளிக் குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாத்தல்	...	48–49
L	சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் குழந்தைகள் நலக்குழு செயல்பட நடவடிக்கை	...	49
LI	இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிர் காப்பகம் அமைத்தல்	...	49–50
LII	பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு தொகை பெற நடவடிக்கை எடுத்தல்	...	50
LIII	முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்தல்	...	50–51

பாகம் – 2

நிகழ்ச்சி பகுதி	...	53–67
இணைப்பு–I	...	68
இணைப்பு–II	...	69
இணைப்பு–III	...	70
பரிந்துரைகளின் சுருக்கம்	...	71–77
குழு கூடிய நாடகள் பற்றிய விவரம்	...	78

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2013–2014)

(2013–ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. $ திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
@திரு. பி.வி. கதிரவன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. பி.ஜி. நாராயணன்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திருமதி த. இந்திராகாந்தி
6. திரு. செ. காமராஜ்
7. டாக்டர் க. கிருஷ்ணசாமி
8. திரு. சு. குணசேகரன்
9. திரு. அர. சக்கரபாணி
10. திரு. ஆர். சாமி
11. திரு. ஆர். சீனிவாசன்
12. திரு. தங்கதமிழ்செல்வன்
13. திரு. ப. தன்சிங்
14. திரு. வ. நீலகண்டன்
15. திரு. ச. பழனிச்சாமி
16. திரு. எஸ்.ஆர். பார்த்திபன்
17. செல்வி கே. பாலபாரதி
18. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

$ 9.12.2013 ஆம் நாள் வரை
@ 26.5.2014 ஆம் நாள் முதல்

முன்னுரை

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 16.5.2013–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர், பொது கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், " சமூக நலம் " மதிப்பீடும் ஒன்றாகும். **"சமூக நலம்"** குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 11 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. **30.5.2014** அன்று சென்னையில், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசு செயலாளர், சமூக நல ஆணையர், சமூக பாதுகாப்பு இயக்குநர் மற்றும் துறையின் இதர அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு **4.8.2014** அன்று குழு ஒப்புதல் அளித்தது. **"சமூக நலம்"** குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், **"சமூக நலம்"** குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

"சமூக நலம்" தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 4.8.2014,
ஆடி 19,
திருவள்ளுவர் ஆண்டு – 2045.

அ.பாப்பாசுந்தரம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

"சமூக நலம்" குறித்த அறிக்கை

முகவுரை :

1. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை புதிய மற்றும் புத்தாக்க திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது. அரசு, அதன் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகளின் மூலமாக, சமுதாயத்தின் விளிம்பில் உள்ள பிரிவினர்களாக கருதப்படும் ஆதரவற்ற பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் திருநங்கைகள் ஆகிய அனைவரையும் வாழ்வில் மேம்படுத்துவதற்கு உகந்த சூழல்களை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தினை 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஆண்டு முழுவதும், 5 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் மூலம் பிறந்தது முதல் 15 வயது வரையிலான குழந்தைகளின் நலனை பேணி அவர்களது வாழ்க்கைத் தரம் உயர அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

II நிர்வாக அமைப்பு

3. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சமூக நலத் திட்டங்களை சமூக நலம், சமூகப் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய மூன்று இயக்குநரகங்கள் வாயிலாக செயல்படுத்தி வருகிறது. சமூக நலத்துறை இயக்குநர் நிலையிலான அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. தலைமையிடத்தில் இயக்குநரின் கீழ் இணை இயக்குநர் நிலையில் இரு அலுவலர்கள், துணை இயக்குநர் நிலையில் மூன்று அலுவலர்கள், நிதிக் கட்டுப்பாட்டாளர், உதவி இயக்குநர் நிலையில் ஐந்து அலுவலர்கள், நிர்வாக அலுவலர், முதன்மை கணக்கு அலுவலர், கணக்கு அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர் பணிபுரிகின்றனர். இவ்வலுவலர்கள், அலுவலகப் பிரிவு பணியாளர்கள் மூலமாக துறையின் நிர்வாகம், மகளிர் நலம், குழந்தைகள் நலம், சிறப்புத் திட்டங்கள், சத்துணவுத் திட்டம், கணக்குகள் ஆகிய இனங்களை நிர்வகித்து வருகின்றனர்.

4. மாவட்ட அளவில் சமூக நல அலுவலர் ஒருவர் மாவட்டந்தோறும் பணிபுரிகின்றனர். இவர்கள் அரசின் பல்வேறு சமூகநலத் திட்டங்கள் பயனாளிகளை சென்றடைவதை கண்காணிப்பதுடன் சமூக நலத்துறையின் நிறுவனங்களான அரசு குழந்தைகள் காப்பகங்கள், உழைக்கும் மகளிர் தங்கும் விடுதிகள், சேவை இல்லங்கள், தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றினையும் கார்நிலை அலுவலர்கள் மூலம் நிர்வகித்து வருகின்றனர். சமூகநல இயக்குநரகத்தின் நிர்வாக அமைப்பினை காட்டும் விளக்கப்படம் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு - I)

III துறையின் செயல்பாடுகள்

5. தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை, பெண்கள், குழந்தைகள், நலிவுற்றோர், ஏழைகள், மூத்தகுடிமக்கள், திருநங்கைகள் போன்றோரின் நல்வாழ்வை உறுதி செய்ய பல்வேறு சமூக நலத்திட்டங்கள் மூலம், குடும்ப நலம், ஊட்டச்சத்து நிலை, கல்வி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த பல திட்டங்களை தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், நலத் திட்டங்களை வகுத்தும் நிதி உதவித் திட்டங்களை அமல்படுத்தியும் வருகின்றது. அரசின் முன்னணி திட்டங்களான முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண்கள் உயர்கல்வி பயில பெற்றோரை ஊக்குவிக்கும் வகையில் 5 வகையான உயர்த்தப்பட்ட திருமண உதவித்தொகையுடன் திருமாங்கல்யம் செய்ய தங்கம் வழங்கும் திட்டம், சிறப்புமிகு சேவை செய்த பெண்களை கவுரவித்து ஊக்குவிக்கும் வகையில் அவ்வையார் விருது வழங்கும் திட்டம், 13 வகை கலவை சாதம் வழங்கும் சுவைமிகு

சத்துணவுத் திட்டம், பள்ளிக்குழந்தைகளுக்கு 4 இணை சீருடைகள் வழங்கும் திட்டம், பெண்களையும் குழந்தைகளையும் பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாக்கும் பலமுனை நடவடிக்கைகள் ஆகியவை பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காத்து முன்னேற்றமடையச் செய்வனவாகும்.

6. சமுதாயத்தில் நலிவுற்றோருக்கான ஒய்வூதிய நலத் திட்டங்களை வகுத்து வருவாய்த் துறை மூலம் இத்துறை செயல்படுத்தி வருகிறது. சமூக நலத்துறை மூலமாக குறைந்த வருமானம் ஈட்டும் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிகள், பாதுகாப்பும் இருப்பிடமும் தேவைப்படும் பெண்களுக்கான சேவை இல்லங்கள் ஆகிய திட்டங்கள் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 2 ஒன்றியங்கள் வீதம் 64 ஒன்றியங்களில் மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் தங்குவதற்காக சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்து, ஆதரவற்ற சிறுவர்களுக்கும் மூத்தகுடிமக்களுக்கும் உணவும், பாதுகாப்பான உறைவிடமும் அளிக்கப்பட்டு வருகிறது. மூத்த குடிமக்கள், பெற்றோர் பெண்கள், குழந்தைகள் ஆகியோரது நலனை காக்கும் வகையில் பல பாதுகாப்புச் சட்டங்களும் விதிகளும் இயற்றப்பட்டு இத்துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களுக்கான நலச் சட்டம், குழந்தை திருமணத் தடைச் சட்டம், வரதட்சணை தடுப்புச் சட்டம், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் ஆகிய சட்டங்களுக்கான விதிகள் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

7. சமூக நலத்துறை, குழந்தைகள், பெண்கள், மூத்தகுடிமக்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் பொருளாதார முன்னேற்றம், சமநிலை, சமூக உரிமைகள் மற்றும் சமூக நீதி பெற்று பயன்பெறும் வகையில் சிறப்பான சேவைகள் செய்து வருகின்றது.

IVதிருமண உதவித்திட்டங்கள்

8. திருமண உதவித் திட்டத்தில் 10 ஆம் வகுப்பு வரை படித்த மகளிருக்கு 4 கிராம் தங்கமும், 25,000 ரூபாய் ரொக்கமும், பட்டப்படிப்பு/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கமும், 50,000 ரூபாய் ரொக்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் எத்தனை பேர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை குழு அறிய விரும்பியது.

9. சென்னையில் 30.5.2014 அன்று நடைபெற்ற குழுக்கூட்டத்தில் இது தொடர்பாக அரசுச் செயலாளர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார் :–

10. திருமண உதவித் திட்டத்தின் மூலம் 2011–2012 முதல் வருடத்தில் 514.3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,19,995 பயனாளிகளும், 2012–2013 ஆம் வருடத்தில் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,48,110 பயனாளிகளும், 2013–2014 ஆம் வருடத்தில் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,37,993 பயனாளிகளும் பயனடைந்திருக்கிறார்கள். கடந்த மார்ச் 31 ஆம் தேதி 11,123 மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன. தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் அவற்றை பைசல் செய்ய இயலவில்லை. இந்த நிதியாண்டில் இதுவரை 25,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. இதில் ஒரு முக்கியமான விஷயம் இந்த திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு 24,000 ரூபாய் என்று இருந்தது. இதற்கான சான்றிதழ் பெறுவதில் மனுதாரர்களுக்கு மிகுந்த சிரமம் இருந்தது. இதற்கான சான்றிதழ் வழங்குவதை எளிமைப்படுத்தும் வகையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தில் தினம் 100 ரூபாய்க்கு குறையாமல் சம்பளம் வழங்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது ஆண்டு வருமானம் எவ்வாறு 24,000 ரூபாய் என்று சான்றிதழ் வழங்க முடியும் என்றும் இந்த வருமான வரம்பை உயர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா என்பதை குழு அறிய விரும்புகிறது.

11. சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில், ஆண்டு வருமானம் ரூ.25,000/– பெறும் கூலி தொழில் செய்பவர்களும் இருக்கிறார்கள்; ரூ.72,000/– ஆண்டு வருமானம் பெறுபவர்களும் இருக்கிறார்கள். அதனடிப்படையில் ரூ.72,000/– ஆண்டு வருமானம் பெறுபவர்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி கிடைக்கும் வகையில், அரசு பரிசீலனை செய்து ரூ.72,000/– ஆண்டு வருமானம் பெறுபவர்களாக இருந்தாலும், அவர்களிடமிருந்தும் வருமானச் சான்றிதழ் பெற்று அவர்களுக்கும் திருமண நிதி உதவியை வழங்க துறை ஆணை வழங்கியுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.24,000/– என்று இருப்பதை ரூ.72,000/– என்று மூன்று மடங்காக அரசு உயர்த்திக் கொடுத்திருக்கிறது. இந்த ஆண்டு நிறைய விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு திருமண நிதி உதவியை வழங்கியிருக்கிறோம் என்று அரசுச் செயலாளர் குழு முன் தெரிவித்தார்

12. மேலும் சென்னை, கன்னியாகுமரி, மதுரை நகர்ப்புறம், திருச்சி நகர்ப்புறம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிகமான பயனாளிகள் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று அரசுச் செயலாளர் குழுவிடம் விளக்கினார்.

13. 2013–2014இல் தாலிக்கு தங்கம் வழங்கும் சிறப்புத் திட்டத்தின் மூலம் **1,37,993 விண்ணப்பங்கள்** தீர்வு செய்யப்பட்டு, **11,123** மனுக்கள் மட்டும் நிலுவையில் உள்ளதையும் இந்த நிதியாண்டில் **25,000 விண்ணப்பங்கள்** நிலுவையில் உள்ளதையும் குழு அறிகிறது. **இவ்வாறு நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை ஆய்வு செய்து அனைத்து பயனாளிகளும் பயன் பெறும் வகையில் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.**

14. இந்த திருமண நிதி உதவி திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் பயனடைந்திருக்கிறார்களா என குழு மேலும் துறையிடம் கேட்டது.

15. இதற்கு அரசுச் செயலாளர் கிராமம் மற்றும் புறநகர்ப் பகுதியிலுள்ள மக்கள் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைந்திருக்கிறார்கள் என்று குழுவிற்கு விளக்கினார்.

16. திருமண நிதி உதவி பெறுவதற்கான விண்ணப்பங்களை குறிப்பிடப்பட்ட கால அளவினை கடந்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் விண்ணப்பித்தால், அதனை துறை அதிகாரிகள் வாங்க மறுப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். பொது மக்களிடையே உரிய காலத்திற்குள் விண்ணப்பத்தினை துறையில் சமர்ப்பிக்கவேண்டுமென்று விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு துறையிடம் தெரிவித்தது.

17. இதற்கு சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில், அரசுச் செயலாளர், குழு சொல்வது மிக, மிக சரியான கருத்து. இதற்கிணங்க அதற்கான விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டு, தொலைக்காட்சிகளின் மூலமாக ஒளிபரப்பப்படுகிறது.

18. இரண்டாவதாக, ஆங்காங்கே உள்ள சமூக சேவகர்கள், இத்திட்டத்தின்கீழ் திருமண நிதி உதவி பெற விரும்புகிறவர்கள், திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டுமென்பது அரசின் விதிமுறை என்பதை பொது மக்களிடையே வலியுறுத்துகின்றனர். அதுமட்டுமல்லாமல், தற்போது எல்லா திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவாளர் திருமணத்தை பதிவு செய்வதற்கு 30 நாள் நோட்டீஸ் கொடுக்கிறார். இதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லையென்றால், திருமணம் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. திருமண நிதி உதவி பெறுவதற்கு திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டுமென்ற விதிமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்று குழுவிடம் தெரிவித்தார்.

19. மேலும், திருமணத்திற்கு ஒரு நாள் முன்னதாகக்கூட அல்லது அன்று காலையில் விண்ணப்பம் கொடுத்து, அது கணினியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால்கூட, அவர்களுக்கு திருமண நிதி உதவி கிடைக்கும் என குழுவிடம் விளக்கினார்.

20.திருமண நிதி உதவித் திட்டங்கள்மூலம் உதவி பெறுவதற்குரிய விண்ணப்பங்களை உரிய காலத்திற்குள் துறையிடம் சமர்ப்பிக்கவும் அதனுடைய வழிவகை மற்றும் விதிமுறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த துறை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

21. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் தாலிக்கு தங்கம் வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் தற்போது துறையிடம் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது என்றும் அதற்குக் காரணம் என்ன என்பதை குழு அறிய விரும்பியது.

22. சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில், ஒவ்வொரு காலாண்டிற்கும் தேவையான தங்கத்தைத்தான் வாங்கி வைக்கின்றோம். ஒரு வருடத்திற்குத் தேவையான தங்கத்தை மொத்தமாக வாங்கி வைக்க இயலாது என்று அரசுச் செயலாளர் பதிலளித்தார்.

23. மேலும், முதலில் இந்தத் திட்டம் தொடங்கும்போது பெண்கள் 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் அவர்களுக்கு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கலாம் என்பது திட்டத்தின் ஆரம்பம். பின்னர், அவர்கள் பள்ளியில் 10 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி அல்லது தோல்வி பெற்றதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்; தொலைதூரக் கல்வி மூலம் 10 ஆம் வகுப்பு படித்து தேர்ச்சிப் பெற்றதற்கான சான்றிதழ் இருக்க வேண்டும் என்பது விதிமுறை. பெண்கள் மேலும் படித்து கல்வியில் உயர வேண்டுமென்பதற்காக, பட்டதாரி பெண்களுக்கும் திருமண நிதி உதவி வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அரசு பட்டதாரி பெண்களுக்கும் திருமண நிதி உதவியாக ரூ.50,000/–மும், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்க நாணயமும் வழங்கலாம் என்று அறிவித்தது. நிதி உதவியாக ரூ.50,000/– என்று அறிவித்தபோது கிட்டத்தட்ட 30,000 பெண்கள் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, இதற்கான நிதி ஒதுக்கீடு கூடுதலாக தேவைப்பட்டதால் நிதி ஒதுக்கீடு ரூ.250 கோடி என்று இருந்ததை ரூ.750 கோடியாக அரசு உயர்த்தியது என குழுவிடம் அரசுச் செயலாளர் விளக்கினார்.

24. கிராமத்தில் ஒரு வீட்டில் ஒரு பெண்ணுக்குத்தான் திருமண நிதி உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. ஒரே வீட்டிலே இருக்கக்கூடிய இரண்டு பெண்களில், முதல் பெண் 10 ஆம் வகுப்பு படித்தவருக்கு ரூ.25,000/–மும், 4 கிராம் தங்கமும் வாங்கிவிட்டால், இரண்டாவது பெண் பட்டம் படித்திருந்தாலும் குடும்பத்தில் ஒருவர் மட்டுமே பயன்பெற முடியும் என்பதால் இரண்டாவது பெண்ணுக்கு கிடைப்பதில்லை. ரூ.25,000/–மும், 4 கிராம் தங்கமும்தான் கிடைத்திருக்கிறது. இந்த மாதிரியான நிகழ்வில் இரண்டாவது பெண்ணுக்கும் நிதி உதவி கிடைக்க வழி வகை ஏதேனும் உள்ளதா என்பது குறித்து குழு அறிய விரும்பியது.

25. இதற்கு அரசுச் செயலாளர், இது சரியான கருத்து. ஏற்கெனவே ஒரு கூட்டத்தில் இது குறித்து விவாதித்திருக்கிறார்கள். திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ், ஒரு குடும்பத்தில் ஒரு பயனாளிக்குத்தான் நிதி உதவி வழங்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு கொடுக்கும்போது ஒரே குடும்பத்தில் இரண்டு பயனாளிகளுக்குக் கொடுக்க முடியாது. இரண்டாவது பெண் பட்டப்படிப்பு முடித்திருந்தால் அவர்களுக்கும் நிதி உதவி வழங்கலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். அவ்வாறு செய்யும் நேர்வில் அதற்காக மட்டும் ரூ.400 கோடி கூடுதல் நிதி தேவைப்படுகிறது என குழுவிற்கு தெரிவித்தார்.

26. ஒரு குடும்பத்தில் ஒரு பயனாளிக்குத்தான் நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்று திட்டத்தில் உள்ளது. இதனால் தகுதி இருந்தாலும் ஒரே குடும்பத்தில் இரண்டு பயனாளிக்கு வழங்க முடியாது. இரண்டாவது பெண் பட்டப்படிப்பு முடித்திருந்தால் அவர்களுக்கும் நிதி உதவி வழங்கலாம் என்று அரசுக்கு துறை பரிந்துரை செய்துள்ளதை குழுவும் பரிந்துரை செய்கிறது.

27. ஏழை விதவையர் மகளின் திருமணத்திற்கு உதவிடும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் வரப்பெற்ற 8,594 விண்ணப்பங்களில் 5,608 பயனாளிகளுக்கு திருமண நிதி உதவித் தொகை வழங்கப்பட்ட விவரம் தரப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில், இதுவரை எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை குழு அறிய விரும்பியது.

28. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் முழுமையடைவதில்லை. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் விண்ணப்பம் செய்யும் நபர்களுக்கு இருப்பதில்லை. எனவே, திட்டம் முழுமையடைவதில்லை. அவர்களுக்கு குறிப்பிடப்பட்ட கல்வித் தகுதி இல்லையெனில் திட்டத்தின் பயனை வழங்க இயலாது. இத்தகைய காரணத்தால் அவர்களுக்கு திட்டத்தின் பயன் கிடைக்காமல் போய்விடுகிறது என்று அரசுச் செயலாளர் குழுவிடம் பதிலளித்துள்ளார்.

29. இது குறித்து துறையிடம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின்மூலம் உதவித்தொகை வழங்க விண்ணப்பங்களை பெறும்போது, பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியானவற்றை பார்த்து வடிகட்டி விண்ணப்பங்களைப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென குழு வலியுறுத்தியது.

30. இதன் தொடர்பாக அரசுச் செயலாளர் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்திற்கான உதவித் தொகை பெறுவதற்கு 100 சதவிகித விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கே நேரடியாக வருகின்றன. அவ்வாறு விண்ணப்பங்கள் வந்த பிறகு அவற்றை சரிபார்க்கிறோம். ஏற்கெனவே இத்திட்டத்தின்மூலம் இவர்களுக்கு பலன் கிடைத்திருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்து அதன் பிறகே விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கிறோம் என்று குழுவிற்கு தெரிவித்தார்.

31. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின்மூலம் உதவித் தொகை பெறுவதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் 145 விண்ணப்பங்கள் பெற்றதாகவும், பெறப்பட்ட 145 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொண்டதாகவும் ஆனால், தேனி மாவட்டத்தில் 411 விண்ணப்பங்கள் பெற்றதாகவும் அவற்றில் 211 விண்ணப்பங்களை மட்டும் ஏற்றுக்கொண்டதாகவும் இதற்கான காரணம் என்ன என்பதை துறையிடம் குழு அறிய விரும்பியது.

32. சென்னையில் நடந்த கூட்டத்தில் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின்மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 145 விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அங்கு கல்வி அறிவு பெற்றவர்கள் அதிக அளவில் இருப்பதால், அவர்கள் விண்ணப்பங்களை சரியாகப் பூர்த்தி செய்து எந்தக் குறைபாடுகளும் இல்லாமல் விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே, விண்ணப்பித்த அனைவருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கம் அளித்தார்.

33. துறை விண்ணப்பங்களை பெறும்போது சரியாகப் பூர்த்தி செய்யாத, தகுதியில்லாத விண்ணப்பங்களை ஆரம்பத்திலேயே ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொண்டால் அது சரியாக இருக்கும். மேலும், காலதாமதமின்றி தேவையான சான்றுகள் மற்றும் அனைத்து விவரங்களும் கேட்டுப் பெற்று நிதி உதவி கிடைக்க உரிய நடவடிகை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

34.சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் திட்டத்தின்மூலம் விண்ணப்பம் செய்து உதவி தொகை பெறுவதற்கு விழிப்புணர்வை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் பட்டப் படிப்பு படிக்காதவர்களுக்கு ரூ.25,000/–மும், பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு ரூ.50,000/–மும் கொடுப்பதால், பட்டதாரிப் பெண்கள் இந்தத் திட்டத்தில் உதவித் தொகை பெறுவதற்கு விண்ணப்பித்தால் அவர்களுக்கு

முன்னுரிமைக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். இதன் மூலம் அதிக அளவில் பெண்கள் படித்து பட்டம் பெறுவதற்கு வழி ஏற்படுகிறது. எனவே, பட்டதாரிப் பெண்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து, அதிக அளவில் பட்டதாரிப் பெண்களை உருவாக்க முயற்சி செய்கிறோம் என குழுவிற்கு அரசுச் செயலாளர் தெரிவித்தார்.

35. படிப்பறிவு பெறாமல் பெண்கள் வீட்டிலே இருக்கக்கூடாது என்பதற்காகவும் அவர்கள் படித்து பட்டம் பெற வேண்டும் என்பதற்காகவும் இந்தத் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் படித்து பட்டம் பெற்ற பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும், 4 கிராம் தங்கமும் கிடைக்கும்போது பெண்களுக்கு பட்டப் படிப்பு படிக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது என்று குழு துறையிடம் தெரிவித்தது.

36. இது தொடர்பாக கடந்த ஆண்டுகளில் பார்க்கும்போது 2013–2014 ஆம் ஆண்டில் 44 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின்மூலம் 216 பட்டதாரிப் பெண்கள் பயனடைந்திருக்கிறார்கள். அதாவது 39 சதவிகிதம் பயனடைந்திருக்கிறார்கள் என்று அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

37. 'தாலிக்கு தங்கம்' வழங்கும் திட்டத்தில் 2001 இன்படி, வறுமைக் கோட்டிற்குக் கீழே மனுதாரர் பெயர் இருக்கிறதா என்று விண்ணப்பம் கொடுக்கும் மக்களிடம் அதிகாரிகள் கேட்கிறார்கள் என்றும் அப்படி இருந்தால் மட்டுமே அந்தத் திட்டத்தில் மனுதாரரை இணைப்போம் என்றும் கூறிவிடுகிறார்கள். திருமண உதவிபெற குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/– என உயர்த்தியது குறித்து மக்களிடம் சரியான விழிப்புணர்வு ஏற்படவில்லை என்றுதான் குழு கருதுகிறது.

38. இதைப் பொறுத்தவரையில், வருவாய்த் துறைதான் சான்றிதழ் கொடுக்கிறது. திருமண உதவிகளைப்பெற குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/– என்று வருவாய்த் துறை சான்றிதழ் கொடுத்துவிட்டால் போதும். வேறு எதையுமே எதிர்பார்க்கமாட்டார்கள். மீண்டும் ஒருமுறை சுற்றறிக்கை கொடுக்க வேண்டும். வருவாய்த் துறை சான்றிதழ் கொடுத்தும் அதற்கு உதவித் திட்டம் பெறாமல் இருந்தால் சொல்லுங்கள். அந்த அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கிறோம். இதுபற்றி 4, 5 முறை கூட்டம் நடத்தியிருக்கிறோம். சான்றிதழ் வழங்குவது பற்றி வருவாய்த் துறையிடமும் பேசியிருக்கின்றோம் என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

39. அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ரூ.72,000/– என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

V அரசு சேவை இல்லங்கள்

40. 7 அரசு சேவை இல்லங்கள் மூலம் பயனடைந்த பயனாளிகள் இருக்கிறார்களா? அல்லது குறைவாக இருக்கிறார்களா என்பது குறித்து துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

41. இதற்கு அரசுச் செயலாளர், 7 அரசு சேவை இல்லங்களில் ஒப்பளிக்கப்பட்ட இடத்தை விட குறைவாகத்தான் இருக்கிறார்கள். இதிலே மூன்று வகை பிரிவினர் இருக்கிறார்கள். அதாவது 10 வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகள், 18 வயதுள்ள பெண் குழந்தைகள், 40 வயதுள்ள ஆதரவற்ற மகளிர். இந்த இல்லங்களில் தங்கியிருப்பவர்களுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை அதிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று குழுவிடம் தெரிவித்தார்.

42. பொருளாதார ரீதியாக பின்னடைந்தவர்களிடமிருந்து அதிகமான அளவில் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றதா? அப்படி வரப்பெற்ற விண்ணப்பங்களில் தகுதியில்லாத விண்ணப்பங்கள் என்று சொல்லி தங்குவதற்கு சேவை இல்லங்களில் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா? சேவை இல்லங்களில் தங்கியிருப்பவர்களுக்கு உயர் கல்வி, தொழிற் பயிற்சி பெறுவதற்கான செலவினத்திற்கு ஏற்றவாறு பயனாளிகள் இருப்பதற்கு இந்தத் துறை என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை குழு அறிய விரும்பியது.

43. இந்த பயனாளிகள் மிகவும் பாக்கியம் பெற்ற பயனாளிகள். அவர்களுக்கான இட ஒதுக்கீடு இருக்கிறது. இட ஒதுக்கீட்டை பயன்படுத்துவோர் குறைவாக இருக்கிறார்கள். அதாவது சமுதாயத்தில் ஆதரவற்றோர் குறைவாக இருக்கிறார்கள். இவர்களில் உயர் கல்வி பெறுவோர் 153 பேரும், தொழிற் பயற்சி பெறுவோர் 375 பேரும் இருக்கிறார்கள். இவர்களுக்கு 750 ரூபாய் உணவு சலுகை கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தின்மூலம் வாழ்க்கையில் ஒரிருவர் மருத்துவத் துறையில் பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றிருக்கின்றார்கள் என அரசுச் செயலாளர் குழுவிற்குத் தெரிவித்தார்.

44. இந்த 7 சேவை இல்லங்களைத் தவிர மேலும் அரசு சேவை இல்லங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க துறையிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என குழு துறையிடம் கேட்டது.

45. 2013–2014 ஆம் நிதியாண்டில் பெரம்பலூர், கிருஷ்ணகிரியில் அரசு சேவை இல்லங்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. பெரம்பலூரில் பணிகள் நிறைவு பெறும் நிலையில் இருக்கின்றது. கிருஷ்ணகிரியில் எல்லாப் பணிகளும் முடிந்துவிட்டன. வாடகை கட்டிடத்தில் அரசு சேவை இல்லம் செயல்பட உள்ளது என்றும், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் இதுசம்பந்தமான பணிகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. விரைவில் அரசு சேவை இல்லங்கள் அங்கு துவங்கிவைக்கப்படும் எனவும் அரசுச் செயலாளர் குழுவிடம் பதிலளித்தார்.

46. 2013–2014இல் கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் சொந்த கட்டிடங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்படுவதற்கு துறை விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

47. தாம்பரம் அரசு சேவை இல்ல வளாகத்தில் இடை நிலை ஆசிரியர் பயிற்சி மாணவிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் துயிர்க்கூடம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுவிட்டதா என குழு துறையிடம் கேட்டது.

48. இதற்கு துறையின் அரசுச் செயலாளர் ஒரு கோடி ரூபாய் செலவில், பொதுப் பணித் துறையின்மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதற்குள் தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலுக்கு வந்ததால் அப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள இயலாமல் போய்விட்டது. அந்தப் பணிகள் விரைவில் அதாவது 11 மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்று குழுவிற்கு பதிலளித்தார்.

49. தாம்பரம் அரசு சேவை இல்ல வளாகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாணவிகளுக்கான துயிர்க்கூடம் அமைக்கும் பணியை துரிதப்படுத்தி குறிப்பிட்ட 11 மாத காலத்திற்குள் நிறைவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், இதுகுறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது.

VI பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள்

50. தமிழ்நாட்டில் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சென்னையில் 2, புதுக்கோட்டை, மதுரை, கடலூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஓசூர் போன்ற ஊர்களில் செயல்படுகின்றன. மேலும், அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான இடவசதி தேவை இருக்கின்ற சூழ்நிலையில், அதற்கு துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என குழு துறையிடம் கோரியது.

51. இது தொடர்பாக இந்த நிகழ்வில் ஆய்வு செய்யப்பட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. சென்னை மாநகரத்திலே 6 இடங்களில் அமைக்கலாம் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது என்று அரசுச் செயலாளர் குழுவிடம் விளக்கினார்.

52. மேலும், 2013–2014 ஆம் நிதியாண்டில் துறைமூலம் கூடுதலாக 20 விடுதிகள் அமைக்கவும் ஆணை பெறப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் கோரிக்கை வைத்ததின்பேரில், 2014–2015 ஆம் ஆண்டிலே 14 விடுதிகள் துவக்குவதற்கு அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் துவங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். சென்னையில் மட்டும் 6 விடுதிகள். காஞ்சிபுரம், திருவள்ளூர் போன்ற பெருநகரப் பகுதியை ஒட்டியுள்ள பகுதிகளில் கூடுதலான விடுதிகள் அமைக்கவும், அதற்குண்டான முயற்சிகளும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

53. துறை மூலம் கூடுதலாக 20 விடுதிகள் 13 மாவட்டங்களில் துவங்கிட அரசாணை பெறப்பட்டு, இதனடிப்படையில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் தஞ்சாவூர், திருப்பூர், வேலூர், கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் துவங்கப்பட்டு இருக்கின்றன என்பதை குழு அறிகிறது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவக்கினால் நன்றாக இருக்கும் என்றும் இதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு துறையிடம் தெரிவித்தது.

54. மேலும் இதேபோல அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் எங்கெங்கெல்லாம் விடுதிகளின் தேவை அதிகமாக இருக்கின்றனவோ அங்கெல்லாம், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட வேண்டும் என்றும், இத்திட்டம் பணிபுரியும் மகளிருக்கு பாதுகாப்பாக இருக்கும் என்றும் அவ்வாறு கட்டுதல் அரசுக்கு கூடுதல் செலவாக இருக்க வாய்ப்பில்லை என்றும் தனியார் தவறுதலாக பயன்படுத்தவும் வாய்ப்பு இல்லையென்றும் குழு தனது கருத்தினை துறையிடம் தெரிவித்தது.

55. இது குறித்து குழுவிடம் ஒரு விடுதிக்கான செலவு ரூ1¼ கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டும் இதே போன்று ஒதுக்கீடு பெறப்பட்டு செயல்படுத்தப்படும் என்று அரசுச் செயலாளர் தெரிவித்தார்.

56. விடுதிகள் சொந்த கட்டடங்களில் செயல்படுகிறதா அல்லது வாடகைக் கட்டடங்களில் செயல்படுகிறா என்பதை குழு அறிய விரும்பியது.

57. இது குறித்து அரசுச் செயலாளர் முதலில் வாடகைக் கட்டடத்தில் செயல்படுத்தப்பட்டு பிறகு இடம் தெரிவு செய்து பொதுப்பணித் துறை மூலமாக புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன என குழுவிற்கு பதிலளித்தார்.

58. 2014–2015 ஆம் நிதியாண்டில் பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான விடுதிகள் கூடுதலாக துவங்க அறிவிப்பு வெளியிட்ட நிலையில் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் துவங்குவதற்கு முனைப்பாக நடவடிக்கையினை துறை மேற்கொண்டு விடுதிகளை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

59. தேனி மாவட்டத்தில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் வகையில் மற்றும் கிராமப்புறங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் வேலைக்காக வரும் பெண்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் மகளிர் விடுதி மத்திய அரசின் மானியத்துடன் நடத்துவதற்கு தேனி மாவட்டத்தில் இரண்டு கருத்துருக்கள் கோரப்பட்டதில், மாநில மகளிர் சங்கத்தின் செயலாளர் திருமதி லதா 850 சதுர அடி அளவில் வாடகைக் கட்டடத்தில் மகளிர் விடுதி அமைக்க கருத்துரு சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் மனித நேய ஆதரவற்ற காப்பகத்தின் நிருவாகி மகளிர் விடுதி நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதால் உடன் கருத்துருவினை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதையும் குழு அறிகிறது.

60. மாநில மகளிர் சங்கத்தின் செயலாளர் திருமதி லதா, மகளிர் விடுதி அமைக்க 850 சதுர அடியில் விதிமுறைகளுக்குட்பட்டு 20 பணிபுரியும் பெண்கள் தங்குவதற்கு உரிய இடவசதி இல்லாத காரணத்தால் அவருக்கு தேனி மாவட்ட சமூக நல அலுவலர் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி தொடங்க அனுமதி வழங்கவில்லை என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

61. மனித நேய ஆதரவற்ற காப்பகத்தின் நிருவாகி இதுவரை மகளிர் விடுதி நடத்துவதற்கு விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை. இதுகுறித்து மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவித்து, மறுபடியும் ஆய்வு செய்ய சொல்கிறேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

62. தேனி மாவட்டத்தில் மேற்காணும் இரு கருத்துருக்களும் ஏற்கப்படாத நிலையில், புதிதாக கருத்துருக்களைப் பெற்று பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்க ஆணை பெற்று துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

63. திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக அரசு மகளிர் விடுதிகள் துவக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதுகுறித்து கடித எண்.7098/அ3/2013, நாள் 6–8–2012 இன்படி சமூக நல இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் மகளிர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட உரிய இடங்கள் தேர்வு செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலர் குழுவிடம் தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக அரசு மகளிர் விடுதி அமைக்கும் கருத்துருக்களின் தற்போதைய நிலையினை குழுவிற்கு தெரிவிக்க துறையிடம் கோரப்பட்டது.

64. மேற்கண்ட பணியைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சியருக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டோம். வாடகைக் கட்டடத்தில் செயல்பட ஏதுவாக, செலவினத் தொகை அரசிடமிருந்து பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1–3–2014 முதல் பணிபுரியும் மகளிர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது என அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

65. திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக அரசு பணிபுரியும் மகளிர் விடுதிக்கான இடத்தினை தேர்வு செய்து சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

66. குழு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் செய்தபோது, அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் சென்னை, புதுக்கோட்டை, மதுரை, கடலூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஒரூர் ஆகிய இடங்களில் செயல்படுவதுபோல இராமநாதபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கு உதவிடும் வகையில் மகளிர் விடுதி ஒன்று துவக்க கருத்துரு தொண்டு நிறுவனங்களிடமிருந்து கேட்டுள்ளதாகவும், மேலும், இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுரையுடன் பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்க இடம் தேர்வு செய்து தருமாறு கருத்துரு தயார் செய்து அனுப்ப தயார் நிலையில் இருப்பதாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. அக்கருத்துருவின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

67. அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க இந்த நிதியாண்டிலேயே அனுமதி வழங்க துறைமூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்களிடமிருந்து கருத்துரு பெறப்படும்பட்சத்தில், தகுதியிருப்பின் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

68. இராமநாதபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கென மகளிர் விடுதி அமைக்க மாவட்ட சமூக நல அலுவலரிடம் கருத்துரு பெற்று, நடப்பாண்டில் ஆணை பெற்று கட்டிடப் பணியை துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

69. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்படும் என அரசு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து இடங்கள் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாக குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக துறை எடுத்துவரும் நடவடிக்கையினை குழுவிற்கு தெரிவிக்கக் கோரியது.

70. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் புதிய அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டுவதற்கான சொந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தொடக்க விழாவும் நடந்து முடிந்துவிட்டது. அதேபோல், சோழிங்கநல்லூரில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதி கட்டுவதற்கான சொந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, 30-5-2014 அன்று தொடக்க விழா நடந்தேறியது என்று அரசுச் செயலாளர் குழுவிடம் பதிலளித்தார்.

71. 2013-2014 இல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 3 இடங்களில் புதிய அரசு பணிபுரியும் விடுதிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

72. திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதி இல்லையென்றும், ஆனால் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்க கருத்துருக்கள் கோரப்பட்டுள்ளதாக குழுவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தற்போது கருத்துரு பெறப்பட்டிருப்பின் தற்போதைய நிலையினைத் குழு அறிய விரும்பியது.

73. சென்னையில் நடைபெற்றக் கூட்டத்தில், 2013-2014 ஆம் நிதியாண்டில் புதிய அறிவிப்பின்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் புதிய அரசு மகளிர் பணிபுரியும் விடுதி அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்விடுதிக்காக சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என சமூக நல ஆணையர் குழுவிடம் தெரிவித்தார்.

74. மேலும், இதனைத் தொடர்ந்து, சொந்தக் கட்டடம் கட்டும் வரையில், தற்காலிகமாக வாடகைக் கட்டடத்தில் விடுதி செயல்பட எதுவாக எண்.13, டாக்டர் அப்துல் கலாம் தெரு, எம்.டி.எம். நகர், திருவள்ளூர் என்ற முகவரியில் வாடகைக் கட்டடம் தேர்வு செய்யப்பட்டு, 20–5–2014 அன்று முதல் செயல்பட்டு வருகிறது என்று சமூக நல ஆணையர் குழுவிற்கு பதிலளித்தார்.

75. 2013–2014 இல் திருவள்ளூர் மாவட்டத்தில் புதிய அரசு மகளிர் பணியுரியும் விடுதி அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளதை குழு அறிகிறது. இதற்கான இடத்தை தெரிவு செய்து உடனடியாக விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

VII மகளிர் முன்னேற்றத்திற்கான சமூகப்பொருளாதாரத் திட்டங்கள்

76. தமிழ்நாட்டில் பெண்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கான தொழிற்கூட்டுறவு சங்கங்கள் குறித்து குழு அறிய விரும்பியது.

77. மேலும், சங்க உறுப்பினர்களுக்கு நவீன ரக தையல் இயந்திரம் மட்டுமல்லாமல் அவர்களுடைய இயந்திரங்களுக்கு தொழிற்கூட ஜெனரேட்டர்கள் போடுதல் குறித்து துறையின் குறிப்பில் ஏதும் இல்லை என்றும், இது வரை எந்தளவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது? அது பற்றி துறையின் விளக்கம் என்ன? ஜெனரேட்டர் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களைக் கொண்டு பள்ளிச் சீருடை தைத்துக்கொடுப்பதற்காக ரூ. 48 இலட்சம் செலவிடப்படுகிறது என்றும் எந்தெந்த மாவட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை குழு அறிய விரும்பியது.

78. சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில், 41,000 உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வருகிறார்கள், தையல் தைத்துக்கொடுக்கிறார்கள். சிலர் வெகு குறைந்த காலம் பணிபுரிந்து விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள் எனவும் அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

79. தையல் தொழிற் பயிற்சி மையத்தில் ஆயத்த ஆடைகள் தைப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 2013–2014 இல் 54,000 உறுப்பினர்களுக்கு 56,00 கோடி ரூபாய் செலவில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் நிறுவனம் மூலம் பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்பது நோக்கம். அதில் 2013–2014 இல் 3,400 உறுப்பினர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2014–2015 இல் 10,000 உறுப்பினர்களுக்கு மட்டும் பயிற்சி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு குறைவான அளவிற்குப் பயிற்சி அளித்ததற்கு என்ன காரணம்? ஆயத்த ஆடைப் பயிற்சி அளவீடுகளை துறை சரியான முறையில் முதலிலேயே எதிர்பார்த்து கணக்கிடவில்லையா அல்லது நடைமுறைப்படுத்துவதில் இடையூறு உள்ளதா என குழு துறையிடம் கேட்டது.

80. முதலில் 2011–2012 இல் அறிவிக்கப்பட்ட திட்டத்தில், அதற்காக அழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் பொருட்கள் பெறப்பட்டு ஓராண்டு காலம் தாமதம் ஆனதுதான் காரணம். ஒரு இயந்திரம் பெறப்பட்டு பயிற்சி முடித்துக் கொண்டுவந்தால்தான் பயன்பாடு சரியாக இருக்கும். கடந்த ஆண்டு இயந்திரம் வர வர subsidy tied up loan- இல் loan formalities முடித்துத்தான் 3,400 உறுப்பினர்களுக்கு இயந்திரங்கள் வாங்கிவந்து பயிற்சி கொடுக்க முடிந்தது. இந்த ஆண்டு 2014–2015 இல் 10,000 உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

81. துறை மூலம் திட்டமிட்டபடி மொத்தம் 54,000 உறுப்பினர்களுக்கான பயிற்சி ஏன் நிறைவு செய்யப்படவில்லை என குழு மீண்டும் துறையிடம் கேட்டது.

82. 2013–2014 இல் மாணவ மாணவியர் எண்ணிக்கைக் குறைவானதால் தைத்த உடைகளின் எண்ணிக்கைக் குறைவானதால் செலவிடப்பட்ட தொகையும் குறைவாக இருக்கிறது. முதலில் ஏற்பட்ட தாமதத்தால் முழுமையாக முடிக்க முடியவில்லை என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

83. குழு மேலும் அப்படியிருக்கும்பட்சத்தில் முதலிலேயே 54,000 உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்க ரூ.56.00 கோடி செலவு செய்திருக்க வேண்டாம் அல்லவா என துறையிடம் கேட்டது.

84. 56 கோடி ரூபாயில் 10% அரசு கடனாக பெறப்பட்டது. மீதி தொகை ஆதி திராவிடர் நல வாரியம், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் சிறுபான்மையினர் நல வாரியம் ஆகியவற்றிடமிருந்து நிதி பெற்று அதன்மூலம் பயிற்சி கொடுக்கிறோம். இது படிப்படியான முறையில்தான் செயல்படுத்தப்படுகிறது. இவை அரசிடம் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கமளித்தார்.

85. தொழிற் பயிற்சியில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பயிற்சி மிகமிக முக்கியமானதாகும். நாட்டின் ஏற்றுமதிக்கு மிக முக்கியமானதொரு தொழிற் பயிற்சியாகும். கிராமத்தில் இருப்பவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் அனைத்திலும் இப்பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்றும், 54,000 உறுப்பினர்களும் முறையான பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் துறை செயல்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

86. தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் 25 இருக்கின்றன. அங்கு சத்துணவு எவ்வாறு தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு சத்து மாவு உணவு தயாரிக்கும்போது பிள்ளைகளுக்கு எவ்வாறு கொடுக்கப்படுகிறது? எங்கிருந்து வாங்கப்படுகிறது? அப்படியே வாங்கப்படுகிறதா என குழு அறிய விரும்பியது.

87. கோதுமை மாவு வாங்கப்பட்டு நன்கு அரைக்கப்பட்டு, சத்து மாவு கலவை ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்டு இரண்டையும் கலந்து, பாக்கெட் செய்து சத்துணவு மையத்திற்கு அனுப்புகிறார்கள் என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

88. இணை உணவு தயாரிப்போர் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சங்கங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்று குழு துறையிடம் கேட்டது.

89. சத்து மாவு உணவு தயாரிக்கிறார்கள். கோதுமை மாவு வாங்கி அதனை உருண்டை பிடித்து செய்யும் ஒரு சத்து இணை உணவாகும். இது போன்ற நிறைய சங்கங்கள் இருக்கின்றன. எழுதுபொருள் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம், சாக்குக் கட்டி தயாரித்தல், கரும்பலகை தயாரித்தல், மரங்களை வைத்து பேப்பர் தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற பணிகளை இச்சங்கங்கள் மேற்கொள்கின்றன. இவற்றின் உற்பத்தி பொருட்களை அரசே முழுமையாக கொள்முதல் செய்கிறது என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

90. அரசுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் முழுமையாக இத்தகைய சங்கங்களிடமிருந்தே வாங்கப்படுகின்றனவா என மீண்டும் குழு துறையிடம் கேட்டது.

91. இதற்கு அரசுச் செயலாளர் இச்சங்கங்கள் அரசுக்கு 75 சதவீதம் அளவுக்கு வினியோகம் செய்கின்றனர் என்று குழுவிடம் பதிலளித்தார்.

92. 100 சதவீதம் இப்பொருட்களை இத்தகைய சங்கங்களிடமிருந்து பெறமுடியாதா? 100 சதவீதம் வாங்கினால் அரசுக்கு செலவு மிச்சமாகும் என குழு கருதுகிறது என்றும் 100 சதவீதம் செய்து கொடுத்தால் பொது மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றும் மேலும் பெண்கள் மத்தியில் சுய தொழில் செய்வதற்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது என்றும் அதனையும் மக்களுக்கு எடுத்துச் சொன்னால் மேலும் நன்றாக இருக்கும் என்று குழு கருதுகிறது.

93. இத்தகைய பொருட்களைத் தயாரித்து வழங்க போதுமான எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கிடைக்கவில்லையென்பதுதான் காரணம் ஆகும் என அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

94. இப்போது இருக்கிற உறுப்பினர்களோடு புதிதாக உறுப்பினர்களைச் துறை சேர்த்தால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும் என்றும் மேற்கு மாம்பலத்தில் ஏற்கெனவே ஒரு சங்கம் இருக்கின்றது என்றும் இன்னும் ஒன்றிரண்டு சங்கங்களுக்கு அனுமதி கொடுத்தால் அரசுக்கு வருமானம் வருமல்லவா என குழு துறையிடம் கருத்த தெரிவித்தது.

95. மேலும், மொத்தமாக துணியை வாங்கி மெஷின் வைத்து வெட்டக்கூடிய 10 மையங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அரசு 2013–2014 ஆம் ஆண்டில் இந்த மையங்கள் அனைத்திற்குமே மின்னாக்கிகள், ஜெனரேட்டர்கள், பட்டன் பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறது. இம்மாதிரியான மையங்களை அதிக்கப்படுத்தும்போது உறுப்பினர்கள் கூடுதலாக வந்தாலும் அவர்களுக்கு தைப்பதற்கு துணி கொடுக்க வசதியாக இருக்கும். துறை துணியை வெட்டிக் கொடுத்துவிடுகிறது. உறுப்பினர்கள் தைத்துக் கொடுத்துவிடுகிறார்கள். தேவைகளுக்கேற்ப மையங்களை அதிகப்படுத்தக்கூடிய சூழ்நிலையில், அதிகமான உறுப்பினர்களை துறை சேர்த்துக்கொள்ள இயலும். அதனால் துணி வெட்டும் மையங்களை அதிகமான அளவில் ஏற்படுத்த வேண்டுமென்று குழு துறையை கேட்டுக்கொண்டது. குழுவே நேரடியாக மாவட்டங்களுக்குச் சென்று பார்த்தது. மிக அழகாக செய்து கொடுத்திருக்கிறார்கள். அனைத்து உறுப்பினர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இந்தமாதிரி மையங்களை அதிகப்படுத்துவதற்கு துறை முயற்சி செய்ய வேண்டும் என குழு வலியுறுத்துகிறது.

96. மதுரையில் ஒருசிலர் குழுவாகச் சேர்ந்து காராசேவு, மிக்சர் போன்ற தின்பண்டங்களை தயார் செய்கிறார்கள் என்றும், வழக்கமாக நாம் கடலை மாவினால் செய்யக்கூடிய தின்பண்டங்களை அவர்கள் சோள மாவு, தினை மாவு போன்றவற்றில் நன்றாகச் செய்கிறார்கள் என்றும் நன்றாக விற்பனையாகிறது என்றும் அவற்றை சாப்பிடுவதால் பக்க விளைவுகள் எதுவும் இருப்பதில்லை என்றும் துறையும் அம்மாதிரியான தின்பண்டங்களை இரண்டு, மூன்று நாட்களுக்குள் விற்றுத் தீருகிற வகையில் தயாரித்தால் சங்கத்தினர்களுக்கு இலாபம் வருவதோடு, அரசுக்கும் நல்ல இலாபம் கிடைக்கும் என்றும் பொதுவாக இந்தமாதிரியான பண்டங்களுக்கெல்லாம் சந்தைவசதி இருக்குமா என குழு அறிய விரும்பியது.

97. இதற்கு அரசுச் செயலாளர் குழு கேட்பது மிகச் சரியான கேள்வி. என்னென்ன இணை உணவுகள் கொடுக்கலாம், அதை எப்படி தயாரிக்கலாம் என்பதை முடிவு செய்வது அரசாங்கம்தான். சுய உதவிக் குழுக்கள்மூலமாக மக்கள் அதிகமாக விரும்பக்கூடிய உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவர்கள் திறம்பட செய்து கொண்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரை அரசு உணவகங்களைத் திறந்ததன்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இதன்மூலம் இணை உணவு தயாரிக்கும் சங்கங்களுக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது.

98. மேலும், தையல் கூட்டுறவுச் சங்கங்களும், துணி வெட்டும் மையங்களும் அதிகரித்துவிட்டன. கிட்டத்தட்ட 45 இலட்சம் குழந்தைகளுக்கு நான்கு செட் சீருடை தைத்துக் கொடுக்கிறோம். அரசு ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு குழந்தைக்கும் நான்கு செட் சீருடை கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் துணி கொடுக்கத் தொடங்கியபின்னர் மாணவர்களின் வருகையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அதிகமான மாணவர்கள் கல்வி பயிலக்கூடிய சூழ்நிலை இதனால் உருவாகியுள்ளது. துணிகளை வெட்டித் தைத்துக் கொடுப்பவர்களுடைய வருமானமும் கிட்டத்தட்ட 8,000 ரூபாய் அதிகரித்துள்ளது. ஒரு யூனிட் துணி தைப்பதற்கு 6,000 ரூபாய் வீதம் நான்கு யூனிட் துணி தைப்பதற்கு 24,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதனால் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள அனேகக் குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு மேல் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

99. அரசு நான்கு செட் சீருடைகள் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது. ஆனால், ஒரு முறை இரண்டு செட் சீருடைகளும், இரண்டாவது முறை இரண்டு செட் சீருடைகளும் வழங்கப்படுவதால், மாணவர்கள் சிரமப்படுவதாகச் சொல்கிறார்கள். ஒரே தடவையாக நான்கு செட் சீருடைகளையும் வழங்குவதில் துறைக்கு என்ன சிரமம் இருக்கிறது என குழு துறையிடம் கேட்டது.

100. இதற்கு மாணவர்களுக்கு சீருடைகள் தைத்து வழங்குவதற்கான துணிகளை கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி மூலமாக வாங்குகிறோம். பள்ளிக்கூடம் திறக்கும்போது இரண்டு செட் சீருடைகளும், குடியரசு தினத்தின்போது இரண்டு செட் சீருடைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் சீருடைகள் வழங்கி வருகிறோம். சில நேரங்களில் சாயம் தோய்த்தலாகி (dyeing) வருவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது. வருங்காலங்களில் இதனை சரிசெய்துவிடுகிறோம் என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

101. துணி வெட்டக்கூடிய இயந்திரங்கள்மூலம் துணிகளை உரிய நேரத்தில் வெட்டிக் கொடுத்தால், அதனை வாங்கிச்சென்று உரிய நேரத்தில் தைத்துக் கொடுப்பதற்கு துணி தைக்கக்கூடிய உறுப்பினர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படிச் செய்தால், மாணவர்களுக்கு தங்குதடையின்றி சீருடைகள் சென்று சேருவதற்கு வசதியாக இருக்கும் என குழு கருதுகிறது.

102. இது குறித்து அரசுச் செயலாளர் 2007, 2008, 2009 மற்றும் 2010 வருடம் வரையிலும் காலதாமதமாக, அதாவது முந்தைய வருடத்தில் வழங்கப்பட வேண்டிய சீருடைகள் ஒரு வருடம் கழித்து அடுத்த வருடத்தில்தான் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. ஆனால், 2011–க்குப் பிறகு அந்தந்த வருடத்தில் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன என குழுவிற்கு பதிலளித்தார்.

103. 2011–க்குப் பிறகு அரசு ஆயிரக்கணக்கான துணிகளை இரண்டு நிமிடத்தில் வெட்டிக் கொடுக்கக்கூடிய இயந்திரங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறது என்றும் இதனால் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்றும், இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டுமென்று குழு அறிவுறுத்துகிறது.

VIII சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

104. 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுகளில் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் குறித்து குழு அறிய விரும்பியது,

105. இதற்கு அரசுச் செயலாளர் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ், ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழ் பெண்களை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு தேர்ந்தெடுக்கிறது என்று குழுவிடம் விளக்கினார்.

106. குழு மேலும் தையல் படித்து, அதற்கான சான்றிதழ் வைத்திருக்கும் பெண்கள் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என துறையிடம் கேட்டது.

107. இதற்கு அரசுச் செயலாளர் அரசின் பிற்படுத்தப்பட்டோர் நல பயிற்சி நிலையத்தில் தையற் பயிற்சி பெற்று, அதற்கான சான்றிதழ் வைத்திருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு அவர்களைத் தேர்ந்தெடுக்கிறது என குழுவிற்கு பதிலளித்தார்.

108. குழு, மேலும் அவர்களுக்கு அரசாங்க பணிகள் ஏதேனும் வழங்கப்படுகிறதா என துறையிடம் கேட்டது.

109. இதற்கு அரசுச் செயலாளர் அரசின் சார்பாக தையல் பணிகளும் வழங்கப்படுகிறது என்று குழுவிற்கு தெரிவித்தார்.

110. குழு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, சமூகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்குள் உள்ள 40 வயதிற்குட்பட்ட ஏழைப் பெண்களுக்கு சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2012–2013 மற்றும் 2013–2014 ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏன் துறை நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறித்து குழு அறிய விரும்பியது.

111. இதற்கு அரசுச் செயலாளர் இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து நவீன இரக தையல் இயந்திரம் (Advanced Type of sewing machine) ரூ.5,000/– மதிப்பில் 125 மெஷின்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளன என குழுவிற்கு தெரிவித்தார்.

112. பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரம் கொடுப்பது காலதாமதமாகிறது. விண்ணப்பித்தவர்கள் திருமணம் செய்துகொண்டுகூட சென்றுவிடுவதாகவும் அதுவரை கூட கிடைப்பதில்லை என்ற ஒரு குறைபாடும் இருக்கிறது. எனவே நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குழு துறையிடம் வலியுறுத்தியது.

113. இதற்கு அரசுச் செயலாளர் இனிவரும் காலங்களில் விரைவாக செயல்படுத்துவோம் என்று குழுவிற்கு உறுதியளித்தார்.

114. விருதுநகர் மாவட்டத்தில் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் 150 தையல் இயந்திரங்கள் பெறப்பட்டு மகளிருக்கு வழங்கியதாகவும், 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியில் 300 பேருக்கு தையல் இயந்திரங்கள் தேவை என்று கருத்துரு அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும், தகுதியான மகளிருக்கு இலவச தையல் இயந்திரங்கள் ஒதுக்கீடு வழங்கப்படும் என்று விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் குழுவிடம் தெரிவித்தார். அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவின் தற்போதைய நிலை என்ன என்று குழு அறிய விரும்பியது.

115. இதுதொடர்பாக அரசுச் செயலாளர் 300 விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு 80 நபர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது என குழுவிடம் தெரிவித்தார்.

116. பெண்களுக்கு சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் அனைத்து மாவட்டங்களிலும் உரிய காலத்திற்குள் வழங்குவதை துறை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

IXதமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

117. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மூலம் 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுகளில் எத்தனை பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளது என்பதை குழு அறிய விரும்பியது.

118. இதன் தொடர்பாக ஆண்டுவாரியாக நிலுவையிலுள்ள மனுக்கள் மற்றும் தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் விவரத்தை பின்வருமாறு துறை குழுவிற்கு தெரிவித்தது.

வருடம்	பெறப்பட்ட மனுக்கள்	தீர்வு காணப்பட்ட மனுக்கள்	நிலுவையிலுள்ள மனுக்கள்
2011	1254	655	599
2012	1410	173	1237
2013	1528	203	1325
2014	430	28	402

119. தமிழகத்தில் 2011 முதல் 2014 வரை மாநில மகளிர் ஆணையம் மூலம் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய நிலுவையிலுள்ள 3563 மனுக்களின் மீது ஆய்வு மேற்கொண்டு விரைவாக துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

120. திருநெல்வேலி மாவட்டத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பாக தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மூலம் பெறப்பட்ட 20 மனுக்களில் 12 மனுக்களுக்கு தீர்வு பெற்றதாகவும், மீதி 8 மனுக்கள் மாவட்ட சமூக நல அலுவலக விசாரணையில் நிலுவையில் இருப்பதாகவும், குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. நிலுவையிலுள்ள 8 மனுக்களின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

121. இதற்கு அரசுச் செயலாளர் இது சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குழுவிற்கு தெரிவித்தார்.

X தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்

122. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட மானியம் 80,000 ரூபாய் என்பது ஒவ்வொரு ஆண்டும் வித்தியாசம் இல்லாமல் அதே தொகை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்ன என்பதை குழு துறையிடம் கேட்டது.

123. இதற்கு நிர்வாகச் செலவுகள் செய்வதற்கு மட்டுமே அந்தத் தொகை வழங்கப்படுகிறது என்று இது தொடர்பாக அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

124. இவர்கள் எப்படி தேர்வு செய்யப்படுகிறார்கள்? எந்த முறையில் இவர்களுக்கு தொகை கொடுக்கப்படுகிறது என்று குழு துறையிடம் கேள்வி கேட்டது.

125. இதற்கு சமூக நல இயக்குநர் இந்த நிறுவனங்கள் முன்பிருந்தே இருக்கிறது. கடந்த வருடங்களில் அவர்கள் தேர்வு செய்யப்படவில்லை என குழுவிற்கு தெரிவித்தார்.

126. அவர்கள் பணத்தை தவறாகச் செலவு செய்யக்கூடாது என்பதுதான் நோக்கம். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடர்ச்சியாக செயல்படுவதற்கு அவர்களுடைய பணிகளை ஆய்வு செய்ய ஏதேனும் வழிவகை உள்ளதா? இவர்கள் அரசாங்கம் செயல்படுவதுபோல் செயல்படுகிறார்கள் என்றும் அரசாங்க நிதியை துறை அவர்களுக்கு அளிக்கிறது என்றும் தவறாக பயன்படுத்தாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை குழு அறிய விரும்பியது.

127. எங்களுக்கு வரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து நாங்கள் அரசுக்கு பரிந்துரை செய்கின்றோம். யாரேனும் புதிதாக விண்ணப்பம் செய்தால் அவற்றை பரிசீலனை செய்து நாங்கள் பரிந்துரை செய்கின்றோம் என சமூக நல இயக்குநர் விளக்கம் அளித்தார்.

128. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பம் செய்தால் அவர்களுடைய விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதில்லை என்று சொல்கிறார்கள். தற்போது இயங்கிவரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயல்பாட்டில் திருப்தி இருக்கிறதா? அவர்களுடைய செயல்பாடுகளை யாரால் கண்காணிக்கப்படுகிறது. அதற்காக ஏதேனும் ரிப்போர்ட் வைக்கப்பட்டுள்ளதா என குழு துறையிடம் கேள்வியை எழுப்பியது.

129. இதற்கு அரசுச் செயலாளர் தமிழ்நாடு சோசியல் வெல்பேர் போர்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என குழுவிற்குப் பதிலளித்தார்.

130. இவர்களுக்கு மாநில அரசு மூலம் மானியம் அளிக்கப்படுகிறதா? என்பதை குழு அறிய விரும்பியது.

131. இதற்கு அரசுச் செயலாளர் இவர்களுக்கு மத்திய அரசு மானியம் மட்டும்தான் அளிக்கப்படுகிறது என்று குழுவிற்கு விளக்கினார்.

132. இவர்களுக்கு நிதி வழங்கும்போது உரிய ஆய்வு செய்து வழங்கப்படவேண்டும் என்று துறையிடம் குழு வலியுறுத்தியது.

XI தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்

133. முதன்முதலாக திருநங்கைகளுக்காக அரசு ஒய்வூதியம் வழங்கியிருக்கிறது. இவர்கள் எந்த அடிப்படையில் பயன்பெறுகிறார்கள் என்ற விவரத்தை அளிக்க இயலுமா என்பதை குழுவிற்கு தெரிவிக்க துறையிடம் கோரியது.

134. இது தொடர்பாக அரசுச் செயலாளர் திருநங்கைகள் நல வாரியம் மிகவும் சிறப்பாக செயல்பட்டுவருகிறது. மத்திய அரசிலிருந்து சமீபத்தில் வந்திருந்த திரு. ஜெயின் அவர்கள் தலைமையிலான ஆய்வுக் குழு, வாரியத்தின் பணிகளை ஆய்வு செய்தது. நமது மாநிலத்தில் உள்ள இந்த வாரியத்தின் செயல்பாடுகளை மற்ற மாநிலங்களும் பார்த்து தெரிந்துகொண்டு செயல்படவேண்டுமென்று கருத்து தெரிவித்துள்ளார்கள். மாவட்ட வாரியாக உள்ள 442 உறுப்பினர்கள் அடங்கிய 51 சுய உதவிக் குழுக்களுக்கு சொந்தத் தொழில் துவங்கிடும் பொருட்டு மானியத் தொகை ரூபாய் 55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என குழுவிற்கு அவர் விளக்கினார்.

135. திருநங்கைகள் நல வாரியத்தில் மொத்த உறுப்பினர்கள் எத்தனை பேர் என குழு அறிய விரும்பியது.

136. 350 பேர்தான் இருக்கிறார்கள். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் நாங்கள் ஒரு கமிட்டி வைத்திருக்கிறோம். அவர்கள் அதன் முன் ஆஜராக வேண்டும் என அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

137. திருநங்கைகள் நல வாரியத்தில் 4,579 பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்றும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர்களுக்கு என்னென்ன தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் அதே சமயத்தில் இவர்களுக்கு மற்ற சலுகைகள் என்ன என்பதை குழு அறிய விரும்பியது. சுய உதவிக் குழுக்கள் இல்லாமல் தொழிற் கூட்டுறவு சங்கங்களில் இவர்கள் பங்கெடுப்பதற்கு, உறுப்பினர்களாக சேர்வதற்கு, திட்டங்களில் பயன்பெறுவதற்கு சமூக நலத் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என குழு துறையிடம் கேட்டது.

138. உறுப்பினர்களை பதிவு செய்வதற்கு 3,965 பேர்தான் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அடையாள அட்டை பெற்றிருக்கிறார்கள். சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் 108 பேர்கள் தையல் இயந்திரங்கள் பெற்றிருக்கிறார்கள். தொழிற் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கச் சொல்லியிருக்கிறோம். மேலும், திருநங்கைகளுக்கு செங்கல் தயாரிப்பது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு திருவள்ளூர் அருகில் செங்கல் தயாரிக்கும் யூனிட் அமைக்கப்பட்டு நல்ல முறையில் அது இயங்கிவருகிறது. அதேபோன்று, அழகுக்கலை (பியூட்டிசியன்) பயிற்சி அளிக்கப்பட்டு தனியாக தொழில் தொடங்கி நடத்துகிறார்கள். அதேபோன்று விஷூவல் கம்யூனிகேஷன் பயிற்சி அளிக்கப்பட்டு தொலைக்காட்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்றார்கள். இவர்களுக்கு அதிகமான தொல்லைகள் காவல் துறை மூலமாக அளிக்கப்படுகிறது என்று இவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில், காவல் துறை தலைவர் அவர்களுடன் கலந்து பேசி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்கள் தவறான வழியில் செல்லாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இவர்களுக்கு சைக்கோ ஒரியன்டேஷன் கோர்சும் நடத்திவருகிறோம். திருநங்கைகள் தொழில் செய்யும் பொருட்டு அவர்களுக்கு நாங்கள் தையல் இயந்திரங்கள் கொடுக்கிறோம் எனவும் அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

139. திருநங்கைகளை தொழிற் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்தால், துறை மூலம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தையல் இயந்திரங்களை வைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான சீருடைகளை தைத்துக் கொடுப்பதற்கு உதவிகரமாக இருக்கும். சமூக நலத் துறையால் செயல்படுத்தப்படும் எல்லா திட்டங்களிலும் இவர்களை சேர்த்துக்கொள்ள துறை முனைப்பாக செயல்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

140. அரசுமூலம் விலையில்லா ஆடு மற்றும் மாடுகள் திருநங்கைகளுக்கு வழங்கப்படுகிறதா என்பதை குழு அறிய விரும்புகிறது.

141. திருநங்கைகளுக்கு அரசினுடைய விலையில்லா ஆடு மற்றும் மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு குழு அமைத்து தகுதியுள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு வழங்கப்பட்டதற்கான ஆதாரம் எங்களிடம் இருக்கிறது என்று துறையின் அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

142. திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை ஏதேனும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை குழு துறையிடம் கேட்டது.

143. இதற்கு துறை திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் பொருட்டு அரசுக்கு கருத்துரு அனுப்ப வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குழுவிடம் தெரிவித்தது.

144. உச்சநீதி மன்றத்தின் மூலம் மூன்றாம் பாலினமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதற்கு முனைப்போடு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

145. திருநங்கைகளுக்கு பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்டிக் கொடுக்க வாய்ப்புள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

146. இதற்கு, திருநங்கைகள் நலவாரியத்தின் மூலம் அடையாள அட்டைகள் பெற்றவர்களுக்கு பட்டா மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் பட்டா உள்ள திருநங்கைகளுக்கு வீடு கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று குழுவிடம் துறை தெரிவித்தது.

147. திருநங்கைகள் வாழும் பகுதிகளுக்கு ஏற்ப சமுதாயத்தில் உள்ள சூழ்நிலையைக் கருதி திருநங்கைகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் உள்ள வீடு வழங்கும் பல திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தின் மூலம் இவர்களுக்கு வீடுகள் கட்டித் தர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XI I பாதுகாப்பு இல்லங்கள்

148. தமிழ்நாட்டில் 98 பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் 2005–இன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டு மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் எத்தனை பெண்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பதை குழு அறிய விரும்பியது.

149. இதற்கு குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் இந்த இல்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இவர்கள் மிக குறுகிய காலமே இந்த இல்லங்களில் தங்குகிறார்கள். மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் பெண்கள் இங்கு வருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்தவுடன் பாதுகாப்பு இல்லங்களிலிருந்து போய்விடுகிறார்கள் என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

150. மேலும் இது மத்திய அரசு திட்டமா? 98 இடங்களிலும் இந்த இல்லங்கள் செயல்பட்டு வருகின்றனவா என்று குழு துறையிடம் கேட்டது.

151. இதற்கு அரசுச் செயலாளர் இது மத்திய அரசு திட்டம்தான். சாதாரண பாதுகாப்பு இல்லங்களின்கீழ் இவை இயங்கி வருகின்றன என குழுவிடம் தெரிவித்தார்.

152. இதற்கென தனியாக பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இல்லங்கள் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும் குழு அறிய விரும்பியது.

153. அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் (N.G.O) தான் இந்த இல்லங்களை பராமரித்து வருகிறார்கள். இந்த இல்லங்கள் சரியாக பராமரிக்கப்படுகின்றனவா என்பதை துறை ஆய்வு செய்து, சான்று வழங்கி, பின்னர் இவற்றுக்கு அரசு அங்கீகரித்து நிதி வழங்குகிறது என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

154. தமிழ்நாட்டில் இயங்கிவரும் பெண்கள் பாதுகாப்பு இல்லங்களின் செயல்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

155. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பேசி தீர்க்கப்படுகின்றனவா? அரசு முதன்முதலில் பெண் காவல் நிலையங்களை தொடங்கியது. வழக்குகள் துறைமூலம் தீர்க்கப்படுகிறதா அல்லது பெண் காவல் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறதா என குழு அறிய விரும்பியது.

156. இது குறித்து துறைமூலம் வழக்குகள் பேசி தீர்க்கப்படாத நிலையில் பெண் காவல் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கே அனுப்பப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால், மீண்டும் அவை துறைக்கு திருப்பியனுப்பப்பட்டு தீர்வு காணப்பட்ட இனங்களும் உண்டு. எப்.ஐ.ஆர். போட்டுவிட்டால், நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் வரையில் காவல் துறையில் இருக்கும். 90 சதவிகித வழக்குகள் கலந்தாய்வு(Counseling) மூலம் தீர்வு காணப்படுகிறது என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கம் அளித்தார்.

XIII தமிழ்நாடு வரதட்சணை தடுப்புச் சட்டம்

157. தமிழ்நாடு வரதட்சணை தடுப்புச் சட்டத்தின்கீழ் 2004 இல் விதிகள் வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டதை குழு அறிகிறது. இச்சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தி 2011–2014 ஆம் ஆண்டில் சுமூகத் தீர்வுகள் எடுக்கப்பட்ட விவரத்தை குழுவிற்குத் தெரிவிக்குமாறு துறையிடம் கேட்டது.

158. வரதட்சணை தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி இதுவரை 3,716 வழக்குகளுக்கு சுமூகத் தீர்வு காணப்பட்டுள்ளது. இத்தகைய வழக்குகளில் ஆண்கள் தவறு செய்திருக்கிறார்களா என்பதை கண்டறிந்து அவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்படுகின்றன. வரதட்சணை சம்பந்தப்பட்ட வழக்குகள் காவல் நிலையங்களிலும் பதிவு செய்யப்படுகின்றன. பெண்கள் தவறாக வழக்குகளை பதிவு செய்திருந்தால் அவர்கள்மீதும் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சுமூகத் தீர்வு காணப்படுகிறது என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

159. வரதட்சணை கொடுப்பதும் தவறு, வாங்குவதும் தவறு என்று மணமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்றும், மேலும் வரதட்சணை தடுப்புச் சட்டம் குறித்து சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XIV தொட்டில் குழந்தைத் திட்டம்

160. தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் எத்தனை சிறப்பு தத்து மையங்கள் இருக்கின்றன என்று குழு துறையிடம் கேட்டது.

161. இதற்கு அரசுச் செயலாளர் 15 சிறப்பு தத்து மையங்கள் இருக்கின்றன என குழுவிடம் அவர் தெரிவித்தார்.

162. மேலும் இந்த மையங்களில் எத்தனை குழந்தைகள் இருக்கின்றன என்பதை குழு துறையிடம் கேட்டதற்கு அரசுச் செயலாளர் தமிழ்நாட்டில் 1992 இல் முதன்முதலாக துவங்கப்பட்ட திட்டம் தொட்டில் குழந்தை திட்டம். இந்த திட்டத்தின்கீழ் 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுகளில் 277 குழந்தைகள் வெளிநாட்டிலும், 14 குழந்தைகள் உள்நாட்டிலும் தத்து கொடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

163. மேலும் இத்திட்டத்தினால் இதுவரை 4,410 குழந்தைகளின் உயிர்கள் காக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் அதிகமான அளவில் சிசுக் கொலை நடைபெற்றது. இந்தத் திட்டத்தை மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தினோம். 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்கீழ் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 942 பெண் குழந்தைகள் என்று இருந்த குழந்தை பாலின விகிதம், 2011 ஆம் ஆண்டில் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 946 பெண் குழந்தைகள் என்று உயர்ந்து இருக்கிறது. அகில இந்திய அளவில் குழந்தை பாலின விகிதம் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 944 பெண் குழந்தைகள் என்று இருக்கிறது. கேரளாவில் மட்டும்தான் அதிகமாக இருக்கின்றது. குஜராத் மாநிலத்தில்கூட குறைவாகத்தான் இருக்கிறது. இதனையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாடு குழந்தை பாலின விகிதத்தில் பெண் குழந்தைகள் உயர்வான நிலையில் இருப்பதாக மத்திய அரசின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது என மேலும் அவர் குழுவிடம் தெரிவித்தார்.

164. தொட்டில் குழந்தைத் திட்டம் 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்றும் இதில் உள்ள குழந்தைகள் திருமண வயதை எட்டும்போது இவர்களுக்கு சமூக நலத் துறையின்மூலம் திருமணம் செய்து வைக்கப்படுகிறதா என்று குழு துறையிடம் கேட்டது.

165. இதற்கு அரசுச் செயலாளர் தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் வளரும் குழந்தைகளுக்கு, திருமணம் செய்து கொடுக்க வேண்டிய நிலைமை இன்னும் வரவில்லை. இந்தக் குழந்தைகளுடைய படிப்பு முடியும் தருவாயில் இருக்கின்றது. இவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் தங்களுக்கு படிப்புதான் முக்கியம் என்று படித்துக் கொண்டிருக்கிறார்கள் என குழுவிடம் பதிலளித்தார்.

166. மேலும், தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் வளரும் குழந்தைகளுக்கு மறு வாழ்வு கொடுக்க வேண்டும் என்றும் இவர்களுக்கு எல்லா சலுகைகளும், அரசு வேலையும் கிடைக்கும்போது இன்னும் நிறைய குழந்தைகளை இந்தத் திட்டத்தில் கொண்டுவந்து சேர்ப்பார்கள் என்றும் இதற்கு இன்னும் கூடுதல் நிதி ஒதுக்கீடுகள் தேவைப்படும் என்றும் இது குறித்து துறையில் ஏதாவது கருத்துரு உள்ளதா என்பதை குழு அறிய விரும்புகிறது.

167. இந்த மாதிரி கருத்துரு ஆய்வில் இருக்கிறது என்றும், குழு தெரிவித்த கருத்து மிக மிகச் சரியானது. இது குறித்த ஆய்வின்போது இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, குழந்தையை ஒருவர் விட்டுச் சென்றால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இருந்தும் இந்த அரசு கருணை உள்ளத்துடன் அந்தக் குழந்தைகளை வழி நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தாய் உள்ளத்தோடு இதை செய்து கொண்டிருக்கிறோம் என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

168. குழு துறையிடம் 'தொட்டில் குழந்தைத் திட்டம்' என்பது தெருவில் போட்டுவிட்டுச் செல்கின்ற குழந்தைகளை மட்டும்தான் அரசு எடுத்து வளர்க்கின்றது என்று இல்லாமல், பெற்றோர்களால் வளர்க்க முடியாமல் விட்டுச்செல்கின்ற குழந்தைகளையும் 'தொட்டில் குழந்தைத் திட்டம்' மூலம் எடுத்து வளர்க்கப்படுகிறதா என குழு துறையிடம் கேட்டது.

169. அதைத்தான், surrendered child என்று சொல்கிறோம். அதாவது, தாய், தந்தை யார் என்று நமக்குத் தெரியும். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கின்றது? அவர்களுடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றது? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருந்தால் அவர்களிடமே அந்தக் குழந்தையை விட முயற்சி செய்வோம். அவர்கள் அந்தக் குழந்தையை வளர்க்க மறுத்தால் அந்தப் பெற்றோர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம். சில நேரங்களில் கைது செய்ய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். ஆனால், ஒரு சிலரால் தன்னுடைய குழந்தையை வளர்க்க முடியாத உண்மை சூழ்நிலை இருந்தால் அந்தக் குழந்தையை அரசே தத்தெடுத்துக் கொள்ளும் என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

170. தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் வளரும் 4 ஆயிரம் குழந்தைகளும் படித்து முடித்த பிறகு அவர்களுக்கு அரசு வேலை கிடைக்க வாய்ப்பிருந்தால், அவர்களுக்கு திருமணம் முடிக்கும்போது சுலபமாக இருக்கும். இதனை அரசின் பார்வைக்கு எடுத்துசென்றால், அந்தக் குழந்தைகளுடைய எதிர்காலம் நல்ல முறையில் அமையும் என்று குழு கருதுகிறது. தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகள் படித்து முடித்த பிறகு அவர்களுக்கு அரசு வேலை கிடைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

171. தமிழ்நாட்டில் பெண் சிசுக் கொலை அதிகமாக நடக்கிறது. துறைமூலம் அதை தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

172. சட்டத்தையும் மீறி பெண் சிசுக் கொலை அதிகமாக நடந்து வருகின்றது. ஒருசிலர் ஆணா, பெண்ணா என்று ஸ்கேன் மூலம் தெரிந்துகொண்டு கருவிலே சிதைத்துவிடுகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வந்து அங்குள்ள ஸ்கேன் மையத்திற்குச் சென்று கருவில் இருப்பது ஆணா, பெண்ணா என்று அறிந்துகொண்டு கருவிலே கலைத்துவிடுகிறார்கள். அரசு அறிவித்துள்ள விதிமுறைகளையும் மீறி மக்கள் செயல்படுகின்றார்கள் என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதில் அளித்தார்.

173. தமிழ்நாட்டின் பெண் சிசுக் கொலை நடைபெறுவதை தடுக்க ஆய்வுகள் மேற்கொண்டு இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதை தடுக்க சிறப்புத் திட்டங்கள் உருவாக்க துறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XV முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

174. தமிழ்நாட்டில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்ற விவரத்தை குழு அறிய விரும்பியது.

175. தமிழ்நாட்டு அரசுமூலம் முதன் முதலில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் தமிழகத்திலே 1992 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலே வேறு எங்கும் இதுபோன்ற திட்டம் கிடையாது. சிசுக் கொலையினை தடுக்கும்பொருட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. துவக்கத்தில் இத்திட்டத்தின்கீழ் குடும்பத்தில் ஒரே பெண குழந்தை மட்டும் இருப்பின், அக்குழந்தையின் பெயரில் ரூ.25,000/– முதலீடு செய்யப்படுகிறது. தற்போது இத்தொகையானது ரூ.50,000/–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால், ஒவ்வொரு குழந்தையின் பேரிலும் ரூ.15,200/– முதலீடு செய்யப்படுகிறது. இத்தொகையானது முதலீடு செய்யப்பட்டு 20 ஆண்டுகள் கழித்து முதிர்வு தொகையாக வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு அரசு இத்திட்டம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தும்போது, முதலீடு செய்யப்பட்ட தொகை ஏன் 20 ஆண்டுகள் கழித்து வழங்கப்பட வேண்டும்? 18 வயது முடிந்த பெண் குழந்தைக்கு அந்த முதிர்வுத் தொகையை வழங்கலாம் என்று முடிவு செய்து, அறிவிப்பு வெளியிடப்பட்டு, முதிர்வுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்திற்காக ரூ.105 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உரிய சான்றிதழ்கள் சரிபார்த்தப்பின், முதலீடு தொகை வழங்கப்படுகிறது என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

176. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன? நிலுவையிலுள்ள விண்ணப்பங்களின் விவரத்தை குழு அறிய விரும்பியது.

177. இது தொடர்பாக அரசுச் செயலாளர் 2013–2014 ஆம் ஆண்டில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 16,885 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. பிறப்புச் சான்றிதழ், வருவாய்ச் சான்றிதழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவர் என அறியும் சான்றிதழ் மற்றும் பரிந்துரை கடிதம் ஆகிய ஆவணங்களுடன், பெற்றோரில் ஒருவர் கருத்தடை செய்து கொண்டதற்கான சான்றிதழையும் அளிக்க வேண்டும். இது சுலபமான முறைதான் என குழுவிடம் தெரிவித்தார்.

178. 2013–2014 இல் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற 16,885 விண்ணப்பங்கள் வரப்பெற்று நிலுவையில் உள்ளதை ஆய்வு செய்து உடனடியாக பயனாளிகளுக்கு நிதி உதவியை வழங்கிட துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XVI சிறப்பு தத்து மையங்கள்

179. தமிழ்நாட்டில் புதிதாக சிறப்பு தத்தெடுப்பு மையங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்துகின்றன. இவர்கள் எந்த அடிப்படையில் சிறப்பு தத்தெடுப்பு மையங்களை நடத்துகின்றார்கள். எத்தனை சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் இருக்கின்றன என்ற விவரங்களை குழு அறிய விரும்பியது.

180. இதற்கு அரசுச் செயலாளர் தமிழ்நாட்டில் 5 சிறப்பு தத்தெடுப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்கள்மூலம் 2013–2014 ஆம் ஆண்டு வரையில் 27 குழந்தைகள் தத்து கொடுக்கப்பட்டது. "சாரா காரா" வழிகாட்டுதலின்படி நாம் தத்தெடுத்துக் கொள்கிறோம். சிறப்பு தத்தெடுப்பு மையங்களுக்கு குழந்தைகளைத் தத்தெடுக்க வருபவர்கள் குழந்தை கலராக இருக்க வேண்டும், மூக்கு இன்னும் அழகாக இருக்க வேண்டும், ஆண் குழந்தையாக இருக்கவேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கின்றார்கள். அந்தமாதிரி சொல்கின்றவர்களை நாங்கள் அனுமதிப்பதில்லை என்ற விவரத்தை குழுவிடம் அவர் தெரிவித்தார்.

XVII தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படும் சேவை இல்லங்கள்

181. தனியார் சேவை இல்லங்களை நடத்துவதற்கு அரசு அனுமதிக்கிறதா? இதனைத் தொடங்குவதற்கு யார் அனுமதி கொடுக்கிறார்கள் என்பது குறித்து துறையிடம் குழு கேட்டது.

182. சேவை இல்லங்களை நடத்துவதை கட்டுப்படுத்துவதற்கு இளைஞர் நீதிச்சட்டம் (Juvenile Act) இருக்கிறது. இந்த சேவை இல்லங்களில் ஒரு நபரை தங்கவைக்கவேண்டுமென்றால் அந்த நபருக்கு குறைந்தபட்சம் 120 சதுர அடி இடம் பயன்பாட்டிற்காக இருக்க வேண்டும். 10 நபர்கள் தங்க வேண்டுமென்றால் 1200 சதுர அடியும், 100 பேர் தங்க வேண்டுமென்றால் 12,000 சதுர அடியும் இட வசதி இருக்கவேண்டும். இந்தச் சேவை இல்லங்களில் குழந்தைகள், பெரியவர்கள் எல்லோருமே தங்குகிறார்கள். அந்தமாதிரியான ஒரு நிலைமையில், இளைஞர் நீதிச்சட்டம் பிரகாரம் இதை செய்து கொண்டிருக்கிறோம். 2006 ஆம் ஆண்டு இளைஞர் நீதிச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. தற்போது தமிழக அரசு 2012 இல் அதற்கான விதிகள் போடப்பட்டு அதை ரெகுலர் செய்தார்கள். அதன்பிறகு, இதுசம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு கொண்டுவரப்பட்டது. அந்த வழக்கில் தலைமைச் செயலாளர் அவர்களும் ஒரு பார்ட்டியாக இருந்து பதில் சொல்லியிருக்கிறார். நாங்கள் அந்த வழக்கில் ஆஜர் ஆனபோது நடைமுறையில் இல்லாததை ஏன் நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்று நீதிபதி கேட்டார். நாங்கள் அதற்கு விளக்கம் தந்தோம். தற்போது சேவை இல்லங்கள் எப்படி இயங்க வேண்டும், என்னென்ன வசதிகள் இருக்க வேண்டுமென்பதை பரிசீலிக்க எங்கள் துறை மூலமாகவும், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை மூலமாகவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இப்போது வழிகாட்டி நெறிமுறைகள் தயாரித்து இருக்கிறோம். அதற்கு அரசின் ஒப்புதல் பெற்றபிறகு சமூகமானத் தீர்வு ஏற்படும். சேவை இல்லங்களில் இருப்பவர்களின் வாழ்க்கை முறைக்கு வழி வகுத்து, அவர்களின் வாழ்வு மேம்பட எல்லா வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கம் அளித்தார்.

183. ஒருசிலர் தவறான முறையில் சேவை இல்லங்களை நடத்துகின்றார்கள். சேவை இல்லங்களை நடத்துபவர்கள் முதியோர் ஓய்வூதியத் தொகைக்கு விண்ணப்பித்து, அந்தத் தொகையையும் அவர்களே பெற்றுக்கொள்கிறார்கள் என்றும் மேலும், அங்கு தங்கியிருக்கும் முதியோர்களை வெளியில் வராதபடி கிடங்கு (godown) போன்ற கட்டடங்களில் அடைத்து வைத்து துன்புறுத்துகின்றார்கள் என்றும் அவர்கள் வெளியில் வந்தபிறகு புலம்புகிறார்கள் என்றும் துறை ஏன் இதை தடுக்கவில்லை? என குழு கேட்டது.

184. மேலும், அந்தந்த ஊர்களில் விழாக்கள் நடக்கின்றன என்றும் விழாக்கள் நடைபெறுகின்ற இடத்திற்குச் சென்று நாங்கள் சேவை இல்லம் நடத்துகிறோம் என்றும் அங்கு இருப்பவர்களுக்கு சாப்பாடு வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றும் கேட்டவுடன் விழா நடத்துபவர்களும் கொடுத்துவிடுகிறார்கள் என்றும் அந்த சாப்பாட்டையே இரண்டு நாட்களுக்கு போடுகிறார்கள் என்றும் இதை குழு துறையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. இதற்குத் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு வலியுறுத்தியது.

185. இதற்கு அரசுச் செயலாளர் ஒருசில சேவை இல்லங்களில் நடக்கின்ற நிகழ்வுகள் பற்றி குழு சொன்னது முழுக்க முழுக்க உண்மையே. தமிழகத்திலே இதுவரை நாம் ஆய்வு செய்ததில் 1,719 இடங்கள் இதுபோன்ற தவறுகளை செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாங்கள் இளைஞர் நீதிச்சட்டம் பிரிவு 34 இன்படி நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். சேவை இல்லங்களை நடத்துபவர்கள் உடனடியாக முறையாக பதிவு செய்ய வேண்டும் என்றும், விதிமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறோம். அதன்படி 700–க்கும் மேற்பட்ட சேவை இல்லங்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். அப்படி பதிவு செய்த இல்லங்களில் கிட்டத்தட்ட 190 இனங்கள் தவறான போக்குகளைக் கையாண்டிருக்கின்றார்கள். முறைகேடாக ஓய்வூதியத் தொகையை வாங்கியிருக்கின்றார்கள். இவர்கள் SCRA-Foreign Resource, Foreign contribution வருகிறது என்று சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் நிறுத்திவிட்டார்கள் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து எங்கள் சேவை இல்லங்களுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாவற்றையும் நிறுத்திவிட்டார்கள் என்றும் குற்றம்சாட்டுகிறார்கள். ஆகவே, இதுசம்பந்தமாக அரசின் ஒப்புதல் பெற்றபிறகு இவற்றிற்கெல்லாம் தீர்வு கிடைத்துவிடும் என அவர் குழுவிடம் உறுதி அளித்தார்.

186. எல்லா மாவட்டங்களிலும் சேவை இல்லங்களை தொடங்குவதற்கு அரசு துணை நிற்கும் நிலையில் தனியார்கள் நடத்தக்கூடிய சேவை இல்லங்கள் அனைத்திற்கும் கடினமான விதிமுறைகளை வகுத்து, அவர்கள் அந்த விதிமுறைகளின் அடிப்படையில் சேவை இல்லங்களை நடத்துவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு மேலும் வலியுறுத்தியது.

187. இதன் தொடர்பாக துறை சேவை இல்லங்கள்மீது கடினமான விதிமுறைகளைப் பின்பற்றினால் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றுவிடுகிறார்கள். ஆனால், சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், இந்தச் சட்டத்தை எளிமையாக்கும்வகையில் நடவடிக்கை மேற்கொண்டு விதிமுறைகளை வகுக்க வேண்டும் என அரசுச் செயலாளர் மேலும் விளக்கமாக பதிலளித்தார்.

188 ஒருசில சேவை மையங்கள் இலாபத்திற்காக ஆரம்பிக்கப்படுகிறது. அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருசிலர் குழந்தைகளை பிச்சை எடுக்க பயன்படுத்துகின்றார்கள். அதுபோன்று செயல்படும் சேவை இல்லங்கள் செயல்படுவதை தடைசெய்து, அரசுமூலம் பெறும் அனைத்து உதவிகளையும் உடனே தடுத்து நிறுத்த வேண்டும். உண்மையான சேவை மனப்பான்மையோடு சேவை இல்லங்களை தொடங்குபவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து, ஒத்துழைப்புத்தர வேண்டும் என குழு துறையிடம் மேலும் வலியுறுத்தியது.

189 குழுவின் ஆலோசனையை ஏற்று செயல்படுகிறோம் என்று அரசுச் செயலாளர் குழுவிடம் உறுதி அளித்தார்.

190. சேவை இல்லங்கள் நடத்துவதற்கு தனியார் அனுமதி கேட்கும் நேர்வுகளில் சேவை இல்லங்கள் அனைத்திற்கும் சட்டத்திற்குட்பட்டு விதிமுறைகளை கடினமாக வகுத்து இதன்கீழ் தனியார் சேவை இல்லங்களை துவக்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XVIII பணிபுரியும் பெண்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

191. பணிபுரியும்/நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்/ ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள்/அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகளை சேர்ப்பதற்கு பெற்றோர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்குள் இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை மேலும் உயர்த்த வழிவகை இருக்கின்றதா என்று துறையிடம் குழு கேட்டது.

192. இதற்கு, இது குறித்த பரிசீலனை செய்கிறோம் என அரசுச் செயலார் குழுவிடம் கூறினார். மேலும், தமிழ்நாடு அரசு இந்தத் தொகையை உயர்த்த வேண்டாமென்று சொல்லியிருக்கிறது. இருப்பினும் மறுபடியும் துறைமூலம் முயற்சி செய்கிறோம். ஆதரவற்றவர்களுடைய குழந்தைகளை எடுத்து வளர்க்க குடும்ப ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்குள் இருந்தால் போதும். ஆனால் ரூ.72,000/– குடும்ப வருமானம் உள்ளவர்களுக்கு திருமண உதவித் திட்டம் கொடுக்கின்றோம் என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

193. திருமண உதவித்திட்டம் பெற குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/– ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், ஆதரவற்ற குழந்தைகளின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.24,000/– என்று நிர்ணயிக்கப்பட்டள்ளதை ரூ. 72,000/– ஆக உயர்த்த துறை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XIX மங்களமாலை திட்டம்

194. "சமூக நல இயக்குநரகத்தின் கீழ் உள்ள 27 குழந்தைகள் இல்லங்களிலும், 7 சேவை இல்லங்களிலும் ஆதரவற்ற பெண்களுக்கும், ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கும் புகலிடம் அளிக்கப்படுகிறது என்றும், இப்பெண்குழந்தைகள் பள்ளிப் படிப்பை முடித்து திருமண வயதை அடையும்பொழுது திருமணம் செய்வித்து அவர்களது குடும்ப வாழ்க்கை நிம்மதியாக அமையும் வகையில் ஆதரவு அளித்து உதவுவது அவசியம் என குழு கருதுகிறது.

195. ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்துகொள்ள உதவும் மங்களமாலை திட்டத்தை அரசு பொறுப்பேற்றவுடன் அறிவித்து, தகுந்த துணையைத் தேர்ந்தெடுக்க உதவிடும் வகையில் அவர்களுக்கு ஆதரவான சேவைகள் அளிக்கப்படும் என்றும், தற்போது உள்ள அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவியும் அளிக்கப்படும் என்றும், இந்தத் திட்டம் ஆதரவற்ற பெண்களுக்கு பொருத்தமான மணமகன் அமைவதற்கு உதவிபுரிவதோடு மட்டுமின்றி அப்பெண்கள் தவறான நபர்களிடம் சிக்கிக்கொள்வதையும் தடுக்கிறது என்பதையும் குழு அறிகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை குழு அறிய விரும்பியது.

196. இதற்கு 30–5–2014 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் மங்களமாலை திட்டத்தின் கீழ் ஆதரவற்ற பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கும்பொருட்டு தகுதியான வரன்கள் அமைவதற்கு கடந்த காலத்திலே துறையின் மூலம் முயற்சி செய்தார்கள். ஆனால், திருமண தகவல் மையங்களில் போதுமான தகவல்கள் இல்லை. ஆதரவற்றவர்களை தாமாக முன்வந்து திருமணம் செய்துகொள்ளும் அளவில்

ஆண்களிடமிருந்து வரவேற்பு இல்லை. ஆதரவற்ற பெண்களின் பின்புலங்களை தெரிந்துகொண்டுதான் திருமணம் செய்துகொள்ள முடியும் என்று பெரும்பாலான ஆண்கள் கருதுகிறார்கள் என்று சமூகநலத்துறை ஆணையர் தெரிவித்தார்.

197. மேலும், 2012 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டம் 3 வருடம் ஆகிவிட்டது என்றும், ஆதரவற்ற பெண்கள் 18 வயது முடிந்ததும் அவர்கள் சட்டப்பூர்வமான பாதுகாவலர்களிடம் சென்றுவிடுகிறார்கள். இவர்கள் அனைத்து திருமண உதவித் திட்டங்களின் மூலம் பயன்பெறவும் வாய்ப்புள்ளது. இது குறித்து விவரங்கள் தற்போது துறையிடம் தனியாக இல்லை என சமூகநலத் துறை ஆணையர் குழுவிடம் கூறினார்.

198. சட்டப்பூர்வமான பாதுகாவலர்கள் எப்படி வருகிறார்கள் என்பதை குழு அறிய விரும்பியது.

199. சென்னையில் நடந்த குழுக் கூட்டத்தில், ஆதரவற்ற பெண் குழந்தைகள் என்று சொன்னாலும் அவர்களுக்கு சட்டப்பூர்வமான பாதுகாவலர்கள் இருக்கிறார்கள். தாய் தந்தை இழந்தவர்கள், நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டவர்கள், அதிக காலங்கள் தண்டனை பெற்றவர்கள் போன்ற இவர்கள் எல்லாம் ஆதரவற்றவர்கள் என்று சொல்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள இவர்களை ஆதரவற்றவர்கள் என்று சொல்கிறார்கள். உதாரணமாக எடுத்துக்கொண்டால் அவர்களுடைய அண்ணன் இருப்பார்கள். அக்காள் இருப்பார்கள். அவர்கள் இவர்களுக்கு ஆதரவுக் கரம் கொடுக்கிறார்கள். இவர்கள் கல்வி பெறவேண்டுமென்பதற்காகத்தான் அனுப்பிவைக்கிறார்கள் என சமூக நல ஆணையர் குழுவிற்கு விளக்கம் அளித்தார்.

200. இதுபோன்று 18 வயது கடந்த பெண்கள் சேவை இல்லங்களில் தங்குவதில்லை, அவர்கள் சட்டப்பூர்வமான பாதுகாவலர்களிடம் சென்று விடுவதையும் குழு அறிந்தது. எனவே, இது குறித்த விவரங்களையும் காரணங்களையும் சேகரித்து ஆய்வு செய்யவும் மங்களமாலை திட்டம் குறித்து பயனாளிகள் மற்றும் சட்டபூர்வ பாதுகாவலர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த உடனடியாக துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

201. மங்களமாலை திட்டம் ஆதரவற்ற பெண்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் மற்றும் பொருத்தமான மணமகன் தேர்வு செய்யப்படவேண்டும் என்பதுதான் அறிவிப்பின் நோக்கம் ஆகும் என குழு அறிவுறுத்தியது ஆனால் இத்திட்டத்தின் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை என குழு கருதுகிறது.

202. குழுவின் இக்கருத்து நல்ல விதமாக ஏற்றுக்கொள்ளக்கூடியது. வருகின்ற காலங்களிலே இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்கின்றோம் என சமூக நல ஆணையர் மேலும் குழுவிற்கு உறுதி அளித்தார்.

203. ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்துகொள்ள உதவுவதற்காக "மங்களமாலைத் திட்டம்" கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு யாருமே இல்லாததால்தான் சேவை இல்லத்திற்கு வருகிறார்கள். சமூக விரோதிகளால் இவர்களுக்கு பாதிப்பு வரக்கூடாது என்றுதான் இந்தத் திட்டம் அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது. துறைத் தலைவர்கள் தங்களுக்கு கீழேயுள்ள அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்கி மங்களமாலை திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XX சென்னை கொசப்பேட்டை அரசு குழந்தைகள் காப்பகத்தை முறையாக பராமரித்தல்

204. குழு, சென்னை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் செய்தபோது, சென்னை கொசப்பேட்டையில் அமைந்துள்ள அரசு குழந்தைகள் காப்பகத்தில் காலியாக உள்ள 13 இடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அங்குள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பெறப்படும் தண்ணீர் கழிவு நீர் கலந்து வருவதாகவும் காப்பகத்தில் உடைந்து போன தரைக்கு பதிலாக புதிதாக தரை அமைத்துத் தர வேண்டும் என்றும் குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கைகளின்மீது துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை குழு அறிய விரும்பியது.

205. அரசு குழந்தைகள் காப்பகத்தில் அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது நல்ல குடிதண்ணீர் வழங்குவதற்கு மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடைந்துபோன உள்தரையும் தற்போது சீர் செய்யப்பட்டுவிட்டது என அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

206. குழந்தைகள் காப்பகத்தின் பராமரிப்புப் பணிகள் யாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என குழு துறையிடம் கேட்டது.

207. குழந்தைகள் காப்பகத்தின் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசப்பேட்டையில் அமைந்துள்ள குழந்தைகள் காப்பகத்தை மதிப்பீட்டுக் குழு ஆய்வு செய்து, அறிவுரைகள் வழங்கியுள்ளதால், இன்னும் சிறப்பாக செயல்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு உறுதியளித்தார்.

208. குழந்தைகள் காப்பகங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு சீரமைக்க ஆண்டுதோறும் சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறையுடன் இணைந்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXI குழந்தைத் திருமண தடைச்சட்டம்

209. தமிழ்நாட்டில் குழந்தைத் திருமணங்கள் அதிகளவில் நடைபெறுகின்றன என்றும், துறைமூலம் குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன என்றும், குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்கு துறைமூலம் என்னென்ன விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை குழு அறிய விரும்பியது.

சென்னையில் 30.5.2014 அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் அரசுச் செயலாளர் பின்வருமாறு தெரிவித்தார் :–

210. குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்கு கடந்த இரண்டு ஆண்டிலே துறைமூலம் மிக மிகச் சிறப்பாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை கூறும்போது மகிழ்ச்சி அடைகிறேன். 1) வளரிளம் பெண்கள்மூலமாக இந்தத் தகவல் பரப்பப்படுகின்றது, 2) Hand Booklets வழங்கப்படுகிறது, 3) திரைப்படம் மூலமாக இந்தச் சேவை விவரம் பொதுமக்களிடையே பரப்புவதற்கு இந்த மூன்று கருத்துகளின் அடிப்படையில், இதற்கான திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு, தொலைக்காட்சிகளிலும் மற்றும் திரையரங்குகளிலும் ஒளிபரப்பப்படுகின்றன. இதன்மூலம் மக்களுக்கு நல்ல விழிப்புணர்வு ஏற்படுகின்றது.

211. குழந்தைத் திருமணங்கள் குறித்து, மாவட்ட ஆட்சியர், பஞ்சாயத்து தலைவர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர்கள் தலையிட உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில், இதுவரை 1,651 குழந்தைத் திருமணங்கள் கண்டறியப்பட்டு தடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் 701 குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகள் திருமணத்தைத் தடுக்கும் வகையில், துணிச்சலுடன் செயலாற்றி, சிறப்பாக பணிபுரிந்துள்ள சமூக நல அலுவலர்களை உற்சாகமூட்டும் வகையில், அரசு 'அண்ணா பதக்கம்' வழங்கி வருகிறது என்று குழுவிடம் அரசுச் செயலாளர் விளக்கினார்.

212. தமிழ்நாட்டில் குழந்தை திருமணத் தடை சட்டம் குறித்த விழிப்புணர்வு விளம்பரங்கள் திருமண முகூர்த்த நாட்களுக்கு முந்தைய நாட்களில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த திரையரங்குகளில் காண்பிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

213. அரசின் ஆணையின்படி விழிப்புணர்வு விளம்பரங்கள் பொது மக்களுக்கு தெரியப்படுத்தும்வகையில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆண்டிற்கு மொத்தம் 63 முகூர்த்த நாட்கள் கணக்கிடப்பட்டு அனைத்து முகூர்த்த நாட்களின் முந்தைய நாட்களிலும் திரையரங்குகளில் விளம்பரப்படம் காண்பிக்கப்படுகின்றது. மத்திய அரசு சார்பில் அட்சய திருதியை நாளினை முன்னிட்டு அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னும் பின்னும் விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் நம் மாநிலத்தில்தான் 63 முகூர்த்த நாட்களுக்கு முந்தைய நாட்களில் விளம்பரம் செய்யப்படுகிறது என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

214. குழந்தைத் திருமணங்கள் அறவே நடத்தக்கூடாது என்று அனைத்து கிராமங்களிலும் உள்ள மக்களுக்குத் துறைமூலம் தெரியப்படுத்தப்படுகிறதா என்பதை குழு அறிய விரும்பியது.

215. மேலும் சில இடங்களில் உறவு முறைகள் தொடரவேண்டும் என்பதற்காகவும், பரம்பரை சொத்துகள் காப்பாற்றப்படவேண்டும் என்ற அடிப்படையிலும் குழந்தைத் திருமணங்கள் செய்யப்படுகின்றன. அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழு துறையிடம் வலியுறுத்தியது.

216. குழந்தைத் திருமணங்களை அறவே தடுப்பதில் சமூக நலத் துறை இன்னும் முனைப்பாக செயல்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது. இப்பணியில் ஒவ்வொரு இடத்திலுமுள்ள சமூக நல அலுவலர், காவல் துறை ஆய்வாளர், ஊராட்சி மன்றத் தலைவர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் ஒருங்கிணைந்து இப்பணியை செவ்வனே செய்யவேண்டுமென்று குழு கருதுகிறது.

217. சில இடங்களில் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவது கண்டறியப்பட்டு அலுவலர்கள் சென்று தடைசெய்துவிட்டு சென்று விடுகிறார்கள். அதன் பிறகு அந்த குடும்பத்தினர் மறுபடியும் அந்தத் திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை குழு அறிய விரும்புகிறது.

218. இதுபோன்ற நேரங்களில் வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுக்கப்படும்; மேலும் அத்திருமணத்திற்கு வருகை புரிந்தோர்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

219. குழந்தை திருமண வழக்குப் பதிவு செய்தல், அலுவலர்களுக்கு பரிசு கொடுத்தல் இவை மட்டும் போதாது. குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்றால், முன்பே விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். துறையின் நடவடிக்கையினால் 75 முதல் 90 சதவீதம் மக்கள் விழிப்புணர்வு பெற்று விடுகிறார்கள். மீதமுள்ள 10 சதவீத மக்கள் விவரம் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் இத்தகைய திருமணங்களை நடத்தி முடிக்கும்போது தண்டனைக்கு ஆளாகிறார்கள். எனவே 100 சதவீதத்தினருக்கும் குழந்தைத் திருமணம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துறை முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

220. விருதுநகர் மாவட்டம், மண்குண்டான்பட்டி என்ற கிராமத்தில் நடக்கவிருந்த குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்தி, பிறகு அந்த குழந்தையை மீண்டும் அதே பள்ளியில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் குழுவிடம் தெரிவித்தார். மேலும் மண்குண்டான்பட்டி என்ற கிராமத்தில் நடக்கவிருந்த குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்தி மீட்கப்பட்ட குழந்தையின் குடும்பம் வெள்ளக்கோயில், (திருப்பூர் மாவட்டம்) என்ற ஊருக்கு குடிபெயர்ந்து சென்றுள்ளனர்.

தற்பொழுது அக்குழந்தை வெள்ளக்கோவிலில் உள்ள அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு முடித்து 12 ஆம் வகுப்பு படிக்க உள்ளார் எனவும் குழுவிற்கு துறை தெரிவித்தது.

221. குழு சிவகங்கை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் செய்த போது வானொலியில் எப்.எம் அலைவரிசை தற்போது அனைத்து கிராமம்/நகரம் என அனைத்துத் தரப்பிலும் பிரபலமாகி வருவதால் குழந்தை திருமண தடைச் சட்டத்தின்படி குழந்தைத் திருமணம் நடைபெறா வண்ணம் உரிய விழிப்புணர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

222. மேலும், வானொலியில் எப்.எம் அலைவரிசையில் குழந்தைத் திருமணம் தடை சட்டத்தைக் குறித்து விழிப்புணர்வு வழங்கிட தக்க நடவடிக்கை எடுக்கும்படி மக்கள் தொடர்பு அலுவலருக்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் துறை தெரிவித்தது.

223. தமிழகத்தில் குழந்தைத் திருமணத்தைத் தடுத்து பெண் குழந்தைகளின் கல்வி நிலையை உயர்த்தவும், உடல் நிலை குறித்து விளக்கவும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தனியாக இதற்கென அலுவலர் ஒருவரை மாவட்டந்தோறும் நியமனம் செய்யலாம் என குழு கருதுகிறது. எனவே, இதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXII புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்

224.சத்துணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உணவு தரமானதாக உள்ளதா? கண்காணிக்க துறையிடம் சிறப்பு திட்டங்கள் இருக்கிறதா? மேலும் சத்துணவு மையக் கூடங்கள் ஆய்வு செய்யப்படுகிறதா? அங்கு சமைக்கப்படும் உணவுகள் சுவைத்துப் பார்த்து ஆய்வு செய்யப்படுகிறதா? இது குறித்த துறையின் கண்காணிப்பு எந்த அளவிற்கு இருக்கிறது என்று குழு அறிய விரும்பியது.

225. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு ஒவ்வொரு மையத்திற்கும் சென்று தணிக்கை செய்து அறிக்கை தர வேண்டுமென்று துறையின் மூலம் உத்தரவிடப்பட்டிருக்கிறது. மைய அரசின் குழு ஒன்று தமிழ்நாட்டிற்கு வருகை தந்து, சத்துணவு மையங்களை நேரடியாக ஆய்வு செய்தது. இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் மிக அதிக அளவில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறதென்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது மட்டுமின்றி குறிப்பிட்ட நாட்களான திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாவட்ட அனைத்து மையங்களிலும் பள்ளிகளுக்குக் குழுக்களை அனுப்பி ஆய்வு செய்து அதன் அறிக்கைகளை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இது மட்டுமின்றி பள்ளித் தலைமை ஆசிரியர்களால் தர – சுவைப் பதிவேடு (Quality-taste register) பராமரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதால் சத்துணவுத் திட்டம் பெருமளவில் சிறப்பாக நடைபெற்று வருகிறது என அரசுச் செயலாளர் குழுவிடம் பதிலளித்தார்.

226. தமிழ்நாட்டில் எத்தனை சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன? எத்தனை அங்கன்வாடி மையங்கள் உள்ளன என துறையிடம் குழு கேட்டது.

227. இதற்கு அரசுச் செயலாளர் மொத்தம் 42,619 சத்துணவுக் கூட மையங்கள் மற்றும் 54,499 அங்கன்வாடி மையங்கள் உள்ளன என குழுவிடம் தெரிவித்தார்.

228. சத்துணவில் வழங்கப்படும் கலவை சாதங்களைப் பொறுத்தவரையில், ஒரு வாரத்திற்கு இன்னின்ன நாட்களில் இன்னின்ன உணவுகள் வழங்கப்படும் என்ற விவரங்களை போர்டில் எழுதி வைப்பதுடன், உணவுகள் வழங்குவதில் ஏதாவது குறைபாடு இருந்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலரின் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு, அவருக்குப் புகார் தெரிவிக்கலாம் என்று போர்டில் எழுதி வைத்தால், சத்துணவு மையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் கவனமுடன் செயல்படுவார்கள் என்பதை குழு வலியுறுத்தியது.

229. சத்துணவுக்கூடங்கள் கட்டும்போது, அவற்றின் முன்பக்கச் சுவரில் கருப்புப் பெயின்ட் அடித்து கரும்பலகைமாதிரி வைத்திருப்பார்கள். அவற்றில் ஒவ்வொருநாளும் என்ன உணவு பரிமாறப்படுகிறது, எத்தனை குழந்தைகள் இருக்கின்றன, ஒரு குழந்தைக்கு இன்னின்ன அளவுவீதம், எவ்வளவு அரிசி, எவ்வளவு பருப்பு வழங்கப்படுகிறது என்பது குறித்த விவரங்கள் அனைத்தையும் எழுதிவிடுவார்கள் என சத்துணவுத்திட்ட இணை இயக்குநர் குழுவிடம் தெரிவித்தார்.

230. உணவுப் பொருள்கள் அட்டவணையில் குறிப்பிட்ட நாளன்று குறிப்பிட்ட அளவு தரமான உணவு வழங்கப்படாத நேர்வுகளில் அந்தந்த மையங்களிலிருந்து எந்த அலுவலருக்கு புகார் செய்யலாம் என்றும் அவருடைய தொலைபேசி எண் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டணமில்லா தொலைபேசி குறிப்பிட்டு விரைவில் போர்டு அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

231. பொதுமக்கள் சென்று பார்க்கிறபோது அந்தந்த நாட்களில் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள உணவு குறிப்பிட்ட நாட்களில் வழங்கப்படாமலிருந்தால் என்ன செய்ய வேண்டும் என்று குழு துறையிடம் கேட்டது.

232. அவர்கள் உயர் அதிகாரிகளுக்குப் புகார் செய்ய வேண்டும். புகார் எழுதி அங்கு வைக்கப்பட்டுள்ள புகார் பெட்டியில் போடவேண்டும் என சத்துணவுத் திட்ட இணை இயக்குநர் குழுவிடம் தெரிவித்தார்.

233. பெட்டியில் போடப்படும் புகார்களை ஒரு வாரம் கழித்துக்கூட அதிகாரிகள் எடுத்துப் பார்ப்பார்கள். இதனால், பொதுமக்களுக்கு உபயோகம் இருக்காது. எனவே, கரும்பலகையின் மேல் பகுதியில் இன்னின்ன நாட்கள் இன்னின்ன உணவுப்பொருட்கள் வழங்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு, பின்னர், கீழ்ப்பகுதியில் குறிப்பிட்ட நாட்களில் அந்த உணவுப்பொருட்கள் இல்லையென்றால், அதுகுறித்து எந்த அலுவலருக்குப் புகார் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டு, அந்த அதிகாரியின் தொலைபேசி எண்ணையும் எழுதி வைக்கவேண்டும். இதைக் குழுவின் அறிவுரையாகவே எடுத்துக்கொள்ளவும் என குழு துறையிடம் தெரிவித்தது.

234. இதுகுறித்து ஏற்கெனவே துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கட்டணமில்லா தொலைபேசி வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரையிலும் கட்டணமில்லா தொலைபேசி வரவில்லை என சத்துணவுத் திட்ட இணை இயக்குநர் குழுவிடம் தெரிவித்தார்.

235. கட்டணமில்லா தொலைபேசி வரும் வரையிலும் துறை காத்திருக்கத் தேவையில்லை. சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களின் தொலைபேசி எண்களை எழுதி வைத்து, பொதுமக்களுக்கு புகார்கள் இருக்கும் நேர்வுகளில், அந்தத் தொலைபேசி எண்களுக்குத் தொடர்புகொள்ளுமாறு தெரிவியுங்கள். இதன்காரணமாக பணியாளர்களிடையே ஒரு பய உணர்வு ஏற்பட வாய்ப்பிருக்கிறது என குழு வலியுறுத்தியது.

236. சத்துணவில் வழங்கப்படும் முட்டைகளைப் பொறுத்தவரையில், நிர்ணயிக்கப்பட்ட எடைக்கும் குறைவாக உள்ள முட்டைகளே வழங்கப்படுவதாக பரவலாகக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என குழு கருதியது. பொதுவாக சத்துணவில் வழங்கப்படும் முட்டையின் எடை எவ்வளவு இருக்கவேண்டும் என்பதை குழு அறிய விரும்பியது.

237. சத்துணவில் வழங்கப்படும் முட்டையின் எடை 46 முதல் 52 கிராம் இருக்க வேண்டும். கடந்த ஆகஸ்டு மாதம் வரையிலும் எடை குறைவான முட்டைகள் வழங்கப்பட்ட சூழ்நிலைகள் இருந்தன. தற்பொழுது சத்துணவு மையங்களை புலத் தணிக்கை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது முட்டையின் எடை சரிபார்க்கப்பட்டு எட்டு வண்ணங்களில் முத்திரை இடப்படுகிறது. எந்தத் தேதியில், எந்த நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற முட்டை என்ற விவரம் அடங்கிய முத்திரை ஒவ்வொரு முட்டையின்மீதும் பொறிக்கப்படும். அதை வைத்து, முட்டையின் எடை குறைவாக இருந்தாலோ அல்லது தரம்

குறைவாக இருந்தாலோ சம்பந்தப்பட்ட நிறுவனங்களின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர், எடை குறைவான முட்டைகள் வழங்கப்படுவதாக புகார்கள் எதுவும் இல்லை என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

238. குழந்தைகளுக்கு பள்ளி சத்துணவு மையங்களில் முட்டை வழங்கப்படும் நாட்களில் முட்டையின் எடையினை நிர்ணயிக்கப்பட்ட அளவில் உள்ளதா என்பதை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டுமென்றும், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXIII புதியவகை கலவை சாதத்தை அனைத்து வட்டாரங்களிலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல் ;

239. புதியவகை கலவை சாதம் வழங்கும் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரம் தேர்வு செய்யப்பட்டு, 20.3.2013 முதல் துவங்கி அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினை ஒவ்வொரு மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் விரிவுபடுத்த துறை நடவடிக்கை எடுக்குமா என்பதை குழு அறிய விரும்பியது.

240. புதியவகை கலவை சாதம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 91,881 குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர் என்றும், இத்திட்டம் செயல்பாட்டிற்காக 2013–2014 ஆம் நிதியாண்டில் ரூ 3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் துறை குழுவிடம் தெரிவித்தது.

241. மேலும், வகை வகையான கலவை சாதங்கள் வீடுகளில் அடிக்கடி தயாரிக்கப்படுவதில்லை என்ற காரணத்தினாலும், ஏற்கெனவே ஒரே விதமான மதிய உணவினை தினந்தோறும் உண்பதாலும், குழந்தைகள் இவ்விதமான கலவை சாதத்தினை வீணாக்காமல் மிகவும் விரும்பி உண்ணுகின்றனர் என்றும் கலவை சாதம் வழங்கும் திட்டம் துவங்கப்பட்ட பிறகு மதிய உணவு பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் துறை குழுவிடம் தெரிவித்தது.

242. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாலும், ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யவும் புதிய வகை கலவை சாதத்தை ஒவ்வொரு மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் படிப்படியாக விரிவுபடுத்திட துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

243. சத்துணவு மையங்களில் 13 வகையான கலவை சாதங்கள் கொடுப்பதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றை தயாரிப்பதற்கு சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்ற விவரத்தை குழு அறிய விரும்பியது.

244. செஃப் தாமு மற்றும் Hotel Management Institution மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று பள்ளிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களில் ஒரு சோதனை அடிப்படையில் (trial basis) செய்துகொண்டிருக்கிறோம். சிறு சிறு குறைபாடுகள் இருக்கின்றன. கடாய், பெரிய பாத்திரங்கள் மற்றும் கரண்டி போன்றவை வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மிக்சி வேண்டுமென்று கேட்டார்கள். மிக்சியும் வாங்கிக் கொடுத்து வருகிறோம். இந்த ஆண்டு முதல் இந்தத் திட்டம் இன்னும் விரிவுபடுத்தப்படும் என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

XXIV சத்துணவு மையங்களில் தரமான உணவு வழங்குவதை கண்காணித்து நடவடிக்கை எடுத்தல்

245. குழு திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் செய்தபோது, அங்கே ஒரு பள்ளியில் மாணவர்களுக்கு சத்துணவில் வழங்கப்பட்ட முட்டை சரியாக வேகவில்லை என்பதையும் வழங்கப்பட்ட உருளைக் கிழங்கு சரியாக வேகவில்லை மற்றும் உருளைக் கிழங்கு துண்டுகள் கருப்பாக இருந்ததாகவும், மாணவர்களுக்கு சரியாக ஊட்டச்சத்து கிடைப்பதற்கு நல்ல காய்கறிகளையும் நல்ல உருளைக்கிழங்குகளையும் வாங்கி சத்துணவில் பயன்படுத்த குழு துறையிடம் தெரிவித்தது. மேலும், மாணவர்களுக்கு சத்துணவில் வழங்கும் முட்டை மற்றும் உருளைக் கிழங்கு தரமாக வழங்கப்படுகிறதா என்பதை துறை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு விரும்புகிறது. இதன் மீது துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

246. சத்துணவிற்கு முட்டை கொள்முதல் செய்வது centralise செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு நிலைமை சீர் செய்யப்பட்டுவிடும். உருளைக்கிழங்குகளை சத்துணவு அமைப்பாளர் கடைக்கு சென்று வாங்கி வருகிறார். அவர்களிடம் சரியான பொருட்கள் வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம். முட்டைகளை வாங்கி வந்து, சுடு நீரில் நன்கு வேகவைத்து, மறுபடியும் அதனை குளிர்ந்த நீரில் மாற்றி, ஓடுகளை நீக்கி வழங்குவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது சிறப்பான முறையில் நன்கு வேகவைத்த முட்டை மற்றும் உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது என அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

247. குழு திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வு செய்தபோது ஒரு சத்துணவு மையத்தில் முட்டையின் ஓடு சரியாக உரிக்கப்படாமல், வெள்ளைக்கருவே இல்லாமல் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதை குழு கண்டறிந்தது. இவ்வாறு முட்டையின் வெள்ளைக்கருவே இல்லாமல் வழங்குவது திட்டத்தின் நோக்கம் பாழடிப்பதற்கு சமமாகும். தவறு செய்யும் பணியாளர்மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்றவர்களுக்கும் பயம் இருக்கும். தவறு செய்பவர்கள்மீது வழங்கப்படும் தண்டனை குறித்த விவரங்களையும் பொது மக்களிடம் விளம்பரம் செய்தால் நன்றாக இருக்கும் என குழு துறையிடம் தெரிவித்தது.

248. இதற்கு அரசுச் செயலாளர் குழுவின் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியது. இனி வருங்காலங்களில் குழுவின் கருத்திற்கேற்றபடி நடவடிக்கை மேற்கொள்கிறோம் என்று அவர் குழுவிடம் உறுதியளித்தார்.

249. சத்துணவு மையங்களில் முட்டை, பழங்கள், காய்கறிகள், உருளைக்கிழங்கு போன்ற பொருட்களில் தரமான நல்ல பொருட்களை வாங்கி சத்துணவில் குழந்தைகளுக்கு தரமாக வழங்கப்படுகிறதா என்பதை கண்காணித்து உரிய நடவடிக்கையையும், தவறு செய்யும் பணியாளர்மீது கடும் நடவடிக்கையையும் துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

250. குழு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, இம்மாவட்டத்தில் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள் சத்துணவுத் திட்டத்தினால் 1,192 பேர் பயன்பெற்றுள்ளனர் என்று குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. மற்ற மாவட்டங்களில் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, காஞ்சிபுரத்தை தவிர முதியோர் ஓய்வூதியப் பயனாளிகளுக்கு சத்துணவு வழங்கப்படுவதில்லை என்று குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

251. இதுகுறித்து அரசுச் செயலாளர் முதியோர் ஓய்வூதியத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் பயனாளிகள் தினமும் மதியம் சத்துணவு மையங்களில் ஒரு வேளை சாப்பிடலாம் என்ற உத்தரவு இருந்தது. சத்துணவு மையங்களில் சென்று சாப்பிட விரும்பாதவர்கள் அரிசியாகப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி, இத்திட்டம் ஆரம்பித்தபோது முதன்முதலில் 40,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அதன் பிறகு

ரேஷன் கடைகளில் அரிசி வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னவுடன், ரேஷன் கடைகளில் 20 கிலோ அரிசி கொடுக்கப்பட்டதிலிருந்து பயனாளிகள் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து தற்போது அனைத்து மாவட்டங்களிலும் 2,307 பயனாளிகள் பயனடைகிறார்கள் என்று அவர் குழுவிற்கு தெரிவித்தார்.

XXV சத்துணவு மையங்களில் மின் வசதி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

252. சத்துணவு மையங்களில் சமையலறைகளுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

253. காலை 10–00 மணியிலிருந்து 12–00 மணி வரை சத்துணவு மையங்கள் செயல்பட்டதால் அனைத்து மையங்களிலும் மின்சார வசதி தேவையில்லாமல் இருந்தது. சில சத்துணவு மையங்களில் மின்சார வசதி இருக்கிறது. மிக்சி தற்போது பயன்படுத்த வேண்டியுள்ளதால் பள்ளிகளிலிருந்து மின்சாரம் எடுக்கவேண்டியுள்ளது என்ற நிலையை குழுவிடம் சத்துணவுத் திட்ட இணை இயக்குநர் தெரிவித்தார்.

254. கிராமங்களில் உள்ள சத்துணவு மையங்களில் மின்சார இணைப்பு இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. பஞ்சாயத்து தலைவர்களிடம் சொல்லி மின்சாரத்திற்காக முன்வைப்புத் தொகை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம் அல்லவா என்று குழு துறையிடம் கேட்டது.

255. இது குறித்து சத்துணவுத் திட்ட இணை இயக்குநர் புதியதாக கட்டப்படும் 28,000 சத்துணவு மையங்களில் மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று குழுவிற்கு விளக்கினார்.

256. எல்லா சத்துணவுக் கூடங்களுக்கும் கலவை இயந்திரம், கிரைண்டர் மற்றும் மிக்சி கொடுக்கப்படுகிறது. சத்துணவுக் கூடங்களில் மின்சார வசதி இல்லையென்றால், உபகரணங்கள் கொடுப்பதில் பயன் இல்லாமல் போகும் என்பதால் அனைத்து சத்துணவுக் கூடங்களிலும் மின்சாரம் கிடைக்க துறை தூரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXVI சத்துணவு மையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல்

257. தற்போது 42,619 சத்துணவு மையங்கள் இருப்பதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இவற்றில் எத்தனை மையங்களுக்குப் சொந்த கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன? எத்தனை மையங்கள் பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன போன்ற விவரங்களை குழுவிற்குத் தெரிவிக்க குழு துறையிடம் கோரியது.

258. சத்துணவுத் திட்டம் தொடங்கப்படும்போது வெறும் சமையல் அறை மட்டும்தான் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர், உணவுப்பொருட்களைக் கொள்முதல் செய்து பத்திரமாக வைக்க வேண்டும் என்பதற்காக 2006–2007 ஆம் ஆண்டு முதல் 2012–2013 ஆம் ஆண்டு வரையிலும் 28,856 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, 8,367 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 20,489 கட்டடங்களுக்கு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து மையங்களுக்கும் காஸ் சிலிண்டர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. 3, 4 வருடங்களாக, படிப்படியாக 7,000 மையங்களுக்கு காஸ் சிலிண்டர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து மையங்களுக்கும் காஸ் சிலிண்டர் வசதி செய்து கொடுப்பதற்காக இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் 86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சத்துணவுத் திட்ட இணை இயக்குநர் குழுவிடம் தெரிவித்தார்.

259. சத்துணவு தயார் செய்பவர்களுக்கு பயிற்சி அளிப்பதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்காக அரசாங்கத்திலிருந்து எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்றும் ஒரேமாதிரியாக, சிஸ்டமேட்டிக்காக செய்வதற்கு உபகரணங்கள் தேவைப்படுகிறது என குழு கருதுகிறது. இவற்றில் இவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்களா என்பதை குழு அறிய விரும்பியது.

260. 3,362 மதிய உணவு மையங்களுக்கு மையம் ஒன்றிற்கு ரூபாய் 22,350 வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 24,470 மதிய உணவு மையங்களுக்கு 590.36 கோடி ரூபாய் செலவில் சமயலறை மற்றும் வைப்பறை கட்ட திட்டம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 5.34 கோடி ரூபாய் செலவில் மிக்சி வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் 86 கோடி ரூபாய் செலவில் எரிவாயு இணைப்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் குழுவிடம் அரசுச் செயலாளர் குறிப்பிட்டார்.

261. அனைத்து சத்துணவுக் கூடங்களுக்கும் எரிவாயு இணைப்பு கொடுக்க துறை அலுவலர்களுக்கு மத்திய அரசு, மாநில அரசு நிதி பெறுவதாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் அவர்கள் தொகுதி நிதியிலிருந்து பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட பகுதியைச் சார்ந்த சத்துணவு அலுவலர்கள் சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி நிதி பெற நடவடிக்கை எடுக்கும்பொருட்டு துறை தலைவர்கள் உரிய அறிவுரைகள் வழங்கவேண்டும் என்று குழு கேட்டுக்கொண்டது.

262. 20,489 கட்டடங்களுக்கு நடைபெற்றுவரும் கட்டடப் பணிகளை நிறைவு செய்யவும், 7,000 சத்துணவு மையங்களுக்கு மட்டுமே காஸ் சிலிண்டர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து மையங்களுக்கும் காஸ் சிலிண்டர் வசதி செய்துதரவும் துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

263. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கம்பிக்காடு கடற்கரை தனுஷ்கோடியில் செயல்படும் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் சத்துணவுக் கூடத்தில் சமைக்க தேவையான உபகரணங்கள் இல்லையென்றும், இரண்டு சமையல் பாத்திரங்கள் மட்டும் உள்ளதாகவும், மேலும் சமையல் செய்வதற்கு கேஸ் அடுப்பு மற்றும் இணைப்பு வசதி செய்து தர வேண்டும் என்றும் குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கான கருத்துரு மீது துறை எடுத்துள்ள நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

264. இது தொடர்பாக குழுவிடம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களின் கடித ந.க. எண். டபிள்யு 1/99725/2013, நாள் 13-5-2014 இன்படி, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கம்பிக்காடு கடற்கரை, தனுஷ்கோடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் சத்துணவு சமைப்பதற்கு தேவையான சமையல் பாத்திர உபகரணங்கள் மற்றும் மாணவர்கள் உணவு உண்பதற்கு புதிய தட்டு, டம்பளர் அனைத்தும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்றும் இப்பள்ளி சமையற்கூடம் புதியதாக கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் எரிவாயு இணைப்பு வழங்கிட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

265. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சிக்குட்பட்ட காப்பிக்காடு கடற்கரை, தனுஷ்கோடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் சமையற்கூடத்திற்கு எரிவாயு இணைப்பு வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXVII சத்துணவு மையத்திற்கு வருடத்திற்கு ஒருமுறை வெள்ளையடித்தல்

266. தமிழ்நாட்டில் சத்துணவு மையத்திற்கு எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை ஒயிட் வாஷ் செய்கின்றார்கள் என்று குழு துறையிடம் கேட்டது.

267. 4வருடங்களுக்கு ஒருமுறை ஒயிட் வாஷ் செய்கின்றோம். உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டு ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் ஒயிட் வாஷ் செய்வதற்காக 6,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துகொடுத்திருக்கிறது என்று அரசுச் செயலாளர் குழுவிடம் பதில் அளித்தார்.

268. குழு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபொழுது, தனுஷ்கோடியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இருந்த சத்துணவு மையத்தினையும் பார்வையிட்டது. அங்குள்ள சமையறை வெளிச்சம் ஏதுமின்றி சுவர்கள் கரிபடிந்து கருப்பாக இருந்தது என்றும் அறையே இருட்டாக இருந்தது என்றும் ஒயிட் வாஷ் செய்வதற்கு நான்கு வருடங்களுக்கு ஒருமுறை என்று கால இடைவெளி இருப்பதை வருடத்திற்கு ஒருமுறை ஒயிட் வாஷ் செய்யவேண்டும் என்று செய்தால்தான் சரியாக இருக்கும் என்றும் அதற்கு ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கீடு செய்தால் நன்றாக இருக்கும் என்றும் குழு மேலும் வலியுறுத்தியது.

269. குழுவின் கருத்து நல்ல கருத்து. அவ்வாறு செய்திட முயற்சி செய்கின்றோம் என்று அரசுச் செயலாளர் குழுவிடம் உறுதியளித்தார்.

270. ஒவ்வொரு சத்துணவு மையத்தையும் ஒயிட் வாஷ் செய்வதற்கு நான்கு வருடங்களுக்கு ஒரு முறை என்று கால இடைவெளி இருப்பதை குறைத்து வருடத்திற்கு ஒரு முறை ஒயிட் வாஷ் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXVIII காலிப் பணியிடங்களை நிரப்புதல்

271. குழு, பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, துறையின் பல்வேறு நிலைகளில் உள்ள பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை குழு அறிகிறது.

272. குழு விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது சமூக நல அலுவலகத்தில் கணக்கர்–1 பணியிடம், இரவு காவலர் பணியிடம், தொழில் கூட்டுறவு மேற்பார்வையாளர்–1 மற்றும் பதிவுரு எழுத்தர்–1 நிரப்பப்படாமல் உள்ளதாகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் சமூக நலத் துறையில் 14 களப்பணியாளர்கள் (Field Staff) காலியாக உள்ளதாகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8 குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பணியிடங்கள், 25 குழந்தை வளர்ச்சி திட்ட மேற்பார்வையாளர்–2 பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இப்பணியிடங்களை நிரப்ப துறை எடுத்துள்ள நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

273. விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் கணக்கர் பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டது. மேலும் இவ்வலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்குவதால் இரவு காவலர் பணியிடம் தேவையென கருதப்படவில்லை. இருப்பினும் தற்பொழுது இரவு காவலர் பணியிடம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று துறை தெரிவித்தது.

274. இராமநாதபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் தொழில் கூட்டுறவு மேற்பார்வையாளரை விருதுநகர் மாவட்டம் தொழில் கூட்டுறவு மேற்பார்வையாளர் கூடுதல் பொறுப்பு வகிக்க ஆணையிடப்பட்டு பணியாற்றி வருகிறார். விருதுநகர் மாவட்ட தொழிற்கூட்டுறவு மேற்பார்வையாளர் பணி நியமனம் செய்ய அரசுக்கு கருத்துரு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. பதிவுரு எழுத்தர் பதவி தற்பொழுது நிரப்பப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

275. திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து களப்பணியாளர்கள் பணியிடமும் நிரப்பப்பட்டுள்ளன என துறை தெரிவித்தது.

276. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8 குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பணியிடங்கள் நிரப்ப அரசின் நடவடிக்கையில் உள்ளது. மேற்பார்வையாளர் நிலை 2 பணியிடங்களில் ஒப்பளிக்கப்பட்ட 30 பணியிடங்களில் 23 நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 பணியிடங்கள் தற்பொழுது பணி ஓய்வின் காரணமாக காலியாக உள்ளது. அந்த 7 பணியிடங்களையும்

முதுநிலை அடிப்படையில் தகுதியான நபரை கொண்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என துறை குழுவிற்கு விளக்கியது.

277. விருதுநகர் மாவட்டத்தில் சமூக நல அலுவலகத்தில் இரவுக் காவலர், தொழிற் கூட்டுறவு மேற்பார்வையாளர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8 குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை–2 பணியிடங்களில் 7 பணியிடங்களையும் நிரப்ப துறை விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு மேலே தெரிவிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்பிட வேண்டும் எனவும் இதுகுறித்து அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

278. குழு, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, சமூக நல அலுவலகத்தில் மேற்பார்வையாளர் நிலை–1 இல் 1 பணியிடமும், மேற்பார்வையாளர் நிலை–2 இல் 16 பணியிடங்களும், அங்கன்வாடி பணியாளர்கள் 209 பணியிடங்களும், குறு அங்கன்வாடி பணியாளர்கள் 17 பணியிடங்களும், அங்கன்வாடி உதவியாளர்கள் 194 பணியிடங்களும், சத்துணவு அமைப்பாளர் 247 பணியிடங்களும், சமையலர் 177 பணியிடங்களும் மற்றும் சத்துணவு உதவியாளர் 171 பணியிடங்களும் காலியாக உள்ளன என குழு அறிகிறது. இப்பணியிடங்களை நிரப்ப துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

இதற்கு துறை பின்வருமாறு குழுவிடம் தெரிவித்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தின் பணிநிலை விபரம்:

பணியிடங்கள்	ஒப்பளிக்கப் பட்டது	நிரப்ப வேண்டிய பணியிடங்கள்
பணியாளர்கள் %		
மாவட்ட திட்ட அலுவலர்	13	5
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்	11	3
கண்காணிப்பாளர்	12	1
உதவியாளர்	2	2
இளநிலை உதவியாளர்	4	1
தட்டச்சர்	4	1
அலுவலக உதவியாளர்	12	2
ஓட்டுநர்	4	2
மேற்பார்வையாளர் நிலை I	11	1
மேற்பார்வையாளர் நிலை II	30	7
அங்கன்வாடி பணியாளர்	1229	258
குறு அங்கன்வாடி பணியாளர்	266	16
அங்கன்வாடி உதவியாளர்	1229	207

279. அங்கன்வாடி பணியாளர்கள் நியமனம் அரசாணையினை பின்பற்றி மாவட்ட ஆட்சியர்களால் செய்யப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசாணை 72, சந(4) சஉதி நாள்: 30/04/2012 இன்படி 439 அங்கன்வாடி பணியாளர்கள் 2013–2014 இல் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள பணியாளர்கள் சமூகநல ஆணையரால், (நிர்வாக கட்டுப்பாட்டு அதிகாரி) நிரப்பப்பட்டு உள்ளது. மேலும் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என துறை குழுவிற்கு விளக்கியது.

280. இராமநாதபுரம் மாவட்டத்தில் சமூக நலத் துறை அலுவலகத்தில் காலியாக உள்ள 3 குழந்தை வளர்ச்சித் திட்ட மேற்பார்வையாளர் நிலை–1 மற்றும் நிலை–2, அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் போன்ற பணியிடங்களை நிரப்பிட விரைவான நடவடிக்கையை துறை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

281. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 5 வகையான திருமண திட்டங்களுக்கு ஒரு உதவியாளர் பணியிடமும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், திருநங்கைகள் நல வாரியம் மற்றும் 100–க்கும் மேற்பட்ட தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஒரு உதவியாளரும் ஆக 2 உதவியாளர் பணியிடங்களை புதிதாக திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு தோற்றுவித்து, ஒதுக்கீடு செய்து தர குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கான கருத்துரு துறையிடம் ஏதேனும் வரப்பெற்று நிலுவையில் உள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

282. மாவட்ட சமூக நல அலுவலகங்களில் செயல்பட்டு வரும் திருமண உதவித் திட்டங்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், வரதட்சணை தடுப்புச் சட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்த தேவையின் அடிப்படையில் உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று துறை குழுவிடம் தெரிவித்தது.

283. திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 5 வகையான திருமண உதவித் திட்டங்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மற்றும் திருநங்கைகள் நல வாரியம் ஆகிய பிரிவுகளில் உள்ள பணிகளை மேற்கொள்ள கூடுதலாக புதியதாக இரண்டு உதவியாளர்கள் பணியிடங்களைத் தோற்றுவித்து பணி நியமனம் செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

284. சிவகங்கை மாவட்டம், மலம்பட்டி மேல்நிலைப் பள்ளியில் கடந்த 6 ஆண்டுகளாக சத்துணவுப் பணியாளர் இல்லாததால் சத்துணவு வேறு ஒரு பள்ளியில் சமையல் செய்து வாகனம் மூலம் கொண்டு வரப்பட்டு வழங்கப்படுவதாக குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மேற்குறிப்பிட்ட பள்ளியில் சத்துணவு அமைப்பாளர் பணியிடம் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு கேட்டுக் கொண்டது. அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

285. சிவகங்கை மாவட்டம், மலம்பட்டியில் செயல்படும் நடுநிலைப் பள்ளியின் சத்துணவு மையத்திற்கென தனியாக பணியாளர் நியமனம் செய்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களது கடித எண் ந.க. ஆர்4/978/13, நாள் 20–5–2014 இன்மூலம் குழுவிற்கு தெரிவித்தார்.

286. சிவகங்கை மாவட்டம், மலம்பட்டி மேல்நிலைப்பள்ளி சத்துணவு மையத்திற்கென ஒரு சத்துணவுப் பணியாளர் உடனடியாக நியமனம் செய்து குழுவிற்கு இது குறித்த அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

XXIX வாகன வசதி செய்தல்

287.குழு, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, சத்துணவுத் திட்டத் துறையின்அலுவலர்களுக்கு ஈப்பு வசதி செய்து தருமாறு கோரிக்கைகள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து துறை எடுத்துள்ள நடவடிக்கையினை குழுவிற்குத் தெரிவிக்க கோரப்பட்டது.

288. உடனடியாக ஈப்பு வாங்கி வழங்க முடியாது. மாநிலம் முழுவதும் கிட்டத்தட்ட 305 வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்வதற்கு அனுமதி அளித்திருக்கிறோம். அதை பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு பதிலளித்தார்.

289. மேலும், குழு மாவட்ட அளவில் வாகனங்கள் இருக்கும் அல்லவா என துறையிடம் கேட்டது.

290. மாவட்ட அளவில் வாகனங்கள் இருக்கும். ஆனால், அந்த வாகனங்களை அதற்கென நியமிக்கப்பட்ட பயன்பாட்டுக்கு மட்டுமே பெரும்பாலும் பயன்படுத்த இயலும். துறை அலுவலர்கள் வாகனம் தேவை என்று கோரும்போது, அந்த வாகனங்கள் பிற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுக்கொண்டிருந்தால், அலுவலர்களுக்கு வாகனம் கிடைப்பதில் இடையூறு ஏற்படும். வாகனங்களை சரியான முறையில் இயங்கவில்லையென்றால், அவற்றை கழிவு செய்துவிட்டு புதிய வாகனங்களை வாங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சில இடங்களுக்கு டொயோட்டா போன்ற வாகனங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். புது வாகனங்கள் வாங்கி, பராமரித்து, பயன்படுத்துவதைவிட வாடகைக்கு வாகனங்களை அமர்த்துவது அரசாங்கத்திற்கு இலாபகரமாகவும், அலுவலர்களுக்கு இடையூறில்லாமலும் இருக்கிறது என அரசுச் செயலாளர் குழுவிடம் கூறினார்.

XXX. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

291. தமிழக அரசு தொடர்ந்து கிராம மற்றும் நகர்ப்புறங்களில் ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் குழந்தை நல மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. ஊட்டச்சத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தொடர்ச்சியாக அதிக நிதி ஒதுக்கீடு செய்து இந்தியாவிலேயே தமிழ்நாடும் முன்னணியில் உள்ளது. தமிழகத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்து குழந்தை வளச்சித் திட்டப் பணிகள் இந்தியாவிலேயே சிறந்தது என கருதப்படுகிறது.

292. 1975 ஆம் ஆண்டு முதல் முதலில் மத்திய அரசின் உதவியுடன் தமிழகத்தில் முன்னோடி திட்டமாக 3 பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் துவங்கப்பட்டது. மேலும் இத்திட்டம் விரிவடைந்து 113 திட்டப் பகுதிகளில், பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் என அகில இந்திய அமைப்பாக செயல்பட்டது. அதன்பின் படிப்படியாக இத்திட்டம் வளர்ச்சி அடைந்து, 2002 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் மத்திய அரசின் உதவியுடன் எல்லா கிராம மற்றும் நகர்புறங்களிலும் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

293. தமிழகத்தில் சுமார் 7,21,38,958 கோடி மக்கள் தொகையினை உள்ளடக்கிய வகையில் தற்போது இத்திட்டம் 434 திட்டப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு, 35,12,464 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 49,499 குழந்தைகள் மையங்கள் மற்றும் 4,940 குறு குழந்தைகள் மையங்கள் செயல்படுகின்றன.

(அ). நிர்வாக அமைப்பு

294. அரசு மட்டத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசுச் செயலாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாநில அளவில் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் முதன்மை செயலர்/சிறப்பு ஆணையர் அவருக்கு உறுதுணையாக மூன்று துணை இயக்குநர்களும், திட்ட அலுவலரும் மற்றும் முதன்மை கணக்கு அலுவலரும் பணிபுரிகின்றனர். மாவட்ட அளவில், மாவட்ட திட்ட அலுவலர்கள் திட்டப் பணிகளை நிறைவேற்றும் வகையில் பணியாற்றுகின்றனர். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகத்தின் நிர்வாக அமைப்பினைக் காட்டும் விளக்கப்படம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு II).

(ஆ). ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

295. (i) 0–6 வயதுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.

(ii) குழந்தைகளின் மனம், உடல் மற்றும் சமூக ரீதியான முறையான வளர்ச்சிக்கு அடிகோலுதல்.

(iii) சிசு இறப்பு விகிதம், நோயுறும் தன்மையின் விகிதம், ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் முன்பருவ பள்ளிக் கல்வியிலிருந்து இடை நிற்றல் ஆகியவற்றைக் குறைத்தல்.

(iv) சிறப்பாக திட்டங்களை வகுத்தலும், பல்வேறு துறைகளின் மூலம் அமல்படுத்தலும்.

(v) ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வியின் மூலமாக, குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பாக தேவைகளை அறிந்து செயல்படத்தக்க வகையில் தாய்மார்களின் திறனை மேம்படுத்துதல்.

(இ). இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலப்பணிகள்

அ) இணை உணவு வழங்குதல்

ஆ) முன்பருவக் கல்வி அளித்தல்

இ) தடுப்பூசி அளித்தல்

ஈ) ஊட்டச்சத்து மற்றும் நலக்கல்வி அளித்தல்

உ) மருத்துவ சேவை மற்றும் மேல் மருத்துவப் பரிந்துரை செய்தல்

ஊ) தகவல் , கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் மூலம் விழிப்புணர்வு அளித்தல்

(ஈ). திட்டத்தின் பயனாளிகள்

- பிறந்த குழந்தைகள் முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள்
- கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்
- வளரிளம் பெண்கள் (11–18– வயது வரை)
- முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்

296. மொத்தமுள்ள 434 திட்டப்பகுதிகளில் 47 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டங்கள் மலைப் பகுதிகளிலும் மற்றும் 385 திட்டங்கள் கிராமப்புறங்களிலும் உள்ளன. மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி குழந்தைகள் மையம் அமைக்க கிராம, நகர மற்றும் சாதாரண சமவெளிப் பகுதிகளில் செயல்படும் ஒரு மையத்திற்கு 400 முதல் 800 மக்கள் தொகை என்பதும், மலைப்பகுதிகளுக்கு 300 முதல் 800 மக்கள்தொகை ஒரு அளவுகோலாகும். இத்திட்டப் பகுதிகளின் எல்லைக்குட்படாத பகுதிகளில் 150–300 மக்கள் தொகைக்கு ஒரு குறு மையம் அமைக்கலாம் என்பதும் இத்திட்டத்தின் ஓர் அளவுகோலாகும்.

XXXI புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்குதல்

297. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 54,439 அங்கன்வாடி மையங்கள் இருப்பதாக குழு அறிகிறது. புதிதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்க விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளதா என்ற விவரத்தை துறையிடம் குழு தெரிவிக்க கோரியது.

298. இதற்கு 1,130 அங்கன்வாடி மையங்கள் புதியதாக தொடங்கப்படவேண்டும் என்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன. சில மையங்களில் குழந்தைகள் அதிகமாக இருக்கின்றார்கள். சில மையங்களில் குழந்தைகள் குறைவாக இருக்கின்றார்கள். மத்திய அரசு ஒரு மையத்திற்கும் மற்றொரு மையத்திற்கும் இடையேயான தூரம் 3 கிலோ மீட்டர் இருக்கவேண்டுமென்றும், குறைந்தபட்சம் 25 குழந்தைகள் இருக்கவேண்டுமென்றும் ரெகுலேட் செய்திருக்கிறது. 25 குழந்தைகள் மற்றும் 50 குழந்தைகள் இருக்கின்ற அங்கன்வாடி மையங்களும் உண்டு என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

299. 3 கிலோ மீட்டர் தூரம் சென்று அங்கன்வாடி மையத்தில் கொண்டுபோய் குழந்தைகளை பெற்றோர்கள் விடமாட்டார்கள் என்று குழு துறையிடம் தெரிவித்தது.

300. 1,130 அங்கன்வாடி மையங்கள் புதிதாக அமைக்க கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதால் அரசின் விதிகளுக்குட்பட்டு ஆய்வு மேற்கொண்டு குழந்தைகள் நலன் கருதி புதிதாக எங்கெங்கு அங்கன்வாடி மையங்கள் அமைக்க வழிவகை இருப்பின் அங்கெல்லாம் புதிய மையங்கள் விரைவில் துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXII அங்கன்வாடி மையங்களுக்கு தரமான எடை பார்க்கும் கருவிகள் வாங்கி வழங்கல்

301. அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் எடை பார்க்கும் கருவிகளை 54,349 மையங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

302. 54,349 அங்கன்வாடி மையங்களுக்கும் எடை பார்க்கும் உபகரணங்கள் கொடுத்திருக்கிறோம். மூன்று விதமான எடைபார்க்கும் கருவிகள் இருக்கின்றன. குழந்தைகள், சிறுவர்/சிறுமியரின் எடை பார்க்கும் கருவி ஒருவிதமாகவும், கருவுற்ற மகளிரின் எடை பார்க்கும் கருவி வேறுவிதமாகவும் இருக்கும் என துறைமூலம் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

303. நிறைய அங்கன்வாடி மையங்களில் அந்த கருவிகள் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது சில மையங்களுக்கு நேரிடையாக குழு சென்று ஆய்வு செய்தபோது அங்கே இருக்கின்ற கருவிகள் குழந்தைகளின் எடையை சரியாக காட்டவில்லை என்றும் கருவிகள் நல்ல தரமானவையாக இல்லை என்றும் நல்ல தரமான கருவிகளாக தந்தால் மிகவும் உபயோகமாக இருக்கும் என குழு துறையிடம் வலியுறுத்தியது.

304. இதற்கு அரசுச் செயலாளர் கருவிகளை சோதனை செய்யச் சொல்கிறோம் என்று குழுவிற்கு உறுதி அளித்தார்.

305. குழந்தைகளை எடை பார்க்கும் கருவிகளை டான்சி நிறுவனத்தின் மூலமாகத்தான் வாங்கிக் கொடுக்கிறோம். 2 வயது வரையிலும் உள்ள குழந்தைகளின் எடையளவை கணக்கிட ஒரு கருவியும், 2 வயது முதல் 72 மாதம் வரையிலும் உள்ள குழந்தைகளின் எடையளவை கணக்கிட ஒரு கருவியும், கருவுற்ற மகளிர் எடையளவை கணக்கிட ஒரு கருவியும் ஆக மொத்தம் 3 கருவிகள் வழங்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன என்ற விவரத்தை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட துணை இயக்குநர் தெரிவித்தார்.

306. மேலும் குழு துறையிடம் தரமான கருவியாக இருந்தால்தான் குழந்தைகளின் சரியான எடையை தெரிந்துகொள்ள முடியும் என்று தெரிவித்தது.

307. அங்கன்வாடி மையங்களில் ஏற்கெனவே உள்ள எடை பார்க்கும் கருவிகளை சீரமைக்கவும், இனிவரும் காலங்களில் தரமான எடை பார்க்கும் கருவிகளை வாங்கி வழங்கவும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXIII அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு வழங்கல்

308. தேனி மாவட்டத்தில் எரிவாயு இணைப்பு பெறாத 423 அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு பெற தகுதியான கட்டடங்கள் உள்ள 343 மையங்களை கண்டறிந்து அம்மையங்களுக்கு எரிவாயு இணைப்பு பெற தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் சம்பந்தப்பட்ட மையங்களுக்கு எரிவாயு இணைப்பு பெற நடவடிக்கை மேற்கொள்வதாக குழுவிடம் கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்பணி குறித்து தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

309. தேனி மாவட்டத்தில் மொத்தம் 1,080 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன. அவற்றுள் 672 மையங்கள் அரசு மூலமும், 4 மையங்கள் சமுதாய பங்களிப்பு மூலம் ஆக மொத்தம் 676 மையங்களில் நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் எரிவாயு இணைப்பு பெறப்பட்டுள்ளன. 404 மையங்களில் எரிவாயு இணைப்பு பெற இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என துறை தெரிவித்தது.

310. தேனி மாவட்டத்தில் உள்ள எரிவாயு இணைப்பு கொடுக்கப்படாத 404 அங்கன்வாடி மையங்களுக்கு நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு நடப்பாண்டில் வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXXIV அங்கன்வாடி குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்கல்

311. அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு தன்சுத்தத்தைப் பற்றி குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறதா என்ற விவரத்தை குழு அறிய விரும்பியது.

312. இதற்கு அரசுச் செயலாளர் குழந்தைகள் சாப்பிடுவதற்கு முன் கைகளை கழுவ வேண்டுமென்றும், இயற்கை உபாதைகளுக்குப் பிறகு சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டுமென்றும் சொல்லித்தரப்படுகிறது. மையங்களில் மதியவேளையில் குழந்தைகளை தூங்க வைக்கிறார்கள். அவர்கள் தூங்கி எழுந்த பின்பு எப்படி முகம் கழுவ வேண்டுமென்றும், எப்படி சுத்தமாக இருப்பது என்பதைப் பற்றியும் சொல்லித்தரப்படுகிறது என அவர் குழுவிடம் விளக்கினார்.

313. அங்கன்வாடி குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்மூலம் 2013–2014 ஆம் ஆண்டு எத்தனை முதன்மை மையங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும், இதுவரை எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது என்பதை குழுவிற்கு விளக்க துறையிடம் கோரப்பட்டது.

314. 54,439 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.15.59 கோடி செலவில் 2013–2014 ஆம் ஆண்டில் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. முதன்மை மையங்களுக்கு ரூ.3,000/– செலவிலும், குறு மையங்களுக்கு ரூ.1,500/– செலவிலும் முன்பருவக் கல்வி உபகரணங்கள் வழங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சப்ளை ஆர்டர் பெறப்பட்டுள்ளது. பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பின் காரணமாக விநியோகம் செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்றதால் தற்போது உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என அரசுச் செயலாளர் குழுவிற்குப் பதிலளித்தார்.

315. அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் 2013–2014இல் வழங்கப்பட வேண்டிய முன்பருவக் கல்வி உபகரணங்களை வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதுகுறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXV அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்கல்

316. அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை குழு அறிகிறது. அங்கன்வாடி கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்ததாரர்கள் பணிகளை எடுத்து செய்ய ஆர்வமின்மை உள்ளது என்றும் இது குறித்து துறை என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை குழு அறிய விரும்புகிறது.

317. அங்கன்வாடி மையக் கட்டடம் ஒன்று கிராமப்புறங்களில் கட்டுவதற்கு ரூ.3.9 இலட்சமும், நகர்ப்புறங்களில் ரூ.4.00 இலட்சமும் நிதி ஒதுக்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தற்போது ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

318. தமிழ்நாட்டில் அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்கும் வேளையில் அங்கன்வாடி மையக் கட்டடம் கிராமத்தில் கட்டுவதற்கு ரூ.3.9 இலட்சமும், நகர்ப்புறத்தில் ரூ.4.00 இலட்சமும் நிதி ஒதுக்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தின் சூழ்நிலைக்கேற்ப இதற்கான செலவினத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXXVI அங்கன்வாடி மையத்தில் உட்புற சுவர்களில் குழந்தைகளுக்கான படங்கள் வரைதல்

319. அங்கன்வாடி மையத்தின் உட்புற சுவர்களில் குழந்தைகளுக்கான படங்கள் வரைவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என குழு துறையிடம் கேட்டதற்கு, உட்புறச் சுவர்களில் நீதிக்கதைகள் (moral stories) வண்ண கலவைகளால் வரையப்பட்டு குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அது குழந்தைகளின் மத்தியில் நல்ல பலனை அளித்துள்ளது என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

320. குழு மேலும் எல்லா மையங்களிலும் இதுபோல் நல்ல கதைகள் உள்ள படங்களை வரைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியது. இந்த வருடம் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்று துறையிடம் கேட்டது.

321. இதற்கு அரசுச் செயலாளர் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று குழுவிடம் பதிலளித்தார்.

XXXVII அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கும் இரண்டு செட் வண்ண உடைகள் திட்டத்தை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல்.

322. அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு இரண்டு செட் வண்ண சீருடைகளை வழங்குவதற்கு முதல்கட்டமாக திருச்சி, சென்னை, வேலூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் துவக்கப்பட்டதை குழு அறிகிறது. இத்திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த துறை நடவடிக்கை எடுத்து வருகிறதா என்ற விவரத்தை குழு துறையிடம் கேட்டது.

323. இதன் தொடர்பாக 10 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களில் உள்ள 2 முதல் 5 வயதுடைய குழந்தைகளுக்கு இரண்டு செட் வண்ண சீருடைகள் ரூ.9.30 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன மற்ற மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது எனவும் அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

324. அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு இரண்டு செட் வண்ண சீருடைகள் 10 மாவட்டங்களுக்கு வழங்கி வருவதை மேலும் மற்ற மாவட்டங்களுக்கும் வழங்க விரிவுபடுத்தும் கருத்துருமீது துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXVIII அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

325. ஊட்டச் சத்து குறைபாடு, இரத்தச் சோகை, உடல் நலக் குறைவு உள்ள குழந்தைகள் எந்த மாவட்டத்தில் அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்பதை குழு அறிய விரும்பியது.

326. இது தொடர்பாக இராமநாதபுரம், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாட்டுடன் காணப்படுகிறார்கள் என்ற விவரத்தை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட துணை இயக்குநர் குழுவிற்கு தெரிவித்தார்.

327. மேலும், அரசுச் செயலாளர் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து குறைபாடு நிலை மற்றும் வளர்ச்சி நிலைகள் ஒவ்வொரு மாதமும் கணக்கெடுக்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில் 71.19 சதவிகிதமாக இருந்த சாதாரண நிலை குழந்தைகள் சதவிகிதம், 2014 ஆம் ஆண்டில் 83.48 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. மிதமான ஊட்டச் சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் என்று பார்க்கும்போது, 2012 ஆம் ஆண்டில் 27.66 சதவிகிதமாக இருந்தது, 2014 ஆம் ஆண்டில் 16.43 சதவிகிதமாக குறைந்துள்ளது. இந்தக் குழந்தைகளுக்கு கலவை சாதம், பச்சைப் பயறு, கொண்டைக்கடலை, உருளைக் கிழங்கு மற்றும் சிறு தானிய உணவு ஆகிய முழு ஊட்டச் சத்துள்ள உணவு வகைகள் வழங்கப்படுகிறது. எனவே, ஊட்டச் சத்து வழங்குவதில் அகில இந்திய குறியீட்டைவிட தமிழ்நாடு முதன்மை நிலையில் இருக்கிறது என்று குழுவிற்கு விளக்கினார்.

328.ஊட்டச் சத்து குறைபாட்டுடன் காணப்படும் குழந்தைகள் உள்ள மாவட்டம் குறித்த விவரம் கேட்கப்பட்டபோது, அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச் சத்து பற்றாக்குறை சதவிகிதம் அதிகமாக இருக்கிறது என்று துறை சட்டமன்றத்தில் அறிக்கை சமர்பித்துள்ளது. அந்த மாவட்டத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து அதிகமாக உள்ள சிறு தானிய உணவு வகைகளை கொடுக்க முயற்சி செய்ய வேண்டுமென்று குழு விரும்புகிறது.

329. இதற்கு அரசுச் செயலாளர் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் ஊட்டச் சத்து அதிகமாக வழங்கப்பட வேண்டிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டு கடந்த ஆண்டு அறிவிப்பு செய்யப்பட்டது என்று குழுவிற்கு தெரிவித்தார்.

330. துறை மூலம் ஊட்டச் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய என்ன முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றது. தற்போது அதில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று துறையிடம் குழு கேட்டதற்கு, அரசுச் செயலாளர் ஊட்டச் சத்து குறைபாடு என்று கண்டறியப்பட்ட மாவட்டங்களில் உள்ள குழந்தைகளுக்கு சத்து மாவு உருண்டை தயாரித்து வழங்கி வருகிறோம். சிறுதானியங்களான கேழ்வரகு மற்றும் தினை வகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பிஸ்கட் வகைகள் வழங்கப்படுகின்றன. ஒரு குழந்தைக்கு தினந்தோறும் 50 கிராம் வீதம் பிஸ்கட் வழங்கப்படுகிறது. இந்த முயற்சியின் விளைவாக ஒரு கிலோ வரை ஒரு குழந்தையின் எடை உயர்ந்திருக்கிறது. இது நல்ல முயற்சி. இதே முயற்சியை மற்ற மாவட்டங்களிலும் அமல் செய்ய துறை ஆராய்ந்து வருகிறது என அவர் தெரிவித்தார். இந்த ஆண்டு தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இது பரிசீலனையில் இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

331. அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் குழந்தைகளிடம் ஊட்டச்சத்து பற்றாக்குறை சதவிகிதம் குறைவாக உள்ளதால் இதனை நிவர்த்தி செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை சதவிகிதம் குறைவாக உள்ள பிற மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXIX அங்கன்வாடி மையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கல்

332. அங்கன்வாடி மையங்களுக்கு குடி தண்ணீர் எப்படி வழங்கப்படுகிறது என்பதை குழு அறிய விரும்பியது.

333. இதுகுறித்து அரசுச் செயலாளர் அங்கன்வாடி மையங்களில் உள்ளாட்சிகளின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களில் R.O. பிளாண்ட்மூலம் தண்ணீர் கிடைக்கிறது. R.O. பிளாண்ட்மூலம் ஒரு லிட்டர் சுத்தமான தண்ணீர் பெறுவதற்கு, 8 லிட்டர் தண்ணீர் வீணாகிறது. அதை எப்படி சரி செய்வது என்று ஆய்வு செய்திருக்கிறோம். நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை என்பதால் R.O. போடுகிறோம் எனவும் குழுவிற்கு பதிலளித்தார்.

334. தமிழ்நாட்டில் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க R.O. பிளாண்ட் அமைத்துத்தர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XL அங்கன்வாடி மையங்களில் மின் இணைப்பு வழங்கல்

335. விருதுநகர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் மீசலூர் ஊராட்சியில் உள்ள மூன்று அங்கன்வாடி மையங்களில் உட்கட்டமைப்பு தரம் உயர்த்துவதற்கான பணியில், ஒரு மையத்திற்கு மட்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் மற்ற இரண்டு மையங்களில் மின் இணைப்பு வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இப்பணியின் தற்போதைய நிலையை குழு அறிய விரும்பியது.

336. விருதுநகர் மாவட்டத்தில் 1,423 முதன்மை மையங்கள் மற்றும் 62 குறு மையங்கள் என மொத்தம் 1,485 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன. இதில் 956 மையங்கள் அரசு கட்டிடங்களிலும், 308 மையங்கள் வாடகை கட்டிடங்களிலும், 226 மையங்கள் வாடகையில்லா கட்டிடங்களிலும் செயல்படுகின்றன.

337. விருதுநகர் மாவட்டத்தில் 956 அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதாகவும், இங்கு அனைத்து மையங்களுக்கும் மின் இணைப்புகள் ரூ.2,91,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து தொன்னூற்று ஓராயிரம் மட்டும்) செலவில் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 308 மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி மின் இணைப்புக்கள் வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XLI விருதுநகர் மாவட்டம் மீசலூரில் அங்கன்வாடி பின்புறம் கழிவுநீர் வடிகால் அமைத்தல்

338. விருதுநகர் மாவட்டம், மீசலூரில் அரசின் 'தாய் திட்டம்' செயல்படுத்தப்படயிருப்பதாகவும், அங்குள்ள அங்கன்வாடி மையத்திற்கு பின்புறம் ஓடும் கழிவு நீர்க் கால்வாயால் குழந்தைகளுக்கு தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதால், தாய்த் திட்டத்தின்கீழ் முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பகுதியில் கழிவுநீர் செல்ல கழிவு நீர் வடிகால் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரை குழு கேட்டுக்கொண்டது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை குழு அறிய விரும்பியது.

339. இதற்கு குழுவிற்கு இது தொடர்பாக துறை, விருதுநகர் மாவட்டம் மீசலூரில் உள்ள மையத்தின் பின்புறம் 20 அடி தூரத்தில் கழிவு நீர்க் கால்வாய் உள்ளது. தாய் திட்டம் சுகாதார துறையின் மூலம் செயல்படுத்தப்படுவதால் இது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தது.

340. விருதுநகர் மாவட்டம், மீசலூரில் அங்கன்வாடி மையத்தின் பின்புறம் உள்ள 20 அடி தூரத்தில் கழிவுநீர்க் கால்வாய்மூலம் குழந்தைகளுக்கு தொற்றுநோய் பரவுவதைத் தவிர்க்க மாவட்ட நிர்வாகத்தின்மூலம் நடவடிக்கை எடுத்து கழிவுநீர் செல்ல கழிவுநீர் வடிகால் அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XLII அங்கன்வாடி மையத்திற்கு விளையாட்டு பொருட்கள் வழங்குதல்

341. குழு, தேனி மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, நாகலாபுரம் ஊராட்சி, பாலகிருஷ்ணாபுரம் அங்கன்வாடி மையத்தில் 15 குழந்தைகள் வருவதாகவும், அவர்களுக்கு தினந்தோறும் ஊட்டச்சத்து உணவுகள் வழங்குவதாகவும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. குழந்தைகள் விளையாடும் வகையில் விளையாட்டுப் பொருட்கள் வாங்கி அங்கன்வாடி மையத்தில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று குழு தெரிவித்தது. இப்பணி துறையால் மேற்கொள்ளப்பட்டதா என குழு துறையை தெரிவிக்கக் கோரியது.

342. 2013–2014 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு உபகரணங்கள் பெறுவதற்கு அரசாணை (ப) எண் 126, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சமு7–1) துறை, நாள் 17–12–2013 இன்மூலம் ஆணை பெறப்பட்டு விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுவிட்டன. தேர்தல் நடைமுறைகள் அமலில் இருந்ததால் அவை சென்றடைவதில் தாமதம் எற்பட்டிருக்கும். தற்போது விளையாட்டுப் பொருட்கள் அனைத்தும் சென்றடைந்துவிட்டது என அரசுச் செயலாளர் குழுவிடம் தெரிவித்தார்.

XLIII மாதவிடாய் சுத்த செயல் திட்டம்

343. மாதவிடாய் சுத்த செயல் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் வாழும் வளரிளம் பெண்களுக்கு வழங்கப்படும் சானிடரி நாப்கின் திட்டத்தின்கீழ் 2012–2013, 2013–2014 ஆம் ஆண்டுகளில் பயனடைந்த பயனாளிகளின் விவரத்தை குழு அறிய விரும்பியது.

344. இதற்கு அரசுச் செயலாளர், 2012–2013 ஆம் ஆண்டில் 32,79,028 பயனாளிகளும் 2013–2014 ஆம் ஆண்டில் 32,79,028 பயனாளிகளும் பயனடைந்துள்ளனர் என்றும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சானிடரி நாப்கின் வழங்கப்பட்டு வருகிறது என குழுவிற்கு தெரிவித்தார்.

345. குழு, மேலும் பயனாளிகளுக்கு எப்படி சானிடரி நாப்கின் விநியோகம் செய்கிறது என்பதை தெரிவிக்குமாறு துறையிடம் கோரியது.

346. இதன் தொடர்பாக அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகள் மூலமாகவும் வளரிளம் பெண்கள் பயனடைந்து வருகின்றார்கள். மாவட்டங்களில் சுகாதார மருத்துவமனை மூலமாக சானிடரி நாப்கினை விநியோகித்து வருகிறோம். இந்தத் திட்டம் சுகாதாரத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 'சப்ளா' திட்டத்தின்மூலம் வளரிளம் பெண்கள் வருகின்றார்கள். அவர்களுக்கு துறைமூலம் உதவிகள் செய்கிறோம். அவர்களுக்கு சத்து மாத்திரைகளும் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகளும் வழங்குகிறோம் எனவும் அரசுச் செயலாளர் குழுவிற்கு விளக்கினார்.

XLIV ராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம்

347. ராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்ளா) மத்திய அரசின் மூலம் தமிழ்நாட்டில் முதல் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்தி வருவதாக துறை குழுவிடம் தெரிவித்தது. அந்த 9 மாவட்டங்கள் யாவை? மேலும்

இத்திட்டத்தினை படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்த துறை என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை குழு அறிய விரும்பியது.

348. ராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்ளா) மத்திய அரசின் நிதிமூலம் தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, கன்னியாகுமரி, சேலம், இராமநாதபுரம், திருச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 9 மாவட்டங்களில் முன்னோடி திட்டமாக 2011–2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த 9 மாவட்டங்களில், 139 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள 295 வட்டாரங்களில் கிஷோரி சக்தி யோஜனா வளர் இளம் பெண்களுக்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சப்ளா திட்டத்தினை படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்துவது என்பது மத்திய அரசின் கொள்கை முடிவாகும் என துறை தெரிவித்தது.

XLV இந்திராகாந்தி மகப்பேறு நல உதவித்திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்தல்.

349. இந்திராகாந்தி மகப்பேறு நல உதவித் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிகளுக்கு நிதி உதவி ரூ.4,000/– வழங்கப்படுகிறது எனவும், தமிழ்நாட்டில் ஈரோடு மற்றும் கடலூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தியுள்ளதை குழு அறிகிறது. இத்திட்டத்தினை மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்திட துறை எடுத்து வரும் நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

350. இந்திராகாந்தி மகப்பேறு நல உதவித் திட்டம் 2011–2012 முதல் மாநிலத் திட்டமான டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு மருத்துவ நிதியுதவித் திட்டத்துடன் இணைந்து கடலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஒரு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.4,000/– வீதம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிதி ஜூலை 2013 முதல் ரூ.6,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

351. மேலும், இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திட மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டுக்கு 6,70,313 பயனாளிகளுக்கு ரூ.6000/– வீதம் மொத்த ரூ.399.63 கோடி ரூபாய் வழங்க கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என துறை குழுவிடம் தெரிவித்தது.

352. இந்திராகாந்தி மகப்பேறு நல உதவித்திட்டத்தினை பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திட மத்திய அரசுக்கு அனுப்பிய கருத்துருவின் மீது துறை துரித நடவடிக்கை மேற்கொண்டு, நிதி உதவியைப் பெற்று திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

XLVI. சமூகப் பாதுகாப்புத் துறை

(அ) துறையின் பணிகள்

353. தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கும் சமூகப்பாதுகாப்புத்துறை, இடர்பாடான சூழ்நிலையிலுள்ள சிறார்களின் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வுடன், சிறுமியர் மற்றும் மகளிர் ஆகியோருக்கு சேவைகள் புரிவதை கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அனுமதிக்கப்படும் இல்லவாசிகளின் மறுவாழ்வினைக் கருத்திற்கொண்டு இல்லம் மற்றும் இல்லம் சாரா அணுகுமுறையுடன் கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்துறை சிறார்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் முறையான வளர்ச்சிக்காகவும் துறையின் அனைத்து திட்டங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்திவருகிறது.

354. இயக்குநரை தலைமையாகக் கொண்டு இயங்கும் இயக்குநர் அலுவலகத்தில் ஒரு இணை இயக்குநர், இரண்டு துணை இயக்குநர்கள், ஒரு உதவி இயக்குநர்

(தொழிற்கல்வி) மற்றும் ஏனைய அலுவலர்களும் பணியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். மதுரையில் மண்டல அலுவலகம் தென்மாவட்ட நிறுவனங்களின் மேற்பார்வை அலுவலராக துணை இயக்குநரை தலைவராக கொண்டு மதுரை மண்டல அலுவலகம் செயல்பட்டு வருகிறது. சமூகப்பாதுகாப்புத் துறை இயக்குநரகத்தின் நிர்வாக அமைப்பினை காட்டும் விளக்கப்படம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு III)

(ஆ) சார்நிலை அலுவலகங்களின் பணிகள்

355. இத்துறையின் கீழ் இங்கும் நிறுவனங்களில் 2000ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்கள் மற்றும் 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கு பாதுகாப்பு, பராமரிப்பு (சீர்திருத்தம்), பயிற்சி (கல்வி மற்றும் தொழிற்கல்வி) மற்றும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இத்துறை நிறுவனங்களிலிருந்து நீக்கம் பெறும் சிறார்கள் மற்றும் மகளிருக்கு தேவையான பிற்காப்பு உதவிகளையும் அளித்து வருகிறது.

(இ) சார்நிலை அலுவலகங்கள் மூலம் பயன் பெறுவோர்

1. ஆதரவற்ற குழந்தைகள்
2. சட்டத்திற்கு புறம்பான குழந்தைகள்
3. சாலையோர சிறார்கள் மற்றும் பிச்சைஎடுக்கும் சிறார்கள்
4. துன்புறுத்தலுக்குள்ளான சிறார்கள் போன்ற இதர பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்
5. கைவிடப்பட்ட மகளிர் மற்றும் மணமாகாத தாய்மார்கள்
6. ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர்

(ஈ) செயலமைப்பு

1. குழந்தைகள் நலக்குழு	ஆதரவற்ற சிறார்கள்
2, இளைஞர் நீதிக்குழுமம்	தவறிழைத்ததாக கருதப்படும் சிறார்கள்
3, குழந்தைகள் இல்லங்கள்	பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்
4. கூர்நோக்கு இல்லங்கள்	தவறிழைத்ததாக கருதப்படும் குழந்தைகள்
5. மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள்	ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான மகளிர்

XLVII மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தல் மற்றும் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்க மாநில அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

356. கடத்தல் மற்றும் பாலியல் கொடுமைகளை சந்திக்கும் மகளிர் மற்றும் குழந்தைகளை பாதுகாக்க துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன என்பதை குழு அறிய விரும்பியது.

357. இதன் தொடர்பாக அரசுச் செயலாளர் கடத்தல் மற்றும் பாலியல் கொடுமைகளை சந்திக்கும் மகளிர் மற்றும் குழந்தைகளை பற்றி தகவல் அறிந்து சம்பந்தப்பட்ட காவல் துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்திய அரசால் மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், மறுவாழ்வு அளித்தல், அவர்களை குடும்பத்தாரோடு சேர்த்தல், எல்லை கடந்து வந்து பாதிப்பிற்குள்ளான மகளிரை தங்கள் நாட்டிற்கே அனுப்பி வைத்தல் ஆகியவற்றிற்காக உஜ்ஜவாலா என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டம் 8 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

358. மேலும், கடத்தல் மற்றும் பாலியல் கொடுமைகளுக்கு ஆளானவர்களை சைதாப்பேட்டையில் உள்ள நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வாகனங்களில் அழைத்து செல்ல வேண்டியிருக்கிறது. இதன்மூலம் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே நீதிமன்றத்திற்கு காணொலிமூலம் பேசும் வாய்ப்பு அக்டோபர், டிசம்பர் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் நல்ல பலன் கிடைத்திருக்கிறது என குழுவிடம் விளக்கினார்.

XLVIII குழந்தைகள் நல இல்லங்களில் உறைவிட குடியிருப்பு கட்டுதல்

359. 9 குழந்தைகள் நல இல்லங்கள் ஊழியர்களுக்கு ரூ.1561 இலட்சம் மதிப்பீட்டில் 166 உறைவிட குடியிருப்புகள் கட்டும் பணிகள் நிறைவு பெறாமல் எங்கெங்கு உள்ளன என்ற விவரம் மாவட்ட வாரியாக குழு அறிய விரும்பியது.

360. சென்னை–10, சமூகப்பாதுகாப்பு துறையின் கீழ் இயங்கும் 9 குழந்தைகள் நல இல்லம், கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களில் கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும் செயற்பணியாளர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டிடம் கட்ட அரசானை (நிலை)எண்.7, சமூக நலம் (சந8) சத்துணவுத் திட்டத்துறை நாள்.8.1.2013 இன்படி ரூ.1561 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்னை, தருமபுரி, தூத்துக்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள 61 குடியிருப்புகளில் மேற்கூரைப் பணிகள் முடிந்துள்ளது என்றும் வேலூர், விருதுநகர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள 55 குடியிருப்புகளில் தரைதளப் பணிகள் நடைபெறுகிறது என்றும் வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலுள்ள 44 குடியிருப்புகளில் வண்ணப்பூச்சு பணிகள் நடைபெறுகிறது என்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள 6 குடியிருப்புகளில் மின்பணிகள் நடைபெறுகிறது என்றும் துறை குழுவிடம் தெரிவித்தது.

361. சமூகப்பாதுகாப்பு துறையின் கீழ் இயங்கும் 9 குழந்தை நல இல்லம், கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களில் கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும் செயற்பணியாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகளை விரைவுபடுத்தி பணிகளை நிறைவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துறை செய்கிறது.

XLIX பள்ளிக் குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாத்தல்

362. பள்ளிக் குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்க மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு பள்ளியிலும் புகார் பெட்டி கட்டாயம் வைக்க வேண்டும் என்றும், அதற்குத் தேவையான தொலைபேசி எண்களும் பள்ளியில் தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும் என்றும் தமிழக அரசு எற்கெனவே அறிவுறுத்தியுள்ளது. நன்னடத்தை அலுவலர் அவ்வப்போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்குச் சென்று, வரப்பெற்ற

புகார்களின்மீது நடவடிக்கை எடுக்க நேரடியாக புகார் பெறப்பட்ட பள்ளிக்குச் சென்று ஆய்வு நடத்த வேண்டும் என்று குழு தெரிவித்தது. ஒவ்வொரு பள்ளியிலும் புகார் பெட்டி வைக்கப்பட்டுள்ளதா என்பதையும், யாரை எந்த எண்ணில் தொடர்பு கொள்ளவேண்டும் என்பதையும் பள்ளியில் தகவல் பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளதா என்பதையும் நன்னடத்தை அலுவலர் கண்காணித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு விரும்பியது.

363. ஒவ்வொரு பள்ளிகளிலும் புகார் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறோம். அலுவலர்கள் சென்று விசாரிக்கின்றார்கள். அவர்கள் அளிக்கின்ற புகார்களில் பெரும்பாலும் உண்மை இல்லை. அவை காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, உள்நோக்கத்தோடு தெரிவிக்கப்பட்ட புகார்களாகத்தான் இருக்கின்றன. நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் ஒருவரும் இல்லை என்று அரசுச் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

364. பள்ளிக் குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்க சம்பந்தப்பட்ட பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

L சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் குழந்தைகள் நலக்குழு செயல்பட நடவடிக்கை

365. சிவகங்கை மாவட்டத்தில் குழந்தைகள் நலக் குழு காரைக்குடியில் செயல்படுவதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவரை கலந்து ஆலோசித்து குழந்தைகள் நலக்குழு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு வலியுறுத்தியது. குழந்தைகள் நலக்குழு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்பட நடவடிக்கை எடுப்பதாக சிவகங்கை மாவட்ட சமூக நல அலுவலர் குழுவிடம் தகவல் தெரிவித்தார். அதன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

366. சிவகங்கை மாவட்ட குழந்தைகள் நல குழு வாரத்தில் 2 நாட்கள் சிவகங்கையிலும் ஒரு நாள் காரைக்குடி இல்லத்திலும் அமர்வது குறித்த நடவடிக்கை துறையின் பரிசீலனையில் உள்ளது. குழந்தைகள் நலக் குழு வரவேற்பு பிரிவு இயங்குமிடத்தில் செயல்பட வேண்டும் என்பதால், இது தொடர்பாக சிவகங்கையில் இயங்கி வரும் ஒரு தன்னார்வு தொண்டு நிறுவனத்தில் வரவேற்பு பிரிவு இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

367. சிவகங்கை மாவட்ட குழந்தைகள் நலக் குழு காரைக்குடியில் இயங்குவதற்குப் பதிலாக சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இயங்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வெண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

LI இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிர் காப்பகம் அமைத்தல்

368. ஒழுக்க நெறி பிறழ்தல் தடுப்புச் சட்டம் 1956 இன்கீழ் ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளான மகளிருக்கு மறுவாழ்வு மேற்கொள்ள சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை அரசு நடத்தி வருவதை போல் இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிர் காப்பகங்கள் துவக்க குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கான கருத்துரு ஏதேனும் துறையிடம் உள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

369. 5 மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட பெண்களின் மொத்த எண்ணிக்கை 400. இவ்வில்லங்களில் தற்போதுள்ள பெண்களின் எண்ணிக்கை 77 ஆகும். எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளதால், இராமநாதபுரம் மாவட்டத்தில் மகளிர் காப்பகம் துவக்க துறையிடம் கருத்துரு ஏதும் இல்லை என துறை குழுவிற்கு தெரிவித்தது.

370. ஒழுக்க நெறி பிறழ்தல் தடுப்புச் சட்டம் 1956 இன்கீழ் ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளான மகளிருக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மகளிர் காப்பகம் துவக்க துறை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

LII. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு தொகை பெற நடவடிக்கை எடுத்தல்

371. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் 2007 இன்படி பராமரிப்புத் தொகை வேண்டி 2011 ஆம் ஆண்டில் 35 மனுக்களும் 2012 ஆம் ஆண்டில் 28 மனுக்களும் மற்றும் 2013 ஆம் ஆண்டில் 29 மனுக்களும் பெறப்பட்டு அதில் 9 மனுக்களுக்கு மட்டும் தீர்வு காணப்பட்டு மீதி 83 மனுக்கள் கோட்டாட்சித்தலைவருக்கு அனுப்பப்பட்டு அம்மனுக்கள் கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் விசாரணையின்பொருட்டு நிலுவையில் உள்ளதாக திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலர் குழுவிடம் தகவல் தெரிவித்தார். மேலும் 83 மனுக்கள் நிலுவையில் இருப்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்கு இதுவரை கொண்டுவரவில்லையென்று, இதுகுறித்து தனிக்கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குழுவிடம் கருத்து தெரிவித்தார். தற்போது பராமரிப்புத் தொகை வேண்டி நிலுவையில் உள்ள மனுக்கள் மீது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

372. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் 2007 இன்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் 2010–2013 முடிய உள்ள காலங்களில் வரப்பெற்ற 83 விண்ணப்பங்களில் 27 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இந்த 27 விண்ணப்பங்கள் தீர்வு காண்பதற்கு உட்கோட்ட தீர்ப்பாயங்களுக்கு மனு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மனுதாரர் (அ) எதிர்மனுதாரர் தொடர் விசாரணையில் ஆஜர்ஆகாததால் மனுக்கள் தீர்வு ஏற்படாமல் நிலுவையில் உள்ளன என்பதை குழுவிற்கு விளக்கியது.

373. 2010 முதல் 2013 வரை பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007 இன்கீழ் பெறப்பட்ட மனுக்களில் நிலுவையிலுள்ள 27 விண்ணப்பங்கள்மீது தீர்வுகாண துறை துரித நடவடிக்கை எடுத்து நிறைவடைந்தவுடன் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

LIII முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்தல்

374. 2013–2014 ஆம் ஆண்டில் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் புதியதாக துவங்குவதற்கு மாவட்ட வாரியாக துறை மேற்கொண்டுவரும் நடவடிக்கையினை குழுவிற்கு தெரிவிக்குமாறு குழு கேட்டதற்கு அரசுச் செயலாளர் 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தின் அனைத்து வட்டாரங்களிலும் 60 மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

375. மேற்படி அறிவிப்பின் முதற்கட்டமாக மாவட்டத்திற்கு இரண்டு வீதம் 32 மாவட்டங்களிலும், 64 வட்டாரங்களில் 64 ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியோருக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் 5-9-2012 அன்று காணொலி காட்சிமூலம் அரசால் திறந்து வைக்கப்பட்டது. இந்த 64 ஒருங்கிணைந்த வளாகங்களில், அரசு உதவியுடன் N.G.O. மூலம் 60 யூனிட்டுகள் நன்றாக செயல்பட்டு வருகின்றன. 4 யூனிட்டுகளில் ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள்.

376. மகளிர், முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் துவங்கும்போது கண்காணிக்க கண்காணிப்பு கேமிராக்கள் அமைக்க வேண்டும் என்றும், மேலும் அங்குள்ள குழந்தைகள் மற்றும் மகளிர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முனைப்புடன் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது.

சென்னை 600 009
நாள்: 04.08.2014
ஆடி 19,
திருவள்ளுவர் ஆண்டு – 2045

அ. பாப்பாசுந்தரம்
தலைவர்
மதிப்பீட்டுக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பாகம்–2

நிகழ்ச்சி பகுதி

2013 ஜூன் 4, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லக் குடியிருப்பு வளாக உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை–1ல் குழு கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாகுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. க. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு.வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி. கே. பாலபாரதி
திரு. எஸ். ஜான் ஜேக்கப்
மூனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, 2013–2014 ஆம் ஆண்டு எந்தெந்த துறைகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என விவாதிக்க கூடியது.

பின்னர், குழு கீழ்க்கண்ட துறைகளின் மதிப்பீடுகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்தது :

1. பள்ளிக் கல்வித் துறை
2. சுற்றுலா (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)
3. சமூக நலன் (மாற்றுத் திறனாளிகள் நலன் தவிர) (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை)
4. கால்நடை மற்றும் பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை)

இதைத் தொடர்ந்து குழு தேர்வு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளலாம் என முடிவு செய்தது.

2013 ஜூலை 3, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாள், புதன்கிழமை காலை 10.00 மணியளவில், தேனி மாவட்டம், அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. கு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலகப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, தேனி மாவட்டத்தில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பான இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

பின்னர் குழு, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, தேக்கடி சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 4, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், தேக்கடியில் உள்ள தனியார் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு. க.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலகப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, கொடைக்கானல் செல்லும் வழியில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பான இதர துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, கொடைக்கானல் சென்று இரவு தங்கியது.

2013 ஜூலை 5, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாள், வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணியளவில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, கொடைக்கானலில் புனித சேசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தை பார்வையிட்டது. அம்மையத்தில் வாரத்தில் ஐந்து நாட்களும் மதியம் உணவு வழங்கப்பட்டு வருகிறது என்று சத்துணவு அமைப்பாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

பின்னர் குழு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு திண்டுக்கலில் கலைந்தது.

2013 ஆகஸ்ட் 19, திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் இல்லக் குடியிருப்பு உபவசதி கட்டிடத்திலுள்ள குழு கூட்ட அறை எண்–1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். வீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அமு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, சென்னை பெசன்ட் நகரில் அமைந்துள்ள, சென்னை பெண்கள் குடிசைத் தொழில் மத்திய கூட்டுறவு சங்கத்தை பார்வையிட்டது. அச்சங்கம் 20.1.1949–இல் 32 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருவதாக கூட்டுறவு சங்கத்தில் தலைவர் தெரிவித்தார்.

குழு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு சென்னையில் இரவு தங்கியது.

2013 ஆகஸ்ட் 20, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர் இல்ல குடியிருப்பு உபவசதி கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1 இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு.அமு.பி. ஜமாலுதீன் .. செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் .. இணைச் செயலாளர்
திரு. க. பூபதி .. துணைச் செயலாளர்

குழு, திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கத்தை பார்வையிட்டது. அச்சங்கம் 23.10.1987 முதல் பதிவு செய்யப்பட்டு சங்கமாக செயல்பட்டுவருவதாக கூட்டுறவு சங்க தலைவர் தெரிவித்தார்.

குழு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரம் சென்று இரவு தங்கியது.

2013 ஆகஸ்டு 21, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட், திங்கள் 21 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.00 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்திலுள்ள தனியார் சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. க. பழனிச்சாமி
திரு. எஸ். ஆர். பார்த்திபன்
செல்வி கே. பாலபாரதி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, காஞ்சிபுரம் மாவட்டம் திம்மாவரம் அங்கான்வாடி மையத்தை பார்வையிட்டது. அம்மையத்தில் 6 வயது நிரம்பிய 119 குழந்தைகள் உள்ளனர் என குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் குழுவிடம் தெரிவித்தார்.

குழு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

பின்னர் குழு காஞ்சிபுரத்தில் கலைந்தது.

2013 செப்டம்பர் 19, வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில், விருதுநகர் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. கு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. க. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, விருதுநகர் மாவட்டம் மீசலூரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் குறித்து குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் குழுவிடம் தெரிவித்தார்.

குழு, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, அன்று இரவு குற்றாலத்திற்கு சென்று தங்கியது.

2013 செப்டம்பர் 20, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், குற்றாலத்திலுள்ள பொதுப்பணித்துறை அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. க. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருநெல்வேலியில், ஆளங்குளம் சமூக சேவை தத்து மையத்தை பார்வையிட்டது. அம்மையம் 25.3.2002 முதல் செயல்பட்டு வருகிறது என்றும் 263 குழந்தைகள் உள்ளனர் என அம்மையத்தின் இயக்குனர் குழுவிடம் தெரிவித்தார்.

குழு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு திருநெல்வேலியில் கலைந்தது.

2013 நவம்பர் 5, செவ்வாய்க்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில், இராமேஸ்வரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதியில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு.குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலகுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இராமநாதபுரம் அன்னை சத்ய அம்மையார் அரசு குழந்தைகள் காப்பகத்தை பார்வையிட்டது. அக்காப்பகம் 1984 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என மாவட்ட சமூகநல அலுவலர் குழுவிற்கு தெரிவித்தார்.

குழு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கை சென்று இரவு தங்கியது.

2013 நவம்பர் 6, புதன்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2013 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள், புதன்கிழமை காலை 9.30 மணியளவில், சிவகங்கை வேலுநாச்சியார் அரசு விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. சு. குணசேகரன்
திரு. ஆர். சாமி
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
செல்வி கே. பாலபாரதி
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, சிவகங்கை மாவட்டத்தில் அன்னை சத்ய அரசு குழந்தைகள் காப்பகத்தை பார்வையிட்டது. அக்காபகத்தில் 192 குழந்தைகள் உள்ளனர் என கண்காணிப்பாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

குழு, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு சிவகங்கையில் கலைந்தது.

2014 மே 30, வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10.15 மணியளவில் சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு உபவசதிக் கட்டிடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1ல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாகந்தரம்

உறுப்பினர்கள்

திருமதி. த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட" சமூகநலம் " மதிப்பீடு தொடர்பாக சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அரசு செயலாளர், சமூகநல ஆணையர், சமூக பாதுகாப்பு இயக்குநர் மற்றும் இதர துறை அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

2014, ஜூன் 26 வியாழக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் வேலூர் அரசினர் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. ஆர். கீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. க. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, வேலூர் மாவட்டத்தில் இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள பிற துறைகளின் பணிகளை பார்வையிட்டது.

குழு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருவண்ணாமலையில் இரவு தங்கியது.

2014, ஜூன் 27 வெள்ளிக்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2014 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் திருவண்ணாமலை அரசினர் விருந்தினர் மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்திருந்தனர்:–

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

திரு. செ. காமராஜ்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. வ. நீலகண்டன்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. இரா. பழனிசாமி . . துணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, திருவண்ணாலை மாவட்டத்தில் ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடங்கிய ஒருகிணைந்த வளாகத்தை பார்வையிட்டது. அம்மையத்தில் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கியுள்ளனர் என்கிற தகவலை மாவட்ட சமூகநல அலுவலர் குழுவிற்கு தெரிவித்தார்.

குழு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, திருவண்ணாமலையில் கலைந்தது.

2014, ஆகஸ்ட் 4 திங்கட்கிழமை

2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சென்னை–9, சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்திலுள்ள குழுக் கூட்ட அறையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்.

தலைவர்

திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்


திருமதி த. இந்திராகாந்தி
திரு. செ. காமராஜ்
டாக்டர். க. கிருஷ்ணசாமி
திரு.ஆர். சாமி
திரு. ஆர். சீனிவாசன்
திரு. தங்கதமிழ்செல்வன்
திரு. ப. தன்சிங்
திரு. ச. பழனிச்சாமி
திரு. எஸ்.ஆர். பார்த்திபன்

செயலகம்


திரு. அ.மு.பி.ஜமாலுதீன் . . செயலாளர்
திரு. இரா. பழனிசாமி . . இணைச் செயலாளர்
திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

குழு, " சமூகநலம் " குறித்த வரைவு அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. வரைவு அறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது. குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அறிக்கையை குழுவின் சார்பில் கையொப்பமிட்டு பேரவைக்கு அளிக்க குழுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்.

இணைப்பு - 1


தலைமை இயக்குநர்
இணை இயக்குநர் (நிர்வாகம்)
துணை இயக்குநர் (மகளிர் நலம்)
துணை இயக்குநர் (குழந்தை நலம்)
துணை இயக்குநர் (சிறப்பு திட்டம்)
இணை இயக்குநர் (சத்துணவுத் திட்டம்)
நிதி கட்டுப்பாட்டாளர்
நிர்வாக அலுவலர்
உதவி இயக்குநர் (குழந்தை நலம்)
உதவி இயக்குநர் (சிறப்பு திட்டம்)
முதன்மைக் கணக்கு அலுவலர்
உதவி இயக்குநர் (மகளிர் நலம்)
உதவி இயக்குநர் (மாநாய்வு)
உதவி இயக்குநர் (சத்துணவுத் திட்டம்)
கணக்கு அலுவலர் (சத்துணவுத் திட்டம்)
கணக்கு அலுவலர் (மாவட்டம்)
கணக்கு அலுவலர் (நிர்வாகம்)
உதவி கணக்கு அலுவலர் (தொகுதி)
பிரிவுகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்




TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

இணைப்பு - 3

சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநர் அலுவலகம்

நிர்வாக அமைப்பு குறித்த விளக்கப்படம்



பரிந்துரைகளின் சுருக்கம்

1. 2013–2014இல் தாலிக்கு தங்கம் வழங்கும் சிறப்புத் திட்டத்தின் மூலம் 1,37,993 விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டு, 11,123 மனுக்கள் மட்டும் நிலுவையில் உள்ளதையும் இந்த நிதியாண்டில் 25,000 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதையும் குழு அறிகிறது. இவ்வாறு நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை ஆய்வு செய்து அனைத்து பயனாளிகளும் பயன் பெறும் வகையில் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.13)

2 .திருமண நிதி உதவித் திட்டங்கள்மூலம் உதவி பெறுவதற்குரிய விண்ணப்பங்களை உரிய காலத்திற்குள் துறையிடம் சமர்ப்பிக்கவும் அதனுடைய வழிவகை மற்றும் விதிமுறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த துறை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.20)

3. ஒரு குடும்பத்தில் ஒரு பயனாளிக்குத்தான் நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்று திட்டத்தில் உள்ளது. இதனால் தகுதி இருந்தாலும் ஒரே குடும்பத்தில் இரண்டு பயனாளிக்கு வழங்க முடியாது. இரண்டாவது பெண் பட்டப்படிப்பு முடித்திருந்தால் அவர்களுக்கும் நிதி உதவி வழங்கலாம் என்று அரசுக்கு துறை பரிந்துரை செய்துள்ளதை குழுவும் பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.26)

4. துறை விண்ணப்பங்களை பெறும்போது சரியாகப் பூர்த்தி செய்யாத, தகுதியில்லாத விண்ணப்பங்களை ஆரம்பத்திலேயே ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொண்டால் அது சரியாக இருக்கும். மேலும், காலதாமதமின்றி தேவையான சான்றுகள் மற்றும் அனைத்து விவரங்களும் கேட்டுப் பெற்று நிதி உதவி கிடைக்க உரிய நடவடிகை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.33)

5. அரசினுடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ரூ.72,000/– என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.39)

6. 2013–2014இல் கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் சொந்த கட்டிடங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்படுவதற்கு துறை விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.46)

7. தாம்பரம் அரசு சேவை இல்ல வளாகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாணவிகளுக்கான தூயிர்க்கூடம் அமைக்கும் பணியை துரிதப்படுத்தி குறிப்பிட்ட 11 மாத காலத்திற்குள் நிறைவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், இதுகுறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.49)

8. 2014–2015 ஆம் நிதியாண்டில் பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான விடுதிகள் கூடுதலாக துவங்க அறிவிப்பு வெளியிட்ட நிலையில் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் துவங்குவதற்கு முனைப்பாக நடவடிக்கையினை துறை மேற்கொண்டு விடுதிகளை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.58)**

9. தேனி மாவட்டத்தில் மேற்காணும் இரு கருத்துருக்களும் ஏற்கப்படாத நிலையில், புதிதாக கருத்துருக்களைப் பெற்று பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்க ஆணை பெற்று துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.62)**

10. திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக அரசு பணிபுரியும் மகளிர் விடுதிக்கான இடத்தினை தேர்வு செய்து சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.65)**

11. இராமநாதபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கென மகளிர் விடுதி அமைக்க மாவட்ட சமூக நல அலுவலரிடம் கருத்துரு பெற்று, நடப்பாண்டில் ஆணை பெற்று கட்டிடப் பணியை துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.68)**

12. 2013–2014 இல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 3 இடங்களில் புதிய அரசு பணிபுரியும் விடுதிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.71)**

13. 2013–2014 இல் திருவள்ளூர் மாவட்டத்தில் புதிய அரசு மகளிர் பணிபுரியும் விடுதி அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளதை குழு அறிகிறது. இதற்கான இடத்தை தெரிவு செய்து உடனடியாக விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.75)**

14. தொழிற் பயிற்சியில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பயிற்சி மிகமிக முக்கியமானதாகும். நாட்டின் ஏற்றுமதிக்கு மிக முக்கியமானதொரு தொழிற் பயிற்சியாகும். கிராமத்தில் இருப்பவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் அனைத்திலும் இப்பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்றும், 54,000 உறுப்பினர்களும் முறையான பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் துறை செயல்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.85)**

15. பெண்களுக்கு சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் அனைத்து மாவட்டங்களிலும் உரிய காலத்திற்குள் வழங்குவதை துறை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.116)**

16. தமிழகத்தில் **2011** முதல் **2014** வரை மாநில மகளிர் ஆணையம் மூலம் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய நிலுவையிலுள்ள **3563** மனுக்களின் மீது ஆய்வு மேற்கொண்டு விரைவாக துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.119)**

17. திருநங்கைகளை தொழிற் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்தால், துறை மூலம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தையல் இயந்திரங்களை வைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான சீருடைகளை தைத்துக் கொடுப்பதற்கு உதவிகரமாக இருக்கும். சமூக நலத் துறையால் செயல்படுத்தப்படும் எல்லா திட்டங்களிலும் இவர்களை சேர்த்துக்கொள்ள துறை முனைப்பாக செயல்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.139)

18. உச்சநீதி மன்றத்தின் மூலம் மூன்றாம் பாலினமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதற்கு முனைப்போடு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.144)

19. திருநங்கைகள் வாழும் பகுதிகளுக்கு ஏற்ப சமுதாயத்தில் உள்ள சூழ்நிலையைக் கருதி திருநங்கைகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் உள்ள வீடு வழங்கும் பல திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தின் மூலம் இவர்களுக்கு வீடுகள் கட்டித் தர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.147)

20. தமிழ்நாட்டில் இயங்கிவரும் பெண்கள் பாதுகாப்பு இல்லங்களின் செயல்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.154)

21. வரதட்சணை கொடுப்பதும் தவறு, வாங்குவதும் தவறு என்று மணமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்றும், மேலும் வரதட்சணை தடுப்புச் சட்டம் குறித்து சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.(பத்தி எண்.159)

22. தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் வளரும் 4 ஆயிரம் குழந்தைகளும் படித்து முடித்த பிறகு அவர்களுக்கு அரசு வேலை கிடைக்க வாய்ப்பிருந்தால், அவர்களுக்கு திருமணம் முடிக்கும்போது கலபமாக இருக்கும். இதனை அரசின் பார்வைக்கு எடுத்துசென்றால், அந்தக் குழந்தைகளுடைய எதிர்காலம் நல்ல முறையில் அமையும் என்று குழு கருதுகிறது. தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகள் படித்து முடித்த பிறகு அவர்களுக்கு அரசு வேலை கிடைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.170)

23. தமிழ்நாட்டின் பெண் சிசுக் கொலை நடைபெறுவதை தடுக்க ஆய்வுகள் மேற்கொண்டு இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதை தடுக்க சிறப்புத் திட்டங்கள் உருவாக்க துறை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.173)

24. 2013–2014 இல் பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற 16,885 விண்ணப்பங்கள் வரப்பெற்று நிலுவையில் உள்ளதை ஆய்வு செய்து உடனடியாக பயனாளிகளுக்கு நிதி உதவியை வழங்கிட துறை துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.178)

25. சேவை இல்லங்கள் நடத்துவதற்கு தனியார் அனுமதி கேட்கும் நேர்வுகளில் சேவை இல்லங்கள் அனைத்திற்கும் சட்டத்திற்குட்பட்டு விதிமுறைகளை கடினமாக வகுத்து இதன்கீழ் தனியார் சேவை இல்லங்களை துவக்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.190)

26. திருமண உதவித்திட்டம் பெற குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/– ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், ஆதரவற்ற குழந்தைகளின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.24,000/– என்று நிர்ணயிக்கப்பட்டள்ளதை ரூ. 72,000/– ஆக உயர்த்த துறை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.(பத்தி எண்.193)

27. இதுபோன்று 18 வயது கடந்த பெண்கள் சேவை இல்லங்களில் தங்குவதில்லை, அவர்கள் சட்டப்பூர்வமான பாதுகாவலர்களிடம் சென்று விடுவதையும் குழு அறிந்தது. எனவே, இது குறித்த விவரங்களையும் காரணங்களையும் சேகரித்து ஆய்வு செய்யவும் மங்களமாலை திட்டம் குறித்து பயனாளிகள் மற்றும் சட்டபூர்வ பாதுகாவலர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த உடனடியாக துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.200)

28. ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்துகொள்ள உதவுவதற்காக "மங்களமாலைத் திட்டம்" கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு யாருமே இல்லாததால்தான் சேவை இல்லத்திற்கு வருகிறார்கள். சமூக விரோதிகளால் இவர்களுக்கு பாதிப்பு வரக்கூடாது என்றுதான் இந்தத் திட்டம் அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது. துறைத் தலைவர்கள் தங்களுக்கு கீழேயுள்ள அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்கி மங்களமாலை திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.203)

29. குழந்தைகள் காப்பகங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு சீரமைக்க ஆண்டுதோறும் சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறையுடன் இணைந்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.208)

30. தமிழ்நாட்டில் குழந்தை திருமணத் தடை சட்டம் குறித்த விழிப்புணர்வு விளம்பரங்கள் திருமண முகூர்த்த நாட்களுக்கு முந்தைய நாட்களில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த திரையரங்குகளில் காண்பிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.(பத்தி எண்.212)

31. குழந்தை திருமண வழக்குப் பதிவு செய்தல், அலுவலர்களுக்கு பரிசு கொடுத்தல் இவை மட்டும் போதாது. குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்றால், முன்பே விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். துறையின் நடவடிக்கையினால் 75 முதல் 90 சதவீதம் மக்கள் விழிப்புணர்வு பெற்று விடுகிறார்கள். மீதமுள்ள 10 சதவீத மக்கள் விவரம் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் இத்தகைய திருமணங்களை நடத்தி முடிக்கும்போது தண்டனைக்கு ஆளாகிறார்கள். எனவே 100 சதவீதத்தினருக்கும் குழந்தைத் திருமணம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துறை முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.219)

32. தமிழகத்தில் குழந்தைத் திருமணத்தைத் தடுத்து பெண் குழந்தைகளின் கல்வி நிலையை உயர்த்தவும், உடல் நிலை குறித்து விளக்கவும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தனியாக இதற்கென அலுவலர் ஒருவரை மாவட்டந்தோறும் நியமனம் செய்யலாம் என குழு கருதுகிறது. எனவே, இதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.223)

33. உணவுப் பொருள்கள் அட்டவணையில் குறிப்பிட்ட நாளன்று குறிப்பிட்ட அளவு தரமான உணவு வழங்கப்படாத நேர்வுகளில் அந்தந்த மையங்களிலிருந்து எந்த அலுவலருக்கு புகார் செய்யலாம் என்றும் அவருடைய தொலைபேசி எண் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டணமில்லா தொலைபேசி குறிப்பிட்டு விரைவில் போர்டு அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.230)

34. குழந்தைகளுக்கு பள்ளி சத்துணவு மையங்களில் முட்டை வழங்கப்படும் நாட்களில் முட்டையின் எடையினை நிர்ணயிக்கப்பட்ட அளவில் உள்ளதா என்பதை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டுமென்றும், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.238)

35. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாலும், ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யவும் புதிய வகை கலவை சாதத்தை ஒவ்வொரு மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் படிப்படியாக விரிவுபடுத்திட துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.242)**

36. சத்துணவு மையங்களில் முட்டை, பழங்கள், காய்கறிகள், உருளைக்கிழங்கு போன்ற பொருட்களில் தரமான நல்ல பொருட்களை வாங்கி சத்துணவில் குழந்தைகளுக்கு தரமாக வழங்கப்படுகிறதா என்பதை கண்காணித்து உரிய நடவடிக்கையையும், தவறு செய்யும் பணியாளர்மீது கடும் நடவடிக்கையையும் துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.249)

37. எல்லா சத்துணவுக் கூடங்களுக்கும் கலவை இயந்திரம், கிரைண்டர் மற்றும் மிக்சி கொடுக்கப்படுகிறது. சத்துணவுக் கூடங்களில் மின்சார வசதி இல்லையென்றால், உபகரணங்கள் கொடுப்பதில் பயன் இல்லாமல் போகும் என்பதால் அனைத்து சத்துணவுக் கூடங்களிலும் மின்சாரம் கிடைக்க துறை துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.256)**

38. 20,489 கட்டடங்களுக்கு நடைபெற்றுவரும் கட்டடப் பணிகளை நிறைவு செய்யவும், **7,000** சத்துணவு மையங்களுக்கு மட்டுமே காஸ் சிலிண்டர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து மையங்களுக்கும் காஸ் சிலிண்டர் வசதி செய்துதரவும் துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.262)**

39. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சிக்குட்பட்ட காப்பிக்காடு கடற்கரை, தனுஷ்கோடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் சமையற்கூடத்திற்கு எரிவாயு இணைப்பு வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.265)

40. ஒவ்வொரு சத்துணவு மையத்தையும் ஒயிட் வாஷ் செய்வதற்கு நான்கு வருடங்களுக்கு ஒரு முறை என்று கால இடைவெளி இருப்பதை குறைத்து வருடத்திற்கு ஒரு முறை ஒயிட் வாஷ் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.270)**

41. விருதுநகர் மாவட்டத்தில் சமூக நல அலுவலகத்தில் இரவுக் காவலர், தொழிற் கூட்டுறவு மேற்பார்வையாளர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 8 குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை–2 பணியிடங்களில் 7 பணியிடங்களையும் நிரப்ப துறை விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு மேலே தெரிவிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்பிட வேண்டும் எனவும் இதுகுறித்து அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.277)**

42. இராமநாதபுரம் மாவட்டத்தில் சமூக நலத் துறை அலுவலகத்தில் காலியாக உள்ள **3** குழந்தை வளர்ச்சித் திட்ட மேற்பார்வையாளர் நிலை–1 மற்றும் நிலை–2, அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் போன்ற பணியிடங்களை நிரப்பிட விரைவான நடவடிக்கையை துறை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. **(பத்தி எண்.280)**

43. திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 5 வகையான திருமண உதவித் திட்டங்கள், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மற்றும் திருநங்கைகள் நல வாரியம் ஆகிய பிரிவுகளில் உள்ள பணிகளை மேற்கொள்ள கூடுதலாக புதியதாக இரண்டு உதவியாளர்கள் பணியிடங்களைத் தோற்றுவித்து பணி நியமனம் செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.283)

44. சிவகங்கை மாவட்டம், மலம்பட்டி மேல்நிலைப்பள்ளி சத்துணவு மையத்திற்கென ஒரு சத்துணவுப் பணியாளர் உடனடியாக நியமனம் செய்து குழுவிற்கு இது குறித்த அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.286)

45. 1,130 அங்கன்வாடி மையங்கள் புதிதாக அமைக்க கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதால் அரசின் விதிகளுக்குட்பட்டு ஆய்வு மேற்கொண்டு குழந்தைகள் நலன் கருதி புதிதாக எங்கெங்கு அங்கன்வாடி மையங்கள் அமைக்க வழிவகை இருப்பின் அங்கெல்லாம் புதிய மையங்கள் விரைவில் துவக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.300)

46. அங்கன்வாடி மையங்களில் ஏற்கெனவே உள்ள எடை பார்க்கும் கருவிகளை சீரமைக்கவும், இனிவரும் காலங்களில் தரமான எடை பார்க்கும் கருவிகளை வாங்கி வழங்கவும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.307)

47. தேனி மாவட்டத்தில் உள்ள எரிவாயு இணைப்பு கொடுக்கப்படாத 404 அங்கன்வாடி மையங்களுக்கு நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு நடப்பாண்டில் வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.310)

48. அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் 2013–2014இல் வழங்கப்பட வேண்டிய முன்பருவக் கல்வி உபகரணங்களை வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதுகுறித்து அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.315)

49. தமிழ்நாட்டில் அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்கும் வேளையில் அங்கன்வாடி மையக் கட்டடம் கிராமத்தில் கட்டுவதற்கு ரூ.3.9 இலட்சமும், நகர்ப்புறத்தில் ரூ.4.00 இலட்சமும் நிதி ஒதுக்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தின் சூழ்நிலைக்கேற்ப இதற்கான செலவினத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.318)

50. அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு இரண்டு செட் வண்ண சீருடைகள் 10 மாவட்டங்களுக்கு வழங்கி வருவதை மேலும் மற்ற மாவட்டங்களுக்கும் வழங்க விரிவுபடுத்தும் கருத்துருமீது துறை விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.324)

51. அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் குழந்தைகளிடம் ஊட்டச்சத்து பற்றாக்குறை சதவிகிதம் குறைவாக உள்ளதால் இதனை நிவர்த்தி செய்ய துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை சதவிகிதம் குறைவாக உள்ள பிற மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.331)

52. தமிழ்நாட்டில் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க R.O. பிளாண்ட் அமைத்துத்தர துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.334)

53. விருதுநகர் மாவட்டத்தில் 956 அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதாகவும், இங்கு அனைத்து மையங்களுக்கும் மின் இணைப்புகள் ரூ.2,91,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து தொன்னூற்று ஓராயிரம் மட்டும்) செலவில் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 308 மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி மின் இணைப்புக்கள் வழங்கிட துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.337)

54. விருதுநகர் மாவட்டம், மீசலூரில் அங்கன்வாடி மையத்தின் பின்புறம் உள்ள 20 அடி தூரத்தில் கழிவுநீர்க் கால்வாய்மூலம் குழந்தைகளுக்கு தொற்றுநோய் பரவுவதைத் தவிர்க்க மாவட்ட நிர்வாகத்தின்மூலம் நடவடிக்கை எடுத்து கழிவுநீர் செல்ல கழிவுநீர் வடிகால் அமைக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.340)

55. சமூகப்பாதுகாப்பு துறையின் கீழ் இயங்கும் 9 குழந்தை நல இல்லம், கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களில் கண்காணிப்பாளர் குடியிருப்பு மற்றும் செயற்பணியாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகளை விரைவுபடுத்தி பணிகளை நிறைவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துறை செய்கிறது. (பத்தி எண்.361)

56. பள்ளிக் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்க சம்பந்தப்பட்ட பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.364)

57. சிவகங்கை மாவட்ட குழந்தைகள் நலக் குழு காரைக்குடியில் இயங்குவதற்குப் பதிலாக சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இயங்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வெண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.367)

58. ஒழுக்க நெறி பிறழ்தல் தடுப்புச் சட்டம் 1956 இன்கீழ் ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளான மகளிருக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மகளிர் காப்பகம் துவக்க துறை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.370)

59. 2010 முதல் 2013 வரை பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007 இன்கீழ் பெறப்பட்ட மனுக்களில் நிலுவையிலுள்ள 27 விண்ணப்பங்கள்மீது தீர்வுகாண துறை துரித நடவடிக்கை எடுத்து நிறைவடைந்தவுடன் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.373)

60. மகளிர், முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் துவங்கும்போது கண்காணிக்க கண்காணிப்பு கேமிராக்கள் அமைக்க வேண்டும் என்றும், மேலும் அங்குள்ள குழந்தைகள் மற்றும் மகளிர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முனைப்புடன் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.376)

****

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

04.06.2013	சென்னை
03.07.2013	தேனி
04.07.2013	திண்டுக்கல்
05.07.2013	திண்டுக்கல்
19.08.2013	சென்னை
20.08.2013	திருவள்ளூர்
21.08.2013	காஞ்சிபுரம்
19.09.2013	விருதுநகர்
20.09.2013	திருநெல்வேலி
05.11.2013	இராமநாதபுரம்
06.11.2013	சிவகங்கை
30.05.2014	சென்னை
26.06.2014	வேலூர்
27.06.2014	திருவண்ணாமலை
04.08.2014	சென்னை

- - - - -